www.tamilarangam.net

# நிர்மாணம்

NIRMAANAM

கல் 01
கட்டுமானம் 01
ஐப்பசி 2004

இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு அரசியல் ஏடு




வாருங்கள்...!
மீண்டும் ஒருமுறை
அடிக்கல் நட்டு
அத்திவாரமிட்டு
ஆரம்பிப்போம்...!
இது...
செயல் வீரர்களுக்கான
காலம்...!


**இது மாதம் ஒரு முறை உங்கள் கைகளுக்கு வரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சமாதானத்தின் படிக்கற்களாய் கொலைகளும் பிணங்களும்



முழு உலகத்துக்குமே சமாதானம் போதிக்கும் தேசமாம் இது. உலக சமாதானப் பரிசாம் நோபல் பரிசு இங்கிருந்து தான் வழங்கப் படுகின்றதாம். பலஸ்தீனத்தை தன் சமாதான பரிசோதனைக் கூடமாக்கி அங்கு எல்லாவற்றையும் கவிழ்த்துக் கொட்டிவிட்டு அங்கிருந்து அங்கிருந்த மக்களை அம்போ என விட்டு விட்டு இவர்கள் வெளியேறினார்கள். இவர்களின் சமாதான பரிசோதனை நடந்து முடிந்ததன் பின்னால் பலஸ்தீன மக்கள், எலிகள் சாவது போல் அதிகமாக இன்று செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் பின்னர் இவர்களின் கையில் அகப்பட்டது இலங்கை. இன்று இங்கு தமிழ் மக்கள் நாய்கள் போல் தெருவில் சாகிறார்கள். இவர்களோ கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள். பரிசோதனை பிழைத்தால் 'பை....பை' காட்டிவிட்டு கப்பல் ஏறுவதுதான் இவர்களின் வழமை.

தமிழ் மக்கள் யாருக்குக் கீழ் வாழ வேண்டும் என்னும் தீர்ப்பு இன்று இவர்களுடையது. தமிழரின் ஆட்சிக் கொடியாய் வாயைப் பிளந்தபடி பிணம் தின்னும் மிருகம்தான் இருக்க வேண்டும் என்பது இவர்கள் தீர்ப்பென்றால், அவர்களின் கொடி மண்டையோட்டுடன்தான் இருக்க வேண்டும். இதுதான் ஜனநாயகத்துக்காக ஏங்கும் தமிழ் மக்களின் தீர்ப்பு. இவர்களும் ஒருவிதத்தில் உணர்சியற்ற பிணங்கள்தான். இவர்களின் வாசல் படிகளில் எமது சக தோழர்களின பிணங்களை வைத்து நியாயம் கேட்பதில் பயனென்ன? எங்களைப் பாதுகாக்கவா இவர்கள் வந்தார்கள்? இவர்களை உலகத்தின் சமாதானப் புறாக்களாக காண்பித்து அந்த புறாக்களின் செட்டைக்குள் மறைந்திருந்தல்லவா இந்த வல்லூறுகள் இக்கொலைகளை எல்லாம் செய்கின்கின்றன. எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கான காலம் வந்து விட்டது. அதுவே எமது இன்றைய உடனடி அரசியல் பணி.

பார்க்க பக்கம் 44

## ராஜினி



ராஜினி தமிழப் பாசிசப் புலிகளால் 1989ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன.

இன்றுவரை அவரைக் கொன்றதற்கான ஒரு சிறிய காரணத்தைக் கூடப் பாசிசப் புலிகளால் சொல்ல முடியவில்லை. அவர்களால் சொலலவும் முடியாது. இவருடைய கொலையானது தற்செயலானதல்ல. மிகத் தெளிவாகத் திட்டமிடப்பட்டு அன்ரன் பாலசிங்கம் உட்பட பல புலி ஆதரவு தமிழ் புத்திஜீவிகளின் அவசரத் தூண்டுதலினாலும் அவசியத்தினாலும் மேற்கொள்ளப்பட்டது. இது, அவர் நேசித்த பல்கலைக்கழக மாணவர்களாலேயே உளவு பார்க்கப்பட்டு திட்டமிடப்பட்டு செய்யப் பட்ட கேவலமான படுகொலையாகும். எந்தக் குரலை அடைப்பதற்காக அந்தக் கொலை செய்யப் பட்டதோ அந்தக்குரல் இன்றும் ஓங்கி ஒலித்தபடியே இருக்கிறது...! முட்டாள்கள் தோற்றுப் போயினர்.

கடைசிப் பக்கம்....

## செல்வி



செல்வி தமிழ்ப் பாசிசப் புலிகளினால் 1991 ஆகஸ்ட் 30ம் திகதி கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட கவிஞையும், பெண்ணிய வாதியும் யாழ் பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறையின் இறுதியாண்டு மாணவியுமாவார். செல்வநிதி தியாகராஜாவின் 13வது ஆண்டு இது,

1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ந் திகதி, சிதம்பரியின் கோரிக்கையின் பேரில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நேரடி உத்தரவின் பிரகாரம், பொட்டு அம்மானின் உளவுப் படைப் பிரிவு நபர்களால் செல்வி கைது செய்யப் பட்டார். அவர்களின் மூன்று மாதகால நீடித்த விசாரணைக்குப் பின்பு செல்வி யாழ்ப்பாணத்தில் தனியாகச் சிறை வைக்கப்பட்டார். பின்னர் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டே கொல்லப்பட்டார். 1991ம் ஆண்டின் இறுதியில் இருந்து செல்வியின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது.......

www.tamilarangam.net


# நிர்மாணம்

ஐப்பசி 2004 கல் 01 - கட்டுமானம் 01 NIRMAANAM


## உள்ளே


ஏன் இது ? ........................................ 02

அகங்காரம் பேணுவோம் ....................... 03

வங்கிக் கொள்ளை முதல்
வாக்குக் கொள்ளை வரை .................. 04

உலகமயமாதல் ............................... 11

இவர்கள் ஏன், அவர்களின்
பிட்டத்தையே நக்குகிறார்கள் .............. 12

அரசியல் சினிமா: .......................... 17
பரனைற் 9/11
புத்தரின் பெயரால்

முஸ்லீம்களை அணிவகுக்கச் செய்யும்
தமிழ் அரசியலின் பேரினவாதம் ............ 24

கிழக்கைக் குதறும் வடக்கு: ............ 31
கருணாவின் கிளர்ச்சியும்
கிழக்கின் தனித்துவமும், நாமும்

பாசிசத்துக்கு எதிரான மக்கள் எழுச்சியும்
மக்களுக்கான தாபனங்களும் ................ 36

பாசிசத்தின் ஊற்றுக் கண்கள்:
கட்டுரைத் தொடர் - 01
புலிப் பாசிசத்திற்கு சவால் விடுதல் ....... 40

சமாதானக் கொலைகள் விழும் தேசம்:
துரோகி ஒழிப்பு யுத்தத்திற்கு
முகம் கொடுத்தல் ................................ 44


உங்கள் விமர்சனங்கள், மற்றும் ஆக்கங்களை கீழ்காணும் மின் அஞ்சலூடாக அனுப்பிவையுங்கள். வெறுமனே புலிகளைத் திட்டித் தீர்க்கும் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. புலிப் பாசிசத்துக்கு எதிராக உறுதியான அரசியலைச் செய்வதற்கு வழிகாட்டும் எழுத்துக்களாக அவை இருக்கட்டும்.


*nirmaanam@yahoo.com*
*tamilnirmaanam.org*





04 வாக்குக் கொள்ளைக்கு வழங்கப்பட்ட விருது




11 இவர்களும், அவர்களும் அவர்களின் பிட்டமும்




17 புத்தக் காய்சலும் புத்தக் காய்சலும்



24 வடக்கும் கிழக்கும் எமக்கும் சொந்தம்



31 கிழக்கின் திமிறல் எதுவரை போகும்

**சஞ்சிகைக்கான ஆதரவு**

| | | |
|---|---|---|
| ஐரோப்பா | - 1 | இயூரோ |
| வட அமெரிக்கா | - 2 | டொலர் |
| அவுஸ்திரேலியா | - 2 | டொலர் |

பக்கம் 49

இலங்கையில் இச்சஞ்சிகை இலவசமாகவே விநியோகிக்கப்படும் என்பதை கவனிக்க




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏன் இது?



**நாம் எத்தனை முறை விழுந்தோம் என்பது முக்கியமல்ல, எந்தெந்த வழிகளில் வீழ்த்தப்பட்டோம் என்பதும் முக்கியமல்ல. எவ்வளவு வேகமாக அடிபட வீழ்ந்தோம் என்பதும் முக்கியமல்ல, எவ்வளவு சீக்கிரம் எழுந்து நிற்கிறோம் என்பதே முக்கியமானது. அதைப்பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டிய காலம் எப்போதோ வந்து விட்டது. சிந்திக்காமல் இருந்தது எம் தவறு. எதிரியின் தவறல்ல.**

இன்று இந்த சஞ்சிகை எதற்காக?

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும். என்பது ஓர் அழகான தமிழ்ப் பழமொழி. கீரைக்கடை என்பது மிகச்சிறிய வியாபாரம். கிரையை எங்கே வாங்கினால் என்ன, அதில் பெரிய வித்தியாசமில்லை. கீரை வாங்குவது மிகச்சிறிய விடயம் அதற்கே ஒரு எதிர்க்கடை வேண்டும் எனத் தமிழ் சொல்கிறபோது, தமிழ் சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசியல் போன்ற பாரிய விடயத்தில் ஒரே கருத்து, ஓரே இயக்கம். ஒரே வழிமுறை, ஒரே தலைமை என பேய்க்கூத்தாடிக் கொண்டிருக்கிறது இலங்கைத் தமிழ்ச் சமூகம். எதற்கும் ஒரு மாற்று தேவை, மாற்றுக் கருத்துத் தேவை, மாற்று அணுகுமுறை தேவை என்னும் ஆழமான விடயத்தை மிக இலகு படுத்திச் சொல்கிறது அழகு தமிழில் இப்பழமொழி. மாற்று என்பது மட்டுமல்ல எந்த விடயமுமே ஏதோ ஒரு பரிசோதிப்புக்கு உள்ளாகிக்கொண்டே (Check and Balance), இருக்க வேண்டும் என்னும் விடயமும் இப்பழமொழிக்குள் அடக்கம்.

இச்சஞ்சிகை கீரைக்கடை வைப்பதற்கல்ல. பாசிசப்படைக்கு எதிர்ப்படை கட்டுவதற்கு. தமிழ் பாசிசம் தமிழ் சமுகத்திற்குப் பூட்ட முனையும் விலங்கை உடைத்தெறியாதிருப்பின் தமிழ் சமூகம் விழுந்துவிட இருக்கும் அதல பாதாளம் பற்றி எச்சரிப்பதற்கே இது. பாசிசம் தானாக வீழ்ந்தது மில்லை. அது அழியாமல் வாழ்ந்ததுமில்லை என்பதை அறைகூவிச் சொல்வதற்கே இது.சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுவதை வாழ்க்கைப் பணியாக எடுத்துக் கொண்டது போல், தமிழ்ப் பாசிசத்தின் அத்திவாரத்தை உடைக்க வாழ்க்கையை அர்ப்பணிப்பதும் அரசியல் கடைமையே. பாசிசத்தின் கரங்கள் எம்மை வெட்டிச் சரிக்கும் போது, புதிது புதிதாக துளிர்க்கும் ஒவ்வொரு அரும்பும் இன்னும் வீரியமாகவே முளைவிடும் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். உணர்த்தியாக வேண்டும். அதற்காகவே இது.

நாம் பலமுறை வீழ்ந்து விட்டோம், பலமாக அடிபட வீழ்ந்து விட்டோம் பல வழிகளிலும் வீழ்த்தப்பட்டு விட்டோம் என்பதெல்லாம் உண்மைதான். அதற்கென்ன இப்போ? விழுவதும், எழுவதும் மீளத் தடுமாறி விழுவதும், சுதாகரித்துக் கொண்டு சமநிலையைப் பேணுவதும் சாதாரணமான ஒரு வாழ்க்கையிலேயே இயல்பானதுதானே. போராட்டத்தில் அதெல்லாம் இல்லாமல் எப்படி..? நாம் எத்தனை முறை விழுந்தோம் என்பது முக்கியமல்ல.! எந்தெந்த வழிகளில் வீழ்த்தப்பட்டோம் என்பதும் முக்கியமல்ல...! எவ்வளவு வேகமாக அடிபட வீழ்ந்தோம் என்பதும் முக்கியமல்ல..! எவ்வளவு சீக்கிரம் எழுந்து நிற்கிறோம் என்பதே முக்கியமானது. அதைப்பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டிய காலம் எப்போதோ வந்து விட்டது. சிந்திக்காமல் இருந்தது எம் தவறு. எதிரியின் தவறல்ல. அதைப்பற்றிக் கூறவே இது.

எதிரி பலமானவன். எதிரி பயங்கரமானவன். பல களம் கண்டவன். படையணிகள் பல கொண்டவன் என்பதெல்லாம் நிஜமே. இன்று எமக்கென்றோர் அணியில்லை. அண்டிப் பிழைகக நம்பிக்கையான சக்தியில்லை. நம்பிக் கை கோர்த்துவர நம்போல் நாதியற்றவர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர். மீண்டும், மீண்டும் ஏக்கமும், எதிர்பார்ப்புக்களுமே எம்மிடம் எஞ்சியுள்ளது போல் உணர்கிறோம். எதிர்பார்ப்பு என்பது ஒரு மூலோபாயமல்ல, எதிர்பார்ப்பு என்பது ஒரு வேலைத்திட்டமுமல்ல. எதிர்பார்ப்பு என்பது இயலாமையின் ஒருவித வெளிப்பாடே......! ★

www.tamilarangam.net



# அகங்காரம் பேணுவோம்

அரசியலை அமிர்தமாகவும் கட்சியையே சொர்க்கமாகவும் எண்ணி செயல்படுவோரும் உளர். ஆனால் அரசியலும், அரசியல் கட்சிச் செயற்பாடுகளும் சாக்கடையை ஒத்தவை என்றே மீண்டும் மீண்டும் அதில் ஈடுபடுபவர்களால் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலக நாடுகளில் நிலமை எவ்வாறாயினும் இலங்கையைப் பொறுத்தவரை அது வெறும் சாக்கடை என்னும் நிலமையையும் தாண்டி மிகவும் உயிர் ஆபத்து நிறைந்ததாகவும் மாறியுள்ளது. சாதாரண மக்களிடமும் அரசியலில் ஈடுபடுபவர்களிடமும் பாரிய அச்சத்தை விளைவிக்கும் ஒரு வன்முறை நடவடிக்கையாகவே அது உருவாகியுள்ளது. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே ஜனநாயக ரீதியானதும், ஆக்க பூர்வமானதுமான அரசியல் பங்கேற்பிற்கான இடைவெளிகள் வர வர குறைந்துகொண்டு செல்வது அதனைத் தெளிவாக நிரூபிக்கின்றது. அதிலும் குறிப்பாக தமிழ் சமூகத்தின் அரசியல் சூழ்நிலையானது 'ஜனநாயகமா..! ஒரு தூக்கு என்ன விலை...?' என்று கேட்கும் அளவிற்கு நிலமை சென்று விட்டதை இன்று யாரும் மறுப்பதற் கில்லை.

எமது நாட்டில் இவ்வன்முறை கலந்த சாக்கடை அரசியலுக்கு அத்திவாரம் வெட்டி, அதை கட்டியெழுப்பியவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இருபெரும் பேரினவாத அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும்தான் என்ற உண்மையுடன் கூடவே, அவர்களின் தோளோடு தோள் நின்று, மண் சுமந்து காரியத்தை கச்சிதமாக வெற்றி பெறச் செய்தவர்கள் என்ற வகையில் தமிழ் அரசுக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் புலிகள் இயக்கம் போன்றவர்களும் பிரதான பங்காளிகள் என்னும் உண்மை பலருக்கு கசப்பானதாகும்.

இவர்களின் அரசியல் செயற்பாடுகள் ஆட்சிக்கு வரும் இருபெரும் பேரினவாதக் கட்சிகளுக்கும் எதிரானது போன்றதொரு தோற்றத்தை கொடுத்தாலும், உண்மையில் இவர்கள் ஒருவரை ஒருவர் என்றுமே முற்றாக அழிக்க விரும்பாத, ஒன்றில் ஒன்று தங்கி வாழும் சக்திகள் என்பதே உண்மை. சுருங்கச் சொன்னால் ஒருவரின் கொள்கையிலும், வன்முறையிலும் மற்றவர்கள் தமது கொள்கைகளையும் வன்முறைகளையும் நியாயப்படுத்துவதே இவர்களின் அரசியல் சாராம்சம். இதன் இறுதிப் பலாபலனாக யுத்தமும், ஒடுக்குமுறையும், சுதந்திர மறுப்பும் இறுதியாக சிந்தனை மறுப்பு என்கின்ற மானுட பகுத்தறிவையே சிறுமைப் படுத்துகின்ற அசாதரண நிலைமையும் எமது நாட்டில், குறிப்பாக தமிழ்ச் சமூகத்தில் சாதாரண சமூக வாழ் நிலைமையாக ,நிறுவப்பட்டுக் கொண்டிருக்கன்றது.

தற்கால நவீன, மனித நாகரீகத்துக்கு ஒவ்வாத இந்தச் செயற்பாட்டை 'விடுதலைப் போராட்டம்' என்னும் முகமூடிக்கு பின்னால் இருந்தபடி புலிகள் இயக்கத் தலைமையும், அதைத் துதிபாடி வாழ்த்தும் கூட்டமும் மிக கச்சிதமாக செய்து வருகின்றனர். எனவே தமிழ் சமூகத்தின் எதிர்கால சமூக, அரசியல் நலன் தொடர்பாக அக்கறைப் படுபவர்களும், அதற்காக செயற்பட விரும்புபவர்களும் இச்சர்வாதிகாரக் கும்பலின் அரசியல் செயற்பாடுகளுக்கும் அதன் தலைமைக்கும் முரணாக அல்லது எதிராக செயற்படுவது தவிர்க்க முடியாதது. இது எவர் மீதானதும் தனிப்பட்ட கோபதாபத்தின் அடிப்படையிலோ, வெறுப்பின் அடிப்படையிலோ, பழிவாங்கும் நோக்கிலோ செயற்படுத்தப்படுவதாக கருதப்பட வேண்டியதில்லை.

மாறாக தமிழ் சமூகத்திற்குள் சாதாரண பொதுமக்களும், சமூக செயற்பாட்டாளர்களும் அரசியலில் ஈடுபடுவோரும், மக்கள் பிரதிநிதிகளும் சுதந்திரமாக பங்கேற்கும் சமூக, அரசியல் பண்பாடு ஒன்றை உருவாக்குவதற்கான வரலாற்றுக் கடமையாகவே இது கருதப்பட வேண்டும். உலகின் பல பலம்வாய்ந்த நாடுகளில் நிறுவப்பட்டு பின்னர் தகர்ந்து, நொருங்கி உருத் தெரியாமல் போன தனிக்கட்சி சர்வாதிகார அரசியல் ஆட்சி முறையானது, சிந்தனை மிருகமான மனித சமூகத்திற்கு இந்த யுகத்தில் பொருத்தமற்றது, என்பதை நிரூபிக்க இன்று பல்வேறு முயற்சிகள் உலகில் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால் தமிழ் மக்களின் சமூக, அரசியல் சூழலானது இன்று தமிழ் மக்களை பலாத்காரமாக அவ்வாறானதொரு சர்வாதிகார அரசியல் பண்பாட்டை ஏற்று வாழப் பளகிக் கொள்ளுங்கள் என்றே வலியுறுத்தி நிற்கின்றது.


இந்த அடாத்தான அரசியல் செயற்பாட்டை வாய்மூடி ஏற்றுக்கொள்வதும், ஐக்கியம் என்று பேசிக்கொண்டு அடங்கிப் போவதும், மனிதனின் இயல்பான பகுத்தறிவுக்கும், சுதந்திர உள்ளுணர்வுக்கும் ஒவ்வாததாகும். அரசியல் செயற்பாடானது எவ்வளவுதான் அசிங்கமானதாகக் கருதப்பட்டாலும், எவ்வளவு ஆபத்தானதாக இருந்தாலும், அதைவிட்டு நாம் எட்டி ஓட முயன்றாலும் அது நம்மை விடாமல் துரத்துகிறது. எமது வாழ்வின் அன்றாட நிகழ்சிகளை தினமும் அது பாதிக்கின்றது. எனவேதான் நாம் அது தொடர்பாக அக்கறைப்பட வேண்டியுள்ளது.

யாராவது அந்த அரசியல் சகதிக்குள் இறங்கி எமக்கு நன்மையாக ஏதும் செய்ய மாட்டார்களா என நாம் எதிர்பார்க்கிறோம். எங்கோ பலர் சுகமாக சோறு உண்பதற்காக, எங்கோ உழவர்கள் சிலர் சேற்றில் இறங்கித்தான் ஆக வேண்டுமென நாம் எதிர்பார்ப்பது போல. சுருங்கச் சொன்னால் யாராவது ஒரு சிலர் விரும்பியோ விரும்பாமலோ ஆபத்துக்களை பொருட்படுத்தாமல் அர்ப்பணிபோடு இதில் இறங்கித்தான் ஆகவேண்டும்.

இதில் பொருட்செலவு, உயிர் அழிவு, எதிர்காலம் பற்றிய அச்ச உணர்வு என பல இன்னல்கள் வரலாம்...! வரும்...! கடுமையான, தீர்க்கமான முடிவுகள் எடுக்கவேண்டி இருக்கலாம்...! இருக்கும்...! ஆனால் நம் சமூகமும் அதன் அடிப்படை வாழ் நலன்களும் விலை பேசப்படாமல் இம் முடிவுகள் எடுக்கப்படத்தான் வேண்டும். நமது சமூகம் ஒரு தனி மனிதனிடமோ தனிக் குழுவிடமோ குத்தகைக்கு விடப்படாமல் இவை நிகழ்த்தப்பட வேண்டும். நாம் யாரோடு மோதப் போகிறோமோ அவர்கள் சூட்டும் துரோகிப் பட்டங்களுக்கு அஞ்சுபவர்களும், அவர்களை எதிர்த்துக்கொண்டு ஒன்றுமே செய்ய முடியாது என நினைப்பவர்களும், அவர்களின் அரசியலை தோற்கடிக்கவே முடியாது எனக் கலங்குபவர்களும் தம் கருத்துக்களை ஒருமுறை மீள் பரிசீலிக்க, தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

அடங்கி ஒடுங்கி புழுவாக வாழ்தல் என்னும் இழி நிலையை மனித சிந்தனையின் 'அகங்கார உணர்வானது எப்போதும் ஏற்றுக் கொள்ளாது. ஏற்றுக்கொள்ளவும் கூடாது. 'அகங்காரம்' என்பது எல்லாப் பொழுதிலும் தவறானதல்ல. 'அரசியலில்' கால் வைத்ததும் 'அதிகாரம்' என்பது எம்மோடு கைகோர்க்கும். அப்போதுதான் 'அகங்காரம்' தொடர்பாக நாம் எச்சரிக்கை அடைய வேண்டும்.
அதிகாரம் கையில் இல்லாதவர்கள், தனி மனிதர்கள் அடக்குமுறைக்கு எதிராக அகங்காரத்துடன்தான் செயற்பட வேண்டும்.
சுதந்திர உணர்வின் அடிப்படையே 'அகங்காரம்தான்'

எனவே...!
வாருங்கள்...!
மீண்டும் ஒருமுறை அடிக்கல் நட்டு,
அத்திவாரமிட்டு ஆரம்பிப்போம்.
இது...!
செயல் வீரர்களுக்கான காலம்.








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வங்கிக் கொள்ளை முதல் வாக்குக் கொள்ளை வரை





-ரகு தயாளினி-

1987களின் நடுப்பகுதி தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்த இறுதிக் காலகட்டம். பிரபல ஜனரஞ்சக சஞ்சிகையான ஆனந்த விகடன் தன் அட்டைப்பட ஓவியமாக ஓர் அரசியல் கேலிச் சித்திரத்தை அச்சிட்டு வெளியிட்டிருந்தது. அக் கேலிச் சித்திரத்தில், ஒரு அரசியல் கட்சிக் கூட்டம் நிகழ்வது போலவும், மேடையில் தொந்திகளும் கழுத்துக்களும் பருத்த, முறுக்கு மீசைகளுடன் கறுப்பு கண்ணாடிகள் அணிந்தபடி அரசியல்வாதிகள் சிலர் வீற்றிருப்பதாக சித்தரிக்கப் பட்டிருந்தது. அத்தோடு மேடையைச் சுற்றி நின்றிருந்த பார்வையாளர்கள் மத்தியில் இருந்து இருவர் இவ்வாறு பேசிக்கொண்டனர்.

**முதலாமவர்:** அண்ணே...! இதிலே யாரு எம்.எல்.ஏ...யாரு மந்திரி இன்னே தெரிய மாட்டேங்குதே..?

**இரண்டாமவர்:** அதோ வழிப்பறி திருடன் மாதிரி இருக்காரே அவருதான் எம்.எல்.ஏ....! கொள்ளைக் காரன் மாதிரி இருக்காரே அவருதான் மந்திரி...!

இக்கேலிச் சித்திரத்தை வரைந்திருந்தவர் பிரபல தென்னிந்திய கார்ட்டூனிஸ்ட் மதன். ஆனந்த விகடனில் வெளியாகும் மதனின் கேலிச் சித்திரங்கள் மிகப் பிரபலமானவை. இதை விடக் கடுமையான விதங்களில் எல்லாம் அரசியல் வாதிகளை இந்திய ஊடகங்கள் கேலி செய்கையில், ஏனோ இந்த கேலிச்சித்திரம் அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆரையும் அவரின் சகபாடிகளையும் ஆத்திரமுற வைத்தது.

கோபம் அடைந்த தமிழக அரசு அக்குறிப்பிட்ட சஞ்சிகையை விற்பதற்கு தடை விதித்ததோடு அப்போது ஆனந்த விகடன் நிறுவனத்தின் பணிப்பாளராக இருந்த பாலசுப்ரமணியத்தை கைது செய்து ஓரிரு நாட்கள் காவலிலும் வைத்தது. இவ்வளவிற்கும் பாலசுப்ரமணியம் எம். ஜி. ஆரின் நெருங்கிய நண்பர்.

பாலசுப்ரமணியம் காவலில் இருக்கும் போதே, அவசர அவசரமாக ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவினர் முற்றும் முழுதாக அரசியல் கேலிச்சித்திரங்கள் நிறைந்த மற்றுமோர் விசேட வியடன் இதழை அச்சிட்டு விநியோகித்தனர். எந்த நெருப்பை முட்டாள் தனமாக எம். ஜி. ஆர். மூடி மறைத்து அணைக்க நினைத்தாரோ, அதுவே இலட்சக்கணக்கான வாசகர் மனங்களில் பெரும் நெருப்பாக பற்றிக் கொண்டது. தவிர்க்க முடியாமல் எம். ஜி. ஆரின் அரசு பின்வாங்க நேரிட்டது. பாலசுப்ரமணியம் விடுதலை செய்யப்பட்டதுடன் சஞ்சிகை விற்பனைக்கான தடையும் நீக்கப்பட்டது.

இதற்கும் யாழ்ப்பாண தமிழ் மக்களின் வாக்குகள் கடந்த 2004 ஏப்ரல் தேர்தலில் காடைத்தனமிக்க கொள்ளையர் கூட்டத்தினால் கொள்ளை அடிக்கப்பட்டதிற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம். சம்பந்தம் இருக்கிறது. இக்கேலிச் சித்திரத்தை ஒத்த ஒரு கேலிப் புகைப்படம் தேர்தல் முடிந்ததும், புகழ்பெற்ற தமிழ் நெற் இணையத் தளத்திலும் பிரசுரமாகி இருந்தது.

2004 ஏப்ரல் மாதம் இலங்கையில் நடந்த பொதுத் தேர்தலானது தமிழ் மக்கள் வாழும் வடகிழக்கு பிரதேசத்தை தவிர ஏனைய சகல மாவட்டங்களிலும் அமைதியாகவும் வன்முறைகள் குறைந்தும் காணப்பட்டதாக மெச்சப்பட்டது. உள்ளூர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இதற்கான சான்றிதழ்களை வழங்கி இதை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் மாத்திரம் அதிகமாக, உயிர் அச்சுறுத்தல், கொலை, அப்பட்டமான வாக்கு கொள்ளை என்பவற்றுக்கு மத்தியில் தேர்தல் மிகக் கேவலமாக நடைபெற்றதாக உள்ளூர் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் நற்சான்றிதழ் வழங்கி இதை உலகிற்கு அம்பலப் படுத்தியுள்ளனர்.

ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, சர்வதேச கடத்தல் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு சர்வதேச பொலிசாரால் வேண்டப்படும் ஒரு சர்வதேச கொள்ளைக்காரனால் வழி நடத்தப்பட்ட தேர்தல் வேறு எப்படித்தான் இருக்கப் போகிறது. எப்படியோ பல உள்ளூர் திருடர்களின் துணையோடு இவ்வாக்கு கொள்ளை பகிரங்கமாக நடத்தப்பட்டு சில கோமாளிகளும் அனுபவம் மிக்க உள்ளூர் திருடர்கள் சிலரும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை இன்று உலகறிந்த பெருமையும் உண்மையுமாகும்.

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இவ்வாக்குக் கொள்ளையின் வெற்றிக் களிப்பைக் கொண்டாடவே "சர்வதேசியப் புகழ்" கொள்ளைக்காரன், வெற்றிவாகை சூடிய உள்ளூர் திருடர் கும்பலை தன்கானக பங்களாவுக்கு அழைத்து விருந்து கொடுத்து மகிழ்ந்ததாக ஒரு "கேலி புகைப்படம்" சர்வதேசப் புகழ் பெற்ற தமிழ் நெற் இணையத் தளத்தில் பிரசுரமாகி இருந்தது. அதுவே பின்னர் பல தமிழ் பத்திரிகைகளிலும் தமிழரின் பழம் பெருமையைப் பறைசாற்றியபடி பிரசுரமாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தப் படத்தைப் பார்த்ததும் ஆனந்த விகடன் கேலிச்சித்திரம்தான் நினைவிற்கு வந்தது. ஏனென்றால் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தம் அடுத்த சந்ததியினருக்கு காண்பித்து அப்படத்தை விளக்கும்போது இப்படித்தான் விளக்க வேண்டியிருக்கும்.



கீழே உள்ள கேலிப் புகைப்படங்கள் தமிழ் நெற்றில் இருந்து திருடப்பட்டவை. தமிழ் நெற் இணையத்தளத்தின் ஆசிரியர் டி.சிவராம். இவரின் முழுப் பெயர் தர்மரத்தினம் சிவராம். புளொட் இயக்கத்தில் இவர் பெயர் எஸ்.ஆர். தற்போது -தராக்கி- என்ற திருட்டுப் பெயரில் பத்திரிகைகளில் எழுதுகிறார். 1980 களின் ஆரம்பத்தில் புளொட் இயக்கத்தின் முதலாவது உட்கொலைகளான அகிலன், செல்வனுடைய கொலைகளை நேரடியாக நின்று செய்தவர் இவரே. அப்போது இவர் கிழக்கு மாகாண இராணுவ பொறுப்பாளராக இருந்தார். கூடியிருந்து கழுத்தறுப்பது, சதிசெய்வது போன்றவற்றில் விசேட பயிற்சிகளைப் பெற்றுள்ளார்.

நன்றி TamilNet



“இதோ மேசையைச் சுற்றிவர அலிபாபா கதையில் வரும் திருடர்களைப்போல் திருதிருவென விழித்தபடி உட்கார்ந்து இருக்கிறார்களே... இவர்கள்தான் உள்ளூர் வாக்குத் திருடர்கள்...

அதோ அந்த கறுப்பு கண்ணாடிகள் அணிந்த இரு காவலர்களுக்கு இடையே நடு நாயகமாக அமர்ந்திருக்கிறாரே...... அவர்தான் உள்ளூரில் பிறந்து இன்று சர்வதேச புகழ் பெற்றுள்ள கொள்ளைக்காரன். அவர் வடக்குக் கிழக்கில் தேர்தலில் தமிழர்களின் வாக்குக் கொள்ளையில் ஈடுபட்ட உள்ளூர் திருடர்களுக்கு விருந்துபசாரம் வழங்கும் காட்சிதான் இது...”

இவ் வைபவத்தின்போது சர்வதேசிய புகழ் கொள்ளைக்காரன், தனது இடது புறமாக பழுத்த உள்ளூர் திருடர் தலைவனை பௌவியமாக அமர்த்திக் கொண்டார். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. “சம்பந்தா சம்பந்தம்” இல்லாமல் எல்லாவற்றுக்கும் தன் முட்டை விழிகளை உருட்டி உருட்டி விழிக்கும் அந்த உள்ளூர் கிழத்திருடன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டிய தேவை சர்வதேசியப் புகழ் தலைவனுக்கு இருந்தது. என்னதான் தன்னோடு இருந்து விருந்துண்டாலும் இவர்கள் எல்லாம் சந்தர்ப்பம் பார்த்து கழுத்தறுக்ககூடிய திருடர்கள் என்னும் உண்மை அவருக்கும் நன்கு தெரியும்.

ஏன் என்றால் கள்ளர்கள் கொள்ளைக்காரர்களோடு தலைவருக்கு இருக்கும் உறவு நீண்டது. அவர் உள்ளூர் திருடனாக இருந்த காலத்தில் அவருக்கு தலைவராக இருந்தவரே வீரத் திருட்டுக்களுக்காக பல முறை சிறை சென்று மீண்ட பெயர்போன நாயன்மார் கட்டு கள்ளச் செட்டி அம்மான் தான். கள்ளச்செட்டிஅம்மானை அவன் படுக்கைப் பாயிலேயே வைத்து கதவுக்கு குறுக்காகப் போடும் பொல்லினால் வீரமாக அடித்து கொன்று மாவீரனாக்கி விட்டுத்தான். இவர் சகல தேசியத் திருடர்களுக்கும் தலைவனாகிய வீரமிக்க வரலாறு கொள்ளையர் தலைவனுக்கு உண்டு.

அதுவே ஒரு தனியான வீர காவியம். அக்காவியத்தை படைக்கும் பொறுப்பை இப்போது பரதேசிகளாய் அலைந்து திரியும் காமுகக் கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் போன்றவர்களிடமே விட்டுவிடுவதே நாம் தமிழ் தேசியத்திற்கு செய்யும் மாபெரும் சேவை. சர்வதேசியப் புகழ் கொள்ளைக்காரன் இப் படைப்பிலக்கிய மேதைகளையும் தன் கானக பங்களாவுக்கு விருந்துண்ண வரும்படி அண்மையில் செய்திமடல் அனுப்பியிருந்தாராம்.

www.tamilarangam.net



வாழ்க தமிழ்..!
வளர்க இவர்கள் சேவை...!
இப் படைப்பிலக்கிய மேதைகளின் வன்னிக் கானக விஜயம் பற்றிய விபரமான அறிக்கை அடுத்தடுத்த சஞ்சிகைகளில் வரும். சரி அது ஒருபுறம் இருக்க விடயத்துக்கு வருவோம்.

தான் கானகத்தில் இருந்தபடியே காலால் இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு வாக்கு கொள்ளையை வெற்றிகரமாக முடித்து, அதற்காக தன்னிடம் சான்றிதழ் பெறவந்திருந்த உள்ளூர் திருடர்கள் தமக்குள் என்னதான் யோசிக்கிறார்கள் என்பதை அவர்களின் முக பாவனைகளில் இருந்தே அறிந்து கொள்வதற்கு, இரகசியமாக அம்மண்டபத்திற்குள் பூட்டப் பட்டிருந்த கமராக்களுக்கு புறம்பாக கறுப்புக் கண்ணாடி அணிந்த இரு கண்காணிப்பாளர்களை தன் இருபுறமும், மண்டபத்தில் ஆங்காங்கேயும் நிறுத்தியிருந்தார் சர்வதேசியப் புகழ் கொள்ளைக்காரன். 'தங்களுக்கு துரோகிகளிடம் இருந்து எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதற்காக "**கறுப்புக் கண்ணாடிக் கா**வற்படை" (சுருக்கமாக '**கக்கா படை**' என்பது அதன் சங்கேத மொழியாம்) மூலம் தலைமைக் கொள்ளைக்காரன் தமக்கு பாதுகாப்பு வழங்கினார்' என்று, விஷயமறியாத உள்ளூர் கொள்ளையர்கள் உயிர்தப்பி ஊருக்கு திரும்பி வந்தபின் பேசிப் பெருமைப்பட்டுக் கொண்டனராம்.

## இனி...! இலங்கையில் திறந்த பொருளாதாரக் 'கொள்(கை)ளையும்' வாக்குக் கொள்ளையும்!


1977ம் ஆண்டு, குறிப்பாக சிங்கள மக்களின் 5/6 பெரும்பான்மை வாக்குகளோடு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தான் ஆட்சிக்கு வந்து ஓரிரு வருடங்களில் திறந்த பொருளாதாரக் கொள்கையை (கொள்ளையை) அறிமுகப் படுத்தினார். அதற்கெதிராக நாட்டில் ஏனைய அரசியல் சக்திகளிடமிருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. அக்கொள்கையை அறிமுகப் படுத்தி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜே.ஆர். தன் உரையில் 'Let The World Barons to Come' என்று கூறினார். 'உலகப் பெரு வியாபாரிகளை எம் தேசத்தினுள் வரவிடுவோம்' என்பது அதன் பொருள். ஜே.ஆரின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள், 'உலகக் கொள்ளைக்காரர்களே வருக! வருக!!" என ஜே.ஆர். அழைப்பு விடுப்பதாக அவரைச் கடுமையாகச் சாடினார்கள். பல்தேசிய கம்பனிகளான பெரும் கொள்ளைக் காரர்கள் திறந்த பொருளாதார செயற்பாடு என்னும் போர்வையில் நம் தேசத்திற்குள் புகுந்து நமது வளங்களை கொள்ளை அடித்து செல்லப் போகிறார்கள் என்பதன் அடிப்படையிலேயே அப்போது இதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத ஜே.ஆர். 1978ம் ஆண்டு தன் அதிகார இருப்பைப் பலப் படுத்தவும் இனி எக்காலத்திலும் இலங்கையில் ஆளும் அதிகார வர்க்கத்திற்கு ஆபத்து வந்துவிடாதபடியும் வகைசெய்யக் கூடிய அரசியல் யாப்பை அறிமுகப் படுத்தினார். கடைகெட்ட திறந்த பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பாக பெரும் பான்மை மக்களின் கவனத்தை வேறுபக்கம் திசைதிருப்ப அவர் திட்டமிட்டார். இதற்காகவே உள்ளூர் கொள்ளையர்களையும் சிங்கள இனவாதக் கும்பல்களையும் திருப்திப் படுத்தி தன்வசம் இழுத்துக் கொள்வதற்காக பல இனக்கலவரங்களை 1977, 1980, 1981, 1983, போன்ற வருடங்களில் தூண்டி விட்டு தமிழ் மக்களின் சொத்துக்களை உள்ளூர் கொள்ளையர்கள் சுதந்திரமாக சூறையாட வழி சமைத்தார். ஆனால் உள்ளூர் கொள்ளையர்கள் இன்னும் ஒரு படி மேலேபோய் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களையும் கொள்ளையிட்டுச் சென்றது நாம் அறிந்ததே.

பெரும்பான்மையான சிங்கள மக்களின் கவனத்தை வடகிழக்குத் தமிழர்கள் மீது திருப்பி விட்டுவிட்ட, ஜே.ஆர். வேறு ஒரு பயங்கரத் திட்டத்தைத் தீட்டினார். ஜே.ஆரைப் பொறுத்தவரையில் நாட்டு மக்கள் அடிக்கடி ஆட்சி மாற்றத்தை கொண்டுவரும் ஆயுதமாக தம் கைகளில் வைத்திருக்கும் மக்களின் வாக்குகளையே கொள்ளையடித்து விட்டால், தான் விரும்பியபடி சகல கடைகெட்ட அரசியல், பொருளாதாரத் திட்டங்களை தங்கு தடையின்றி நடைமுறைப் படுத்துவதுடன் தன்னையும் தன் ஆட்சியையும் நீண்ட காலத்திற்கு எவராலும் அசைக்கவோ மாற்றவோ முடியாதென திட்டமிட்டார்.


1983 யூலைக் கலவரத்தின்போது ஐ.தே.க. வினால் அம்மணமாக்கப்பட்ட தமிழன்

மொத்தமாக இலங்கை வாழ் குடிமக்களினதும் வாக்குகளைக் கொள்ளை யடிப்பதற்கு முன்னதாக, அதைக் கனகச்சிதமாக செய்து முடிக்க முடியுமா என பரீட்சித்துப் பார்க்க ஜே. ஆருக்கும் ஐ.தே.க அரசுக்கும் ஒரு அருமை யான சந்தர்ப்பம் கிட்டி யது. அதைத் தவறவிட ஜே.ஆர். விரும்பவில்லை. இன்று சிங்களவர்கள் மட்டுமல்ல தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் உட்பட, அவர்களோடு சேர்ந்து வாக்குக் கொள்ளையில் ஈடுபட்ட கடைகெட்ட உள்ளூர் திருடர்களும் கூட இன்று இதுபற்றி பேசுவதற்கு வக்கற்று வக்கரித்துப் போயுள்ளனர். தென்னி லங்கையில் சிங்கள முற்போக்குவாதிகளாக தம்மைக் காண்பிக்கும் பலரும் கூட இதுபற்றி இப்போது பேசுவதில்லை என்பதும் இங்கு கவனிக்கப் படவேண்டும். ஏனென்றால் ஐ.தே.க. மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு அது சரியான குந்தகமாகி விடுமாம். அட..தூ..! அடி..செருப்பாலை..!!



## 1982
## யாழ்ப்பாண தமிழரின் வாக்குகளும் ஜே.ஆர். நடத்திய பகல் கொள்ளையும்.

1981ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலைத்தான் ஜே ஆர் தனது வாக்கு கொள்ளைக்கான ஒத்திகையாக பயன்படுத் தினார். இதற்காக தனது மந்திரி சபையில் இருந்து கைதேர்ந்த அரசியல் கொள்ளைக் காரர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் கைகளில் இப்பொறுப்பைக் கொடுத்தார். அக்கொள்ளைக்கார அமைச்சர்களின் தலைமையில் உள்ளூர் திருடர்களும் காடையர்களும் தென்னிலங்கையில் இருந்து புகையிரத மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக் கொள்ளைக்காரர்களை ஏற்றிச் சென்ற புகையிரதம், குருநாகல் புகையிரத நிலையத்தை அடைந்த பொழுது அக்காடையர்களை வரவேற்க நின்ற கொள்ளைக்கார அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா "நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்லுவது ஒரு வரலாற்று புகழ் மிக்க தேசிய கடமையை நிறைவேற்றுவதற்காகவே" என வாழ்த்தி, தமிழர்களின் வாக்குகளை சுதந்திரமாக கொள்ளையடிக்க அக்காடையர்களை வழியனுப்பி வைத்தார்.

யாழ்ப்பாண இந்து மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த இவ் உள்ளூர் காடையர்களையும் கொள்ளைக்காரர்களையும் தேர்தலுக்கு முந்திய நாள் மாலையில் சந்தித்து உரையாற்றிய பிரதான கொள்ளைக்கார அமைச்சர் காமினி திசாநாயக்கா, மறுநாள் கொள்ளை எப்படி நடத்தப்பட வேண்டும், அந்த வாக்கு கொள்ளை சுதந்திரமாக நடத்தப்படுவதற்கு போலீசாரும் இராணுவமும் எவ்வாறான ஒத்துழைப்புகளை வழங்குவார்கள், போன்ற பல விடயங்களை விளக்கியதோடு, 'நண்பர்களே நாளைய தினம் யாழ் நகரில் சூரியன் பச்சை நிறமாக உதிக்க வேண்டும்" என வாழ்த்துக் கூறி சென்றார்.

ஆனால் தம் கையில் உள்ள வாக்குகளையும் அதைச் சுதந்திரமாக வழங்கும் உரிமையையும் மிக உயர்வாகக் கருதிய யாழ்ப்பாண தமிழ் சமூகம் இவ்வாக்கு கொள்ளையை எப்படியாவது முறியடிக்கப்பட வேண்டும் எனக் கங்கணம் கட்டியது. தென்னிலங்கையில் இருந்து வந்த காடையர்களும் கொள்ளையர்களும் முன்னைநாள் அருந்திய சாராயத்தின் வெறி முறிந்து எழுவதற்குள்ளேயே, அதிகாலையில் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தம் வாக்குகளை வழங்கிவிட்டனர். அதற்காக மக்கள் பல சவால்களுக்கு முகம்கொடுத்து போராட வேண்டியிருந்தது.

யாழ்ப்பாண தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அன்று அது ஒரு தர்ம யுத்தமாக இருந்தது. தமது சமூகத்திற்கு வெளியே இருந்து வருகின்ற எந்த ஒரு அநீதியையும் முழுச் சமூகமாக சேர்ந்து நின்று எதிர்த்து தோற்கடிக்கும் ஆன்ம பலமும் நம்பிக்கையும் அன்று எமக்கு இருந்தது. ஆனால் விடுதலைப் போராட்டம் மூன்று தசாப்தங்களைக் கடந்த பின்பும் கூட இன்று தமிழ் மக்கள் தம்மிடம் இறுதியாக கொண்டிருந்த ஆன்ம பலத்தையும் பறிகொடுத்த நிலையிலேயே கடந்த பொதுத் தேர்தலின் போது துப்பாக்கி முனையில் நிறுத்தி வைக்கப்பட்டு அவர்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்பட்டன. இது ஒரு வரலாற்று ரீதியான கேவலமே.

## 2004, தமிழர் வாக்குகளும் வீரத் தமிழர்கள் நடத்திய பகல் கொள்ளையும்.

2004ம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண தமிழர்களின் வாக்குகளை யாழ்ப்பாண தமிழர்களைக் கொண்டே கொள்ளை யடித்த விதம் வீரத் தமிழர் வரலாற்றில் என்றுமே அழியாப் புகழ்மிக்க ஓர் குற்றச் செயலாக மிளிரும். அதைவிட மிகவும் கேவலமான விடயம் யாதெனில் **"தமிழ் மக்கள் தம்மீது மட்டுமே முழுமையான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், தாமே அவர்களின் ஏகப்பிரதிநிதிகள்"** எனக் கூறிய, ஆனால் என்றுமே தமிழ் மக்கள் முன்னால் சொந்தப் பெயரில் வாக்குக் கேட்க வர வக்கில்லாத கொலைகாரர்களும், 'தமது கரங்கள் வரலாற்றில் என்றுமே இரத்தக்கறை படியாதவை' என மார் தட்டிய உள்ளூர் அங்கிடுதத்திகளும் ஒன்றாகக் கைகோர்த்தபடி அப்பட்டமாக இப் பகற் கொள்ளையில் இறங்கியதுதான்.


முற்றும் முழுதாக தமிழ் மக்களை அச்சுறுத்தி, செய்யக் கூடிய அத்தனை திருகுதாளங்களையும் செய்து அவர்களின் வாக்குகளைக் கொள்ளை அடித்துத்தான் தமது ஏக பிரதிநிதித்துவத்தை அவர்கள் உலகிற்கு நிரூபிக்க வேண்டிய கேவலமான நிலைக்குப் போய்விட்டது விடுதலைப் போராட்டம்.

இந்த மாபெரும் கொள்ளைக்கான ஒத்திகையானது, 2001ம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலிலேயே இக்கொள்ளையர்களால் முயற்சித்து பார்க்கப்பட்டது. (சரியாக ஜெ.ஆர். 1981இல் செய்தது போல) 2001ம் ஆண்டு டிசம்பர் தேர்தலில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்த ஒரு பகுதி மாணவர்களையும் சில காடையர்களையும் வைத்து நடத்திய வாக்கு கொள்ளையில் ஓர் அளவு வெற்றி கண்டனர் இக்கொள்ளையர்கள்,

ஆனால் 2004ம் ஆண்டு தேர்தலிலோ, நியமனப் பத்திரங்கள் தாக்குதல் செய்வதில் இருந்து ஆரம்பித்து, வாக்காளர் பட்டியலில் சுத்துமாத்துச் செய்தல், அஞ்சல் அலுவலகங்களுக்கு ஊடாக வாக்காளர் அட்டைகளைத் திருடுதல், கிராம சேவகர்கள், தேர்தல் அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள், வாக்குச் சாவடி அதிகாரிகள் போன்ற சகலரையும் அச்சுறுத்தி தமது கைகளுக்குள் கொண்டுவந்து விட்டே இந்த ஒட்டு மொத்தமான வாக்கு கொள்ளைக்கு இவர்கள் தயாரானார்கள். ஆனால் இந்தக் கேவலமான செயலை அவர்கள் எந்த ஒளிவு மறைவுமின்றி பெருமையோடு செய்து யாழ். படித்த, பண்பு மிக்க சமூகத்திற்கு வரலாற்றுப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

கையில் கட்டுக்கட்டாக வாக்காளர் அட்டைகள்






முகமாலையில் நடந்த ஒப்பரேசன் கள்ள வோட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஓயாத அலைகள் 2004
## ஒப்பரேசன் வாக்குக் கொள்ளை

- ஏனைய அரசியல் கட்சிகளை யாழ்ப்பாணம் வன்னி ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் செய்ய விடாது தடுத்தல்

- அவர்களின் பிரச்சாரச் சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்களை ஒட்டவிடாது, விநியோகிக்க விடாது தடுத்தல் அல்லது கிழித்தெறிதல்

- ஏனைய கட்சிகளுக்கு ஆதரவாக செயற்படுபவர்களைக் கொலை செய்தல், தாக்குதல், உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குதல்

- தமது இயக்க காடையர்களை பகிரங்கமாக ஈடுபடுத்தி தேர்தல் தினத்தன்று ஆங்காங்கே தெருக்களில் வைத்து வாக்குச் சாவடிகளுக்குச் சென்ற தமிழ் வாக்காளர்களின் வாக்கு அட்டைகளைப் பறித்தல் அவர்களை மானசீக ரீதியில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்குதல்,

- வாக்குச் சாவடிகளில் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளை வர விடாமல் தடுத்தல் அல்லது துரத்துதல்.

- தமது சகபாடிகளை ஏனைய கட்சிப் பிரதிநிதிகளைப்போல் பொய்யாகப் பெயர்களைப் பதிந்து வாக்குச் சாவடிகளில் நிறுத்தி தேர்தல் கண்காணிப்பாளர்களை ஏமாற்றுதல்

- தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து பெருந் தொகையான வறிய மக்களை அச்சுறுத்தி வாக்கு ஆள்மாறாட்டம் செய்வதற்கு கொண்டு வருதல்.

மேற்கூறப்பட்ட கீழ்த்தரமான கைங்கரியங்கள் அனைத்தையும் பாவித்து இவ்வாக்கு கொள்ளையை இவர்கள் செய்தார்கள். அந்த வகையில் ஜே.ஆரின் வாக்கு கொள்ளைக் கோஷ்டியினரை விடவும், அல்லது தற்போது தென்னிலங்கையில் ஆங்காங்கே வாக்கு கொள்ளையில் ஈடுபடும் காடைத்தனம் மிக்க அரசியல் வாதிகளை விடவும் தாம் பல படிகள் மேலே போய்விட்டோம் என தமிழ் வாக்குக் கொள்ளையர் கூட்டம் தமிழ் சமூகத்திற்கு நிரூபித்து காட்டியது மட்டுமன்றி இப்பெருமையை மேலும் பறைசாற்ற இப்போது அவர்கள் உலகவலம் வருகிறார்கள். வெளிநாடுகளில் இச் சாதனையைக்கேட்டு தமிழர்கள் மயிர்க்கூச் செறிகிறார்களாம். ஆனால் இந்த அநாகரீகத்தை தமிழ் கல்வி மான்கள், தமிழ் சமூகத்தின் அறிவு ஜீவிகள் எனக்கூறிக்கொண்டு பெயர்களுக்குப் பின்னால் பேராசிரியர் பட்டங்களை வைத்திருக்கும் எவருமே வாய்திறந்து பேசாது இருப்பது, நடத்தப்பட்ட இவ்வாக்குக் கொள்ளையைவிடவும் ஈனச் செயலாகும்.

2001ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின்போது "இனிமேல் தமிழர்களுக்கு தேர்தல் என்று ஒன்று நடந்தால் அது தமிழ் ஈழத்தில்தான் நடக்கும்" என முழங்கிய இக் கடைகெட்ட அர சியல் கொள்ளையர்கள், "இனிமேல் தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் தேர்தல்கள் எல்லாம் இப்படித்தான் பகல் கொள்ளையாக இருக்கும்" என்பதையே தமிழ் மக்களுக்கும் உலகிற்கும் நிரூபித்து இருக்கிறார்கள்.

இவர்களுக்குப் பின்னால் துப்பாக்கிகளோடும் கறுப்புக் கண்ணாடிகளோடும் நிற்கும் கொலைகாரர்களின் பிஸ்டல படை பாதுகாப்பு இல்லையென்றால்... தூ... நாய்களே...! நீங்களும் உங்கள் எம். பி பதவிகளும் என மக்கள் காறித்துப்பி இவர்களை விளக்குமாறினால் அடித்துத் துரத்தும் காலம் விரைவில் வந்தே தீரும். சாதாரண தமிழ் மக்களின் சுய கௌரவத்தையும் அவர்களின் மனச்சாட்சியின் உணர்வுகளையும் கீழே போட்டு மிதிக்க முனைபவர்களுக்குத் தண்டனை மக்களாலேயே வழங்கப்பட வேண்டும்.

சிங்களப் பேரினவாத அரசுகளால் எவ்வளவோ முயன்றும் பறிக்க முடியாது, கீழே போட்டு மிதிக்க முடியாது போயிருந்த தமிழ் மக்களின் மனச்சாட்சியின் இறுதி வெளிப்பாடாக எஞ்சியிருந்த பெறுமதி மிக்க சொத்தான வாக்குரிமையை தமிழ் விடுதலை திருடர்களோடு கூட்டுச் சேர்ந்து உள்ளூர் தமிழ் அரசியல் காடையர்கள் பட்டப் பகலில் கொள்ளையடித்துச் சென்றனர். தமிழ் மக்கள், தமது இனம் சுதந்திரம் பெற்று சுய கௌரவத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக இறுதியாகச் செய்த மாபெரும் தியாகம்தான் தம் வாக்குகளை இந்த கொள்ளையர்களின் பலாத்காரத்திற்கு தாரை வார்த்தது.



மட்டக்களப்பில் கொல்லப்பட்ட இரா.சத்தியமூர்த்தி

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வங்கிக் கொள் ளையில் ஆரம்பித்து இன்று இறுதியாக தமிழ் மக்களின் சிந்தித்துச் சுதந்திரமாக வாக்க ளிக்கும் உரிமையைக் கொள்ளை யடிப்பதில் வந்து முடிந்திருக் கிறது. இந்த 'வங்கி - வாக்கு' என்னும் இரு அந்தங்களுக்கு மிடையே தமிழ் மக்களிடம் இருந்து பல பெறுமதி மிக்க விடயங்கள், தமிழரின் விடுதலைப் போராட்டம் என்னும் பெயரால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. தமிழர்களின் விடுதலை கொள் ளையர்களாலேயே அவை பெரும ளவில் கொள்ளையடிக்கப்பட்டன. இதற்கிடையில் சிங்களவனும், வடக்கத்தேயனும் வந்து அடித்துச் சென்ற கொள்ளையைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் இன்பம் காண நம்மைப் பழக்கி வைத்துள்ளது இக் கழிசடைக் கூட்டம்.

இவர்களுக்குப் பின்னால் துப்பாக்கிகளோடும் கறுப்புக் கண்ணாடிகளோடும் நிற்கும் கொலைகாரர்களின் 'பிஸ்டல் படை' பாதுகாப்பு இல்லையென்றால்... தூ... நாய்களே...! நீங்களும் உங்கள் எம். பி பதவிகளும் என மக்கள் காறித்துப்பி இவர்களை விளக்குமாறினால் அடித்துத் துரத்தும் காலம் விரைவில் வந்தே தீரும். சாதாரண தமிழ் மக்களின் சுய கௌரவத் தையும் அவர்களின் மனச்சாட்சியின் உணர்வுக ளையும் கீழே போட்டு மிதிக்க முனைபவர்களுக்குத் தண்டனை மக்களாலேயே வழங்கப்பட வேண்டும்.


ஆனால் இக்கொள்ளையானது என்றுமே மக்கள் மனங்களில் இருந்து மறைந்துவிடாது. அவர்களை மறக்க விடவும் கூடாது. இதற்கான கணக்குத் தீர்க்கப்படும் வரை அது மக்கள் மனங்களில் தகித்துக் கொண்டிருக்கச் செய்வது எமது கடமையாகும். *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஐரோப்பிய யூனியன் ஜோன் குஷ்னான் வழங்கிய குற்றப் பத்திரிகை

.....ஐரோப்பிய யூனியன் கண்காணித்ததன் அடிப்படையில் வன்முறைகளும் மோசமான தேர்தல் முறைகேடுகளும் நிறைந்த 2000, 2001ம் ஆண்டுத் தேர்தல்களை விடவும் 2004ம் ஆண்டு இலங்கையில் நடந்த தேர்தலில் பாரிய முன்னேற்றம் உண்டு. என்றாலும் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பொழுது ஐந்து பேர் கொல்லப்பட்டும், 15 பேர் வரை கடுமையாக காயப்பட்டும், 2000 மேற்பட்ட தேர்தல் அத்துமீறல் சம்பவங்களும் நடந்துள்ளன. இதற்கு முன்னரான தேர்தல்களில் நாட்டின் பிரதான இரு கட்சிகளினாலேயே அதிக வன்முறைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், குறிப்பாக 2004ம் ஆண்டுத் தேர்தலில் பிரதான-மான வன்முறைச் சம்பவங்களுக்கு புலிகள் இயக்கமே (LTTE) பொறுப்பாகும்.....

.........புலிகள் இயக்கத்தினர் (LTTE) இவ்வன்முறைகளை மேற்கொள்வதற்கு இரு பிரதான காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, தமிழர் கூட்டமைப்புக்கு (TNA) எதிரான எந்த ஒரு தமிழ் கட்சியையும் தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்த அனுமதிப்பதில்லை என்பது புலிகள் இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. அத்துடன் தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்பத்திலேயே ஐ.தே.க. வேட்பாளரும் மற்றும் ஈ.ம.ஜ.க. (EPDP)யின் ஆதரவாளர் ஒருவரையும் கொலைசெய்ததன் மூலம் மிக நடுக்கம் தரக்கூடிய அச்சுறுத்தல் ஏனைய கட்சிகளுக்கு கொடுக்கப்பட்டன.
இதன் மூலம் தமிழர் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய கட்சிகள் சுதந்திரமாக பிரச்சாரங்களில் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்பட்டது.

இரண்டாவதாக புலிகள் இயக்கத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பிளவினால் ஏற்பட்ட நிலைமயின் அடிப்படையில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மீது நடத்தப்பட்ட கொலை முயற்சியும், தமிழர் கூட்டமைப்பு (TNA) மட்டக்களப்பு வேட்பாளர் கொல்லப்பட்ட நிலைமையையும், அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் வாழ்ந்த வடக்குத் தமிழர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட நிலைமையும் இதற்கு வழிவகுத்தன......

....ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் வடக்குக் கிழக்கைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் 2004ம் ஆண்டுத் தேர்தல் ஜனநாயக முறைப்படியே நடந்துள்ளது. ஆனால் புதிய அரசை அமைக்கும் விடயத்தில் வடக்குக் கிழக்கின் தேர்தல் முடிவுகளே தீர்மானகரமானவையாக இருந்திருப்பின் அது தேர்தலின் இறுதி பலாபலனையே பாரிய கேள்விக்கு உள்ளாக்கியிருக்கும்.
..... அந்த வகையில் இத்தேர்தலில் இலங்கையின் வடக்குக் கிழக்கில் நடந்த சம்பவங்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையும் முற்றும் முழுதாக ஜனநாயகத்திற்கு முரணானவையுமாகும்......

*

## THE MOST WANTED !

**for Impersonation and Mass Rigging of Public Votes in Sri Lanaka**

**GENARAL ELECTION 2004**



### அறிவிப்பும் எச்சரிக்கையும்

2004ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குளை கொள்ளையடிப்பதில் கூட்டாக ஈடுபட்ட மேற்படி உள்ளூர் திருடர் கோஷ்டியானது, தம் வாக்குகளைப் பறிகொடுத்த தமிழர்களால் தேடப்படுகிறனர். கண்ட இடத்தில் இவர்களை கட்டிப்போட்டு நையப்புடைத்து உண்மையான தமிழ் மக்களிடம் ஒப்படைக்கும்படி கேட்கப் படுகின்றீர்கள். தமிழ் மக்கள் இவர்களை நெருங்காமல் தற்போது இவர்களுக்கு சர்வதேச கொள்ளைக் கும்பலின் பிஸ்டல் குழு பாதுகாப்பு வழங்குவதாகத் தெரியவந்துள்ளது.
இவர்களுக்கெதிரான முழுமையான குற்றப் பத்திரிகை அவசியப் படுபவர்கள் உடனடியாக ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ஜோன் குஷ்னான் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாக்குகளின் பெறுமதியும் இலங்கை குடிமக்களும்

இலங்கை வாழ் மக்கள் கடந்த 55 ஆண்டுகால தமது அரசியல் வரலாற்றில் தம் வாக்குரிமையை பயன்படுத்தி தமது பிரதிநிதி-களைத் தெரிவு செய்யும் பணியில் சுயமாக ஈடுபடும் பழக்கத்தை படிப்படியாக அதிகரித்தே வந்துள்ளனர். மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றம் செல்லும் நடைமுறையை அல்லது தேர்தலில் போட்டியிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று தமது கட்சிக்கு அல்லது கொள்கைக்கு மக்கள் அங்கீகாரம் எவ்வளவென்பதை நிரூபிப்பதில் சகல கட்சிகளுமே ஈடுபட்டுள்ளன. இலங்கை வாழ் மக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு முறை தேர்தல் வரும்போதும் 'இந்த அரசியல்வாதிகள் எம்மிடம் வந்தே ஆகவேண்டும் அவர்களை நாம் கேள்வி கேட்கலாம்' என்னும் உணர்வும் அதிகமாவே அவர்களுக்கு இருந்துள்ளது.

எனவே தேர்தல் முறைமையை மறுத்து ஒரு கட்சி அல்லது இயக்கம் பலாத்காரத்தின் மூலம் ஆட்சியைப் பிடித்து அதன் கீழ் வாழ்ந்த அனுபவம் இலங்கை மக்களுக்கு இல்லை. அதற்கு பெருமளவு ஆதரவும் அவர்கள் வழங்குவதில்லை. 1971ம் ஆண்டு ஜே.வி.பி. தோல்வி கண்டபின்னர் 1982ல் மக்கள் முன் வாக்குக் கேட்டு வந்து தன் செல்வாக்கை நிருபிக்க முனைந்தது. மீண்டும் அது 1986-1989 வரை பலாத்காரத்தைப் பாவித்து தோல்விகண்டு இன்று முற்று முழுதாக மக்கள் வாக்குகளை நம்பி அரசியல் செய்கிறது.

பாரம்பரியமாக தேர்தல்களில் மக்களின் வாக்குகளை நம்பி போட்டியிட்டு வெற்றி கண்டு, தோல்வி கண்டு நமது நாட்டை ஆண்ட இரு கட்சிகளான ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. இரண்டுமே இன்று மக்களிடையே தமக்கேற்பட்டுள்ள செல்வாக்குச் சரிவினால் பல விதமான வன்முறை வழிகளைப் பாவித்து அவர்கள் வாக்கு க்ளை கொள்ளையடிக்க முயலுகின்றன. ஆனால் பொது மக்க ளும் மற்றும் பல சிவில் சமூக அமைப்புக்களும் எச்சரிக்கை யடைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் ஓரளவிற் கேனும் மக்கள் தம் வாக்குகளை சுதந்திரமாக வழங்கும் உரிமையை காப்பாற்றி வருகின்றனர். இதற்காக பல உயிர்களை மக்கள் பலி கொடுக்கவும் நேர்ந்துள்ளது.

எனவே இலங்கையில் அரசியல் செய்ய முனையும் எவருமே தேர்தல் அரசியல், *(Electoral Politics)* மக்களுக்கு அதில் இருக்கும் பிணைப்பு என்பவற்றை கணக்கில் கொள்வதோடு மக்கள் முன் சென்று அங்கீகாரத்தை கேட்கும் முறைக்குள் தம்மை ஈடுபடுத்த தயாராக்கிக் கொள்ள வேண்டியது இலங்கையின் குறிப்பான சூழ்நிலையில் மிக மிக அவசிய மானதாகும். அதிலும் வடகிழக்கில் இப்பழக்கத்தை மக்கள் மிக காத்திரமாக பின்பற்றி வந்திருப்பதையே புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. வடக்குக் கிழக்கில் இயங்கிய வலதுசாரி, இடதுசாரி எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்கள் முன் சென்று வாக்குக் கேட்டு தம் செல்வாக்கை நிருபிப்பதில் ஈடுபட்டுள்ளமை இங்கு கவனத்திற்குரியது.

அந்த வகையில் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் வாக்குகள் என்பது மிகப் பெறுமதியானவை. அதை அவர்கள் விட்டுக் கொடுக்க விரும்புவதில்லை. அதை வீணாக யாருக்கும் தாரைவார்க்க விரும்புவதில்லை. எனவேதான் அவர்களால் முழு மூச்சாக நின்று 1981ல் ஜே.ஆரின் சதியை முறியடிக்க முடிந்தது. இது மிகக் கவனமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ★



## இரும்பு மனுஷி

*1914ல்* நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எமெலின் பன்க்கர்ஸ்ட் *(Emmeline Pankhurst)* இலண்டன். பொலீசாரால் இழுத்துச் செல்லப்படும் காட்சி. இது அவருக்குப் ஒரு பொழுது போக்கு மாதிரி.



"பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வரை, இன்றைய மனித நாகரீகத்தை பிடித்து ஆட்டிப் படைக்கும் கொடிய பேயாட்சியை விரட்டியடிக்க முடியாது என்றே நாங்கள் நம்புகின்றோம்."
**-எமெலின் பன்க்கர்ஸ்ட்-**

எமெலினை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதே அவரது போர்க்குணாம்சம் மிக்க 'பெண்களின் சமூக அரசியல் சங்கம்' *(Woman's Social & Political Union)* அல்லது பெண்களின் வாக்குரிமைக்கான அமைப்பின் துணிகரமானதும் மூர்க்க மானதுமான போராட்டங்களேயாகும். 1903ல் இதை அவர் நிறுவி னார். இதற்கு 13 வருடங்களுக்கு முன்னர் 1890ல் தொழிலாளர் இயக்கத்தில் இருந்த அவரது கணவருடன் வாதிடும் போது கணவர் ரிச்சர்ட் அவரிடம் கேட்ட கேள்வியொன்றை எமெலின் வாழ்க்கை முழுதும் மறக்க வில்லை.

**'உங்கள் வாக்குரிமைகளைக் கேட்டு நீங்கள் ஏன் எங்களை வற்புறுத்துகிறீர்களில்லை? ஏன் எங்கள் கண்களைத் தோண்டி வெளியே எடுக்கிறீர்களில்லை?'**

.1898ல் அவரின் கணவர் இறக்கும்வரை எமெலின் தொழிலாளர் இயக்கத்தில் ஊக்கமாகப் பணியாற்றினார். 1894 அவர் தான் வாழ்ந்த இடமான மான்செஸ்டரில் ஏழைகளுக்கான சட்ட பாதுகாவலராக இடதுசாரிக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடு க்கப்பட்டார். இடதுசாரி இயக்கத்திற்குள் இருந்த ஆணாதிக்கத் தன்மைக்கெதிராகப் பலமாகக் குரல் கொடுத்த அவர், அதன் பிரதிபலனாகவே மேற்கூறப்பட்ட சங்கத்தைப் பெண்களுக்கென்றே உருவாக்கினார்.

எமெலினைப்போலவே சோஷலிசம் மற்றும் பெண்நிலைவாதம் பற்றி உரைகள் நிகழ்துவதில் அவரது மகளான கிரிஸ்டாபெலும் *(Christabel)* திறம்பட விளங்கினார். **'ஏனைய வர்க்கத்து ஆண்களைப் போலவே தொழிலாளி வர்க்க ஆண்களும் பெண்கள் மீது அநீதியாகவே நடந்து கொள்கின்றனர்'** என்னும் கருத்தை கிரிஸ்டாபெல் கடுமையாக முன்வைத்தார். பெண்களுக்கான சமூக அரசியல் சங்கத்தினூடாக அப்போதிருந்த சுதந்திரத் தொழிலாளர் கட்சி மற்றும் தொழிற்சங்கங்கள் மீது, பெண்களுக்கான வாக்குரிமைக் கோரிக்கையை ஆதரிக்கும்படி எமெலின் பெரும் அழுத்தங்களைக் கொடுத்தார். மூர்க்கமாக பொலீசாரோடு மோதியதற்காவும் அது போலவே ஏனைய பெண்களைத் தூண்டி யதற்காகவும் பலமுறை சிறை சென்றும், மிக முற்போக்கான விடயங்களை முன்வைத்தும் பெண்களைத் தம் வாக்குகளுக்காகப் போராடத் தூண்டிய இவர், இறுதிக்காலத்தில் தடம்புரண்டு போனார் என்னும் கடும் விமர்சனங்களுக்கும் உள்ளானார். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகமயமாதல்

# Globalization

உலகமயமாதல் என்றால் என்ன? தற்போது இது பொருளாதார உலகமயமாக்கல் என்றே கருதப்படுகின்றது. (*Economical Globalization*). அதன் சாதக பாதகங்கள் பற்றியும் பெரும் விவாதங்கள் இன்று நடைபெறுகின்றன. நாளும் பொழுதும் உலகின் ஒவ்வொரு மூலையும் இந்த வலைப் உலகமயமாதல் பின்னலுக்குள் வந்த வண்ணமேயுள்ளன. எனவே இதைப்பற்றிப் பேசுவது தவிர்க்க முடியாததாகி வருகிறது. உலகமயமாதல் என்பதை விளங்கிக் கொள்வதற்கு அதனை ஒருமுறை வரலாற்று ரீதியில் நிறுத்திப் பார்க்க வேண்டும். உலகமயமாதல் என்பதற்கும் ஒரு பரிணாமம் உண்டு. மனித வரலாற்றில் வர்த்தகம் என்பது அவனுடன் கூடவே வளர்ந்து வந்துள்ளது. பல தேசங்களுக்கிடையே, பிரதேசங்களுக்கிடையே வர்த்தகம் நிகழ்ந்துள்ளது. அது தொடர்ச்சியாக நடைபெற்றும் வந்துள்ளது. அப்படியானால் உலகமயமாதல் முன்னைய காலகட்டங்களிலேயே இருந்துள்ளதா? அப்படியானால் அது இன்றைய உலகமயமாதலில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

தற்போதய உலகமயமாதலுக்கும் முன்னைய காலத்தில் நடந்த வர்த்தகத்திற்கும் இடையே பல முக்கிய வேறுபாடுகள் உண்டு. முதலாவதாக சுட்டிக்காட்ட வேண்டிய வேறுபாடு யாதெனில் முன்னைய காலத்தில் தற்போது நடைபெறுவது போல்' பாரிய அளவில் (*Large Quantity*), அதாவது முன்னொருபோதும் இல்லாத அளவில் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படவில்லை. மேலும் எந்த ஒரு நாடும் வர்த்தகம் இல்லாமல் உயிர் வாழக்கூடிய (*Survive*) நிலையில் இல்லை. அதனால் முழு உலகமுமே இன்று 'தங்கிவாழ் தேசங்கள்' (*Dependent states*) என்னும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன. இதிலும் மூன்றாம் உலக நாடுகள் தமது வறுமையின் காரணமாக மிகவும் இக்கட்டான (*Vulnarable*) நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதேவேளை இப்புதிய முறையின்படி, உற்பத்திசெய்து முடிக்கப்பட்டு (*Finished Product*) இறக்குமதியாகும் பொருட்களின் பகுதிகள் பல நாடுகளில் செய்யப்பட்டு பின்னர் ஒரு இடத்தில் கோர்த்து (*Assembled*) முடிக்கப்படலாம். உதாரணமாக ஒரு காரின் என்ஜின் ஒரு நாட்டிலும். டயர்கள் இன்னொரு நாட்டிலும். இருக்கைகள் இன்னோர் நாட்டிலும் செய்யப்படலாம்.

## உழைப்பின் மீது உலகமயமாதலின் தாக்கம்

உலகமயமாதலின் முக்கிய குணாம்சங்களும் அது உழைப்பின் மீது செலுத்தியுள்ள தாக்கமும் கட்டாயம் ஆராயப்பட வேண்டியதாகும். இதனை விளங்கிக் கொள்வதற்கும் தொழிலாள வர்க்கம் எவ்வாறு உலகமயமாதலின் கீழ் பலவீனப் படுத்தப்பட்டுள்ளது என்பதையும் எடைபோடுவதற்கும், உலகமயமாக்குதலுக்கு முன்னர் இருந்த இயந்திரத் தொழிநுட்ப முறைமையினை (*Industrial system*) அறிந்து கொள்ள வேண்டும்.

20ம் நூற்றாண்டில் பெரும்பாலும் Fordist முறையிலேயே பெரும் உற்பத்திகள் நடைபெற்றன. அடுத்து வரும் கேள்வி Fordist Paradigm என்றால் என்ன? அமெரிக்காவில் மிச்சிகன் மாநிலத்தின் Detroit நகரைச் சேர்ந்த Ford குடும்பத்தினரால் நடத்தப்பட்ட தொழிற்சாலைதான் Fordist முறைக்கு வழிகாட்டி, இம்முறையின் கீழ் பெரிய தொழிற்சாலையில் ஒரே தளத்தில் தொழில் பகிர்வின் அடிப்படையில் (*Division of labour*) கார்கள் செய்யப்பட்டன. இங்கு தொழிலாளருக்கு Family wage (அதாவது முழுக் குடும்பத்தையும் பராமரிக்கக் கூடிய சம்பளம்) வழங்கப்பட்டது. Ford



கேஷோஷ்வின் உடைய தத்துவத்தை பின்வருமாறு சுருங்க கூறலாம். 'தொழிலாளருக்கு கொடுக்கப் படும் சம்பளம் அவர்களே உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்க வழிவகுக்க வேண்டும். எனவே Ford தன்னுடைய தொழிலாளருக்கு சம்பளத்தை நிர்ணயித்த போது அவர்கள் உற்பத்தி செய்யும் மோட்டார் வண்டிகளை அவர்களே வாங்கக் கூடிய நிலைமையில் இருக்க கூடியதாகச் செய்தார். உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை (*Market*) இருந்தால் தானே முதலாழித்ததும் பிழைக்கலாம், செழிக்கலாம்.



Henry Ford

எனவே மத்திய படுத்தப்பட்ட (*centralised*) வேலைத்தளம் உயர்ந்த சம்பளம், தொழிற்சங்க உரிமைகள் போன்றன Fordist முறையில் காணப்பட்டன. இதற்கு நேர்மாறான நிலமையே உலகமயமாதலின் கீழ் இன்று உலகெங்கும் காணப்படுகின்றது. முதலாவதாக வேலைத்தளத்தை எடுத்துக் கொள்வோம். Fordist முறையில் மத்திய படுத்தப்பட்ட தொழிற்சாலையிலேயே (*Centralized factory*) உற்பத்தி நடைபெற்றது. ஆனால் இன்று பல்தேசியக் கம்பனிகள் (*Multi National*) தமது உற்பத்திகளை உப ஒப்பந்த அடிப்படையில் (*Sub Contract*) பலரிடம் பகிர்ந்தளித்து செய்து கொள்கின்றனர்

பக்கம் 48 ➞



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இலங்கை அரசாங்கம் என்று ஒன்று உண்டு அவற்றுக்கென்டு தனியே ஓர் குணமுண்டு." என்ன...! எங்கேயோ கேள்விப்பட்ட வாக்குப் போல் தெரிகிறதா? ஆம் தமிழர்களை விழித்து சொன்னதுதான். சில வேளைகளில் அது அப்படியே இலங்கை அரசுக்கும் பொருந்தித்தான் விடுகிறது. "இலங்கையை ஆண்ட சிங்கள அரசுகள் என்றுமே மாறாது.



# இ
# வ ர் க ள் ஏன்?





அவர்களோடு பேசிப் பயனே இல்லை." என்றுதான் 1970களில் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் தம் கவனத்தைச் செலுத்தி அதன்மீது நம்பிக்கை வைத்தனர். உலகெங்குமே ஆயுதப் போராட்டம் என்று வந்துவிட்டால் அதில் இளைஞர்களின் பங்கு பெரிதாக இருப்பதுபோல் தமிழ் சமூகத்திலும் இளைஞர்களே அதில் பெரும் பங்கு வகித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி அண்ணைமார் "எப்படி எங்கட தம்பிமார்களின் சண்டித்தனம்" என சிலவேளைகளில் பெருமையுடனும், "சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்று சில வேளைகளில் சிறுமையுடனும் வர்ணித்தது இந்த ஆயுதப் போராட்டத்தைத்தான்.

ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியும் அதற்கு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவும் மிக உற்சாகமாக இருந்த காலகட்டத்தில் தான் "தமிழன் என்றோர் இனம் உண்டு அதற்கென்று தனியே ஓர் குணமுண்டு" என்பதை அச்சுப் பிசகாமல் நிரூபிக்க எண்ணிய தமிழ் இயக்கங்கள் ஒன்றை ஒன்று மிருகங்கள் போல் அடித்து தின்ன ஆரம்பித்தன. அப்போது தென்னிலங்கையில் இருந்து வெளிவந்த சிங்களப் பத்திரிகை ஒன்றில் யாரோ ஒரு விபரம் தெரிந்த சிங்களவன் பின்வருமாறு எழுதியிருந்தான். "நான் யாழ்ப்பாணத்தில் கனகாலம் வாழ்ந்திருக்கிறேன். எங்களை 'மோட சிங்களயாக்கள்' என்று என் காது கேட்கவே அவர்கள் பேசுவார்கள். ஆனால் எமது அரசாங்கங்கள் எந்தப் பயமுமின்றி இந்த 'மோட தமிழர்களுக்கு' தமிழ் ஈழம் கொடுக்கலாம். ஒரு வருடத்தில் தமக்குள்ளேயே அடிபட்டுக் கொண்டு எங்களிடம் ஓடி வருவார்கள். அப்போது தெரியும் மோடயாக்கள் சிங்களவர்களா? தமிழர்களா? என்பது"

பாருங்கள் சிங்களவனை விழித்துச் சொன்ன "மோட்டுச் சிங்களவன்" அடைமொழி தமிழர்களுக்கு எவ்வளவு அழகாகப் பொருந்தி விட்டது. அதை அப்படியே அச்சுப் பிசகாமல் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான் இன்று புத்திசாலித் தமிழன்.

எல்லாரையும் கடித்துக் குதறி ஏப்பம் விட்டு இன்று இறுதியில் ஒரு பெருமிருகம் தானே தமிழர்களின்





ஏக தலைவன் என்றும், தன்னைக் கண்டு அஞ்சி சிங்கள மோட்டு ஆட்சியாளர்கள் தமிழனுக்கு நாடு பிரித்துத் தந்தால் உண்டு, இல்லையேல் தமிழனுக்கு எதுவுமே இல்லை என ஊளையிட்டுக் கொண்டு இருக்கிறது.

இதையே சாதாரண தமிழ்க் குடிமக்கள் தமது சொந்த சொற்களில் "இவர்களும் இல்லாவிட்டால் சிங்களவன் எங்களுக்கு எதுவுமே தரமாட்டான் எனவே இவர்களின் காலத்திலேயே எதையாவது பெற்றுவிட வேண்டும். இவ்வளவும் அழிந்து போய் விட்டது இன்னும் கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு இதற்கு ஒரு நல்ல முடிவு கண்டுவிடுவோம்." என எந்த வித வெளிப்பூச்சுக்களும் இன்றி தம் கருத்தை தெரிவிக்கின்றனர்.

"வலிமை இழந்து அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ் இனத்தை வலிமை மிக்கதொரு இனமாக தலைநிமிர்ந்து நிற்க வைத்திருப்பவர் நம் தேசியத் தலைவர். அவரின் அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகளால் தமிழ் இனத்தின் துரோகிகளும், இலங்கை அரசுகளும் திக்குமுக்காடிப் போய் இன்று மண்டியிட்டு நிற்பது மட்டுமன்றி, இந்திய அரசும் கூட மூக்கு உடைபட்டுப் போய் நிற்கிறது." என கூறுவதுடன் அத்தலைவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கிறோம் என்று பெருமையுடனும் இதய சுத்தியோடும் வாதிடும் ஒரு பலமான பிரிவினரும் தமிழ் சமூகத்தில் உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை தலைவர் தமிழீழம் எடுத்தே தீருவார் என நம்புகின்றனர்.

www.tamilarangam.net



# அவர்களின் பிட்டத்தையே நக்குகிறார்கள்

பிட்டம் பெ. ஆசனவாயை ஒட்டியிருக்கும் திரண்ட சதைப் பகுதி; (of persons) bottom; buttocks; (of animals) rump. இந்த ...யைப் பிட்டத்தில் போட்டுக்கொண்டால் ...ாக வலிக்காது.

மேலே கூறப்பட்ட இரு தர்க்கங்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் இது தொடர்பாக பல மணி நேரம் வாதிடலாம், அவற்றை மறுக்கலாம். அல்லது ஏற்றுக் கொள்ளாமலேயே காலம் முழுதும் வாழ்ந்துவிட்டும் போகலாம். ஆனால் ஒரு முக்கியமான விடயம் பற்றி இவர்கள் விவாதிக்காமல் அல்லது கேள்வி கேட்காமல் இருந்துவிட முடியாது. குறிப்பாக தமிழ் சமூகத்தில் மாற்று அரசியல் ஒன்றை செய்யவேண்டும் என கருதி மேற்சொன்ன தர்க்கங்களை விவாதிப்பவர்கள் இக்கேள்வியை கேட்டேயாக வேண்டும்.

**கேள்விக்குரிய யதார்த்தம்**

***இலங்கையை ஆண்ட அரசாங்கங்கள், அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி தமிழ் மக்களுக்கு அல்லது இலங்கை வாழ் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இலங்கை தேசத்தில் சுதந்திரமான வாழ் உரிமையை யாப்பியல் ரீதியாக பகிர்ந்தளிக்க இதய சுத்தியோடு விரும்பியனவா? அல்லது விரும்புகின்றனவா?*** என்னும் கேள்வி இங்கு மிக முக்கியமானது.



இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல்வேறு காரணங்களுக்காக கடந்த 15 வருடங்களாக பல்வேறு முன்மொழிவுகள், தீர்வுக்கான வரைவுகள் முன்வைக்கப் பட்டுள்ளனவே ஒழிய, "யார் எதிர்த்தாலும் அதை நிறைவேற்றியே தீருவோம்" என்கின்ற அரசியல் பற்றுதியுடன் (Political will) எவ்வித நடவடிக்கையும் இவ் அரசாங்கங்களால் மேற்கொள்ளப் பட்டனவா? என்பது சந்தேகமே. அது மட்டுமன்றி தமிழ் சமூகத்தில் அதிதீவிர பிரிவினைவாத கருத்தைக் கொண்ட சக்திகளோடும், மிதவாத கருத்தைக் கொண்டவர்களோடும், இடைநடுவிலான கருத்தைக் கொண்ட சக்திகளோடும் பல்வேறு தருணங்களில் இவ் அரசாங்கங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன்வந்தாலும் எந்த மட்டத்திலான சக்திகளோடும் ஆக்கபூர்வமான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு இலங்கை அரசாங்கங்கள் தவறியுள்ளமை தனியே தமிழ் தரப்பினரால் மட்டும் இழைக்கப்பட்ட தவறுகளால்தான் என்று கூறமுடியுமா?.

'தமிழர்களின் அரசியலானது நாட்டைப் பிரிக்கும் நோக்கிலும், சிங்களப் பெரும்பான்மைக்கு எதிரானதாகவும் செயற்படுத்தப் படுவதால், தம்மால் சிங்கள மக்களை நம்பவைத்து ஒரு தீர்வுக்கு ஆதரவாக அவர்களை இணங்க வைக்க முடியவில்லை' என்று ஒருபுறமாக கூறும் இவ் அரசாங்கங்கள் மறுபுறமாக தமிழ் சமூகத்தின் அதி தீவிரப் பிரிவினரான ஒரு ஜனநாயக மறுப்பு பாசிசக் கும்பலுடன் மாத்திரம் மிக நெகிழ்ந்து, கூனிக்குறுகி அதன் கு.......யை நக்கும் நிலைக்கும் சென்று அவர்களை திருப்திப்படுத்த முனையும் மர்மம் என்ன? இதை அரசியல் ரீதியாக எவ்வாறு புரிந்து கொள்வது? விளக்குவது?

இன்றைய நிலைமையை எடுத்துப்பார்த்தால் சந்திரிக்கா, ரணில் ஆகிய இரு பேரினவாத பிரதிநிதிகளும், யார் மிக அதிகமாக இவ்ஜனநாயக விரோதப் பாசிசக் கும்பலை திருப்திப் படுத்துவது என்னும் போட்டியிலேயே இறங்கியுள்ளனர். அந்த தமிழ் பாசிசக் கும்பலோ "சந்திரிக்காவை விட ரணில் தம்மை அதிகம் திருப்திப் படுத்துவார்" என பிரச்சாரம் செய்வதோடு அக்கருத்தையே சகல ஊடகங்களுக் கூடாகவும் தமிழ் சமூகத்தில் அழுத்தமாகப் பதித்து வருகிறது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தன் தீர்வை வைக்கப்போகிறது என்பதை இதுவரை தெளிவாகக் கூறியதே கிடையாது. அதற்காக பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் எவ்வித அரசியல் கலந்துரையாடலையும் ரணிலின் ஐ.தே.மு. (UNF) அரசு ஏற்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் சந்திரிக்கா அரசைவிட நன்மையான தீர்வை முன்வைப்பார்கள் என்று தமிழர்கள்



நம்பக் கூடிய வகையில் அவர்கள் பெரும் நாடகமாடுவதோடு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் ஒரு பாசிசக் கும்பலோடு கைகோர்த்து இன்னும் பல காலம் சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்கான செயற்பாட்டிலேயே அவர்கள் முழுமூச்சாக உள்ளனர்.

சந்திரிக்காவின் பொதுஜன முன்னணி (PA) அரசைப் பொறுத்தவரை 1994 தேர்தல் வெற்றியோடு பெரும் எடுப்பில் அரசியல் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஊடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறியதோடு, இரண்டு வருடங்களின் பின்னர் ஒரு தீர்வுப் பொதியை வைத்ததோடு நின்று விட்டதே ஒழிய பெரிதாக எதுவும் சாதிக்கப்படவில்லை. 1997ம் ஆண்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப் பொதியும் கூட 2000ம் ஆண்டு சந்திரிக்காவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் போது பல்வேறு விடயங்களில் சாரமிழந்து போய்க் காணப்பட்டது. அவ்வாறு சாரமிழப்பதற்கு அவர் கூறிய காரணம் ஐ.தே.கவினரின் இனவாத ரீதியான அழுத்தம் என்பதேயாகும். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நடந்த மிகச் சிறந்த விடயம் என யாராலும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவும் கருதப்படவும் கூடியது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரந்தளவில் பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தினரிடையே அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட்டு அச்சமூகத்திற்குள் ஓரளவிற்கு ஏற்பட்ட அரசியல் மனமாற்றத்தைக் கூறலாம்.

ஆனால் இறுதியாக பார்க்கின்ற பொழுது இவ்விரு அரசுகளும் சாதித்திருப்பது யாதெனில் மிதவாத நிலையில் இருந்த தமிழ் சக்திகளையும், அதிதீவிர இராணுவவாதப் போக்கில் இருந்து விலகி பாராளுமன்ற அரசியலுக்குள் வந்திருந்த தமிழ் சக்திகளையும் மீண்டும் ஒட்டு மொத்தமாக ஒரு ஜனநாயக விரோத அதிதீவிர பிரிவினைவாத பாசிச சக்தியின் கரங்களுக்குள் தள்ளி விட்டிருப்பதுதான். இன்று இவ்விரு அரசுகளுமே

**- பெரும் பான்மையான சிங்கள மக்கள் அதிக சந்தேகத்தோடு பார்க்கின்ற,**

**- அதிதீவிர சிங்கள இனவாத சக்திகள் கடுமையாக எதிர்க்கின்ற,**

**- முஸ்லீம் மக்கள் மிகவும் அச்சத்துடன் நோக்குகின்ற,**

**- தமிழ் சமூகத்தில் ஜனநாயக செயற்பாட்டையும் பல கட்சி அரசியல் பண்பாட்டைப் பேணவும் முயற்சிக்கின்ற ஜனநாயக சக்திகள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற**

ஓர் அதிதீவிர இராணுவவாத பாசிச ஸ்தாபனத்தின் தீர்வு முன்மொழிவுகளை கலந்துரையாடுவதும் அந்த சக்தியின் கைகளில் வடகிழக்கின் ஆட்சியை அல்லது நிர்வாகத்தை ஒப்படைக்கும் நோக்கில் செயற்படுவதும்தான். இது மிக மிகக் கவனமாக அரசியல் ரீதியாக ஆராயப்பட்டு தடுக்கப்பட வேண்டிய விடயம் அல்லவா?

### ஒப்பேறாத தீர்வுகள்

இலங்கையில் சிறுபான்மை இனமக்களின் பிரச்சினைக்கு நடைமுறைப் படுத்தப்பட்ட தீர்வாக 1987ம் ஆண்டு இந்தியாவின் சட்டம்பித் தனத்தோடு முன்வைக்கப்பட்ட தீர்வு ஒன்றையே இன்றும் கூற முடியும். "இந்தியா பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற நிலையில் இருந்தே இவ்விடயத்தில் செயற்பட்டதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தியாவின் அந்நிலைப்பாட்டுக்கு இலங்கை அரசும், இந்திய அரசும் மட்டுமன்றி தமிழ் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் கூட கணிசமாக பொறுப் பேற்றாக வேண்டும். ஆனால் அத்தீர்வு அரை வேக்காட்டுத் தீர்வாக இருப்பினும் அது இலங்கை அரசாலும், சிங்கள அரசியல் சக்திகளாலும், பெரும்பான்மை சிங்கள சமூகத்தாலும் மனமுவந்து முன்வைக்கப்பட்ட தொன்றாக எவரும் வாதிட முடியாது. மாறாக இலங்கையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் எதிர்ப்புக் கோஷம் எழுப்ப, நாடே தீப்பற்றி எரிய இந்தியாவின் பலாத்காரத்திற்கு அடிபணிந்து முன்வைக்கப்பட்ட தீர்வாகவே அது இருந்தது. எனவே இத்தீர்வு பற்றி அரசியல் ரீதியாக பெருமைப்பட்டுப் பேசுவதற்கு எதுவுமே கிடையாது.

ஆனால் அவ்வாறு கிடைத்த அரை வேக்காட்டுத் தீர்வையேனும் கைப்பற்றிக் கொண்டு அடுத்த கட்டத்திற்குப் போராட்டத்தை நகர்த்துவது, அப்போதைய நிலையில் அரசியல் சாணக்கியமாக இருந்தாலும் அந்த அரை வேக்காட்டுத் தீர்வை தமிழ் மக்கள் உருசித்து அதை அவர்களே நிராகரிப்பதற்கு முன்னரே மாவீரர்கள் அதை அடுப்புக்குள் கவிழ்த்தார்கள். அதைக் கவிழ்ப்பதற்கு தமக்கு உதவியாக இருந்த உச்ச இனவாதியும் ஜனநாயக விரோத அரசியல்வாதியும் ஜனாதிபதியுமான பிரேமதாசாவுடன் மாவீரத் தலைவர்கள் அப்போது 'அரசியல் கலவியில்' ஈடுபட்டுக் கொண்டுதான் அதைச் செய்தார்கள் என்பதே இதில் முக்கியமான விடயம்.

**இரு அரசுகளும் சாதித்திருப்பது யாதெனில் மிதவாத தமிழ் சக்திகளையும், அதிதீவிர இராணுவவாதப் போக்கில் இருந்து விலகி பாராளுமன்ற அரசியலுக்கு வந்த தமிழ் சக்திகளையும் மீண்டும் ஒட்டு மொத்தமாக ஒரு ஜனநாயக விரோத அதிதீவிர பிரிவினைவாத பாசிச சக்தியின் கரங்களுக்குள் தள்ளி விட்டதுதான். இரு அரசுகளுமே பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அதிக சந்தேகத்தோடு பார்க்கின்ற, தீவிர சிங்கள இனவாத சக்திகள் எதிர்க்கின்ற, முஸ்லீம் மக்கள் மிகவும் அச்சத்துடன் நோக்குகின்ற, தமிழ் சமூகத்தில் ஜனநாயக செயற்பாடு, பல கட்சி அரசியல் என்பதை பேண முயற்சிக்கின்ற சக்திகள் ஏற்க மறுக்கின்ற ஓர் அதிதீவிர இராணு வவாத பாசிச ஸ்தாபனத்தின் முன் மொழிவுகளை கலந்துரையாடி அந்த சக்தியின் கைகளில் வடகிழ க்கின் ஆட்சியை அல்லது நிர்வாகத்தை ஒப்டைக்க முயலுவதே.**

"அண்ணன் பிரேமதாசா எம்மோடு நிபந்தனை இன்றிப் பேசுகிறார். எனவே நாங்கள் தம்பிமார் அவரோடு பேசி, அண்ணன் தம்பி பிரச்சினையை எமக்குள்ளே தீர்க்கப் போகின்றோம்" என்ற கோதாவில் ஆயுதம், பணம், வெடிமருந்துகள் என்பன பெருந்தொகையில் கைமாறப்பட்டதோடு, தமிழ் சமூகத்தில் அரசியல் செயற்பாட்டில் ஆர்வத்தோடு செயற்பட்ட பல்லாயிரக் கணக்கானோர் கொலை செய்யப்பட்டதே அன்று நடந்தது. ஆயுதங் களையும் கோடிக்கணக்கான பணத்தையும் இந்த தமிழ் கொலைகாரச் சக்தியிடம் எந்தவிதமான நிபந்தனையுமின்றி வழங்கத் தயாராயிருந்த அண்ணன் பிரேமதாசாவின் அரசு, தன் இறுதிக் காலம் வரை சிறுபான்மை மக்களின் பிரைச்சினைக்கு எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கவோ அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோ இல்லை. அதை புலிகள் அவரிடம் கேட்க்கவும் இல்லை.

### வாய்ப்புக்கள் இருந்தும் வக்கற்றிருந்தவர்கள்

1977ம் ஆண்டு ஐ.தே.க. பாராளுமன்றத்தில்

**- ஆறில் ஐந்து (5/6) பெரும்பான்மையை தன் கைவசம் வைத்திருந்தும்,**

**- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மிகப் பலம் இழந்து போயிருந்த நிலமையிலும்,**

**- ஜே.வீ.பி அமைப்பு பெரும்பாலும் சிறைச்சாலைக்குள்ளே அடைபட்டு இருந்த நிலைமையிலும்,**

**- ஆயுதம் ஏந்திய தமிழ் இயக்கங்கள் மிக மிக ஆரம்ப நிலையில் இருந்ததும்,**

**- பாராளுமன்றத்தில் பிரதானமான எதிர்க் கட்சியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்ததுமான மிக மிக வாய்ப்பான அரசியல் சூழ்நிலையிலும்கூட,**

சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக ஐ.தே.க. எதையுமே முன்வைக்கவில்லை. முன்வைக் கப்படுவதற்கான அரசியல் அவசியப்பாடும் அவ்வரசிற்கு இருக்கவில்லை. அந்தளவு வாய்ப்பான அரசியல் சூழ்நிலை இனி எந்த ஒரு அரசிற்கும் வரப்போவது இல்லை.

1994ம் ஆண்டு தேர்தலில்

**- பொதுஜன ஐக்கிய முன்னணி (PA) வெற்றி பெற்ற நிலைமையும்,**

**- ஐக்கிய தேசிய கட்சி 17 வருட அதன் ஒடுக்குமுறை ஆட்சியினால், பெரும்பான்மை சிங்கள மக்களிடையே வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய ஓர் கொலைகாரக் கட்சியாக பார்க்கப்பட்ட நிலமையும்,**

**- ஜே.வி.பி யைப் பொறுத்தவரை மீண்டும் தம்மை ஜனநாயக வாதிகளாக மக்களிடையே காட்டிக் கொள்வதற்கு அரும் பாடுபட வேண்டிய நிலமையையும்,**

www.tamilarangam.net



***- அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்த அரசியல் கூட்டுக்கும் போக முடியாது இருந்த நிலமையையும்,***
***- பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் யுத்தத்திற்கு எதிரான கருத்து மேலெழுந்து காணப்பட்ட நிலமையும்,***
***- தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF), முஸ்லீம் காங்கிரஸ் (SLMC), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (EPRLF) போன்ற கட்சிகள் அனைத்துமே அதி தீவிர தமிழ் பாசிச ஜனநாயக விரோத சக்தியான புலிகள் இயகத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து சந்திரிக்கா அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருந்த வாய்ப்பான சூழ்நிலையும்,***
***- வரலாற்றில் என்றும் இல்லாதபடி சகல இன மக்களின் அதிக நம்பிக்கையைப் பெற்றவராக சந்திரிக்கா 64% வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலில் பெற்றிருந்ததும்,***
***- இந்தியா இலங்கையில் பிரிவினைக்கு எதிராகவும் தமிழ் பாசிச சக்தியை ஓரம் கட்ட தயாராகவும் இருந்த வாய்ப்பான சூழ்நிலையிலும் கூட***

*சந்திரிகா அரசுக்கு இனப்பிரைச்சினைக்கான தீர்வாக சரியாக முன்வைத்து நகர்த்தப் படுவதற்கான தீர்வுத் திட்டமோ, அரசியல் தொலைநோக்கோ, பற்றுறுதியோ, அவசியப் பாடோ இருக்கவில்லை. அந்த வாய்ப்பான அரசியல் சூழ்நிலையும்கூட இனி எந்த ஒரு கட்சிக்கும் வருமா என்பது சந்தேகமே.*

*பின்னர் காலம் தாழ்த்தி சந்திரிகா அரசாங்கத்தால் 2000ம் ஆண்டு பாராளுமன றத்தில் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவ லாக்கல் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படாமலேயே குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. அதற்கான முழுப் பொறுப்பையும் இல்லாவிட்டாலும் கணிசமா னளவு பொறுப்பை சந்திரிகாவின் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். சந்திரிகாவின் இரண்டாவது ஆட்சிக்காலம் முழுவதும் தம் அரசுக்குள்ளான உள் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இழுபறிப் படுவதிலேயே கழித்ததே ஒழிய இனப் பிரைச்சினைக்கான தீர்வு முயற்சி என்பது பின் தள்ளப்பட்டே சென்றது.*

**சமாதானப் போர்வையில் ஒரு சதி**

*2001 ம் ஆண்டுத் தேர்தலும் அதன் பின்னால் ஆட்சிக்கு வந்த ரணிலின் கூட்டரசாங்கம் (UPF) செய்ததெல்லாம் தமிழ் பாசிச பயங்கரவாதத்தை சர்வதேச அங்கீகாரத்துடன் தமிழ் முஸ்லீம் சமூகங்கள் மீது கட்டவிழ்த்து விட்டதுடன் தத்தமது அரசியல் இருப்புக்களுக்கும் பாதுகாப்புக்குமாக யுத்த நிறுத்த இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டதுதான். அந்த ஒப்பந்தமானது நீண்டகால அடிப்படையில் தமிழ் சமூகத்திற்குப் பாரிய பாதிப்பை விளைவிக்கக் கூடியதாக இருந்தும் அதற்குப் கபடத்தனமாக பூசப்பட்டிருக்கும் சமாதான முலாமினால் தமிழ் சமூகத்தில் எவருமே அதனை பகிரங்கமாக எதிர்க்க முடியாதபடி செய்யப் பட்டிருக்கிறது. ரணிலின் அரசாங்கம் தன் இரு வருட ஆட்சிக்காலத்தில் செய்ததெல்லாம் நாட்டில் ஒரு மூலைக்குள் ஒதுக்கப்பட்டிருந்த ஒரு நாசகார பாசிச சக்தியை நாடு முழுவதும் சுதந்திரமாகப் பரவ விட்டதும், தமிழ் சமூகத்தை மேலும் பீதி நிறைந்த மௌனத்திற்குள் தள்ளியதுதான்.*

*ரணிலின் இந்தச் சதிகாரச் செயற்பாட்டை ஜே.வீ.பி.யுடன் சேர்ந்து கடுமையாக எதிர்த்து நாட்டின் இறைமைக்கும் தேசியப் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் வந்துவிட்டது என கூச்சலிட்டு ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சியைப் கைப்பற்றிய சந்திரிகா, ஜே.வீ.பி. கூட்டு அரசாங்கம், தாமே முன்வந்து ஒரு தீர்வை முன்வைத்து தமிழ் பாசிச சக்தியை அரசியல் ரீதியாக சவால்விட வக்கில்லாமல், தான் 2000ம் ஆண்டு முன்வைத்த தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் முழுமையான சமஷ்டி ஆட்சிக்கான முன் மொழிவொன்றை வைக்கத் திராணியில்லாமல், ரணில் அரசு நடைமுறைப்படுத்திய அதே நாசகாரத் திட்டத்தையே தொடர்ந்து மேற்கொள்ளுகிறது.*

*அதேவேளை சந்திரிகா அரசின் பிரதான பங்காளியான ஜே.வீ.பி. இன்னமும் சிறுபான்மை மக்களின் பிரைச்சினைக்குத் தீர்வாக முழுமையான அதிகாரப் பரவலாக்கல் என்னும் கருத்தை வெளிப்டையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தாம் அரசியல் ரீதியாக அதிகாரத்திற்கு வருவதற்காக சிங்களத் தேசியவாதத்தைத் தூக்கிப் பிடித்தபடியே அது தன்னுடைய அரசியலை அரங்கேற்றி வந்துள்ளது. அரங்கேற்றி வருகிறது. இந்த நிலைப்பாட்டினால் அவர்கள் இடதுசாரித்துவம் பேசினாலும் அது சிங்கள இனவாத இடதுசாரித்துவமாகவும், தமிழ் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களுக்கும் எதிரானதாகவே சகல சிறுபான்மை அரசியல் சக்திகளாலும் தமிழ் மக்களாலும் பார்க்கப் படும்.*

> ***சிறுபான்மை மக்களின் பிரைச்சினைக்கு உருப்படியான தீர்வை முன்வைத்து, அச்சமூகத்திற்கான கௌரவத்தை வழங்கி, அதனோடு சரிசமமாக கைகோர்த்து முன்செல்லக்கூடிய அரசியல் பக்குவம் இல்லாத அரசாங்கங்கள் தொடர்ந்தும் வி.பு. களின் பிட்டத்தை நக்குவதன் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப் படுத்துவதாக நாடகமாடுகின்றனர். இவர்களின் இந்த சுத்துமாத்தை அரசியல் ரீதியாக சரியாகப் புரிந்து கொண்டு இவர்களை தோலுரித்து அம்பலப்படுத்தியாக வேண்டும். ஒரு கொடிய கொலைகாரக் கும்பலுக்கு தேசிய, சர்வதேச ரீதியாக நியாயாதிக்கத்தை (Legitimacy) வழங்கி அதன் கால்களுக்குக் கீழ் சிறுபான்மை இனங்களைத் தள்ளிவிட்டு நீண்ட காலத்தில சிறுபான்மை மக்களுக்கான ஜனநாயக இருப்பையே அழிப்பதுதான் சதித்திட்டத்தின் மூலமாகும்.***

*இன்றும் நிலமையில் பாரிய மாற்றம் எதுவும் வருவதற்கான சாத்தியப்பாடுகள் கிடையாது. நிரந்தரத் தீர்வு என்பதற்கான ஆரம்பச் சுவடே தெரிவதாக இல்லை. தமிழ் சமூகத்தின் சுதந்திரமான செயற்பாடுகள் அனைத்தையும் தன் துப்பாக்கி முனையில் ஆட்டிப் படைக்கும் ஒரு கொலைகாரக் பாசிசக் கும்பல் தமிழ் சமூகத்தை சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக வர வர பலவீனப்படுத்துவதற்கே வழிசமைத்துக் கொடுக் கப்பட்டுள்ளது.*

*சிறுபான்மை மக்களின் பிரைச்சினைக்கு உருப்படியான தீர்வை முன்வைத்து அச்சமூ கத்திற்கான கௌரவத்தை வழங்கி அதனோடு சரிசமமாக கைகோர்த்து முன்செல்லக்கூடிய அரசியல் பக்குவம் இல்லாத அரசாங்கங்கள் தொடர்ந்தும் புலப் பாசஸ்டுக்களின் பிட்டத்தை நக்குவதன் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப் படுத்துவதாக நாடகமாடுகின்றனர். இவர்களின் இந்த சுத்துமாத்தையும் உள் நோக்கத்தையும் அரசியல் ரீதியாக சரியாகப் புரிந்து கொண்டு இவர்களை தோலுரித்து அம்பலப்படுத்தியாக வேண்டும். ஒரு கொடிய கொலைகாரக் கும்பலுக்கு தேசிய, சர்வதேச ரீதியாக அரசியல் நியாயாதிக்கத்தை (Legitimacy) வழங்கி அதன் கால்களுக்குக் கீழ் சிறுபான்மை இனங்களைத் தள்ளிவிட்டு நீண்ட காலத்தில் சிறுபான்மை மக்களுக்கான ஜனநாயக இருப்பையே அழிப்பதும், தமிழ் சமூகத்தில் முற்போக்கான சக்திகள் முளைவிடுவதைத் தடுப்பதும்தான் இச் சதித்திட்டத்தின் மூலமாகும். இதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.*

www.tamilarangam.net



**சமாதானச் சதியின் மறுபக்கம்**

இந்த சமாதானச் சதித்திட்டத்தின் மறுபக்கத்தைப் பார்க்க வேண்டுமானால் இதில் நேரடிப் பங்காளர்கள், மறைமுகப் பங்காளர்கள், மற்றும் பின்னால் நின்று காவடி தூக்கி அரோகராப் போடுபவர்கள் என எல்லோரையும் சரியாக அடையாளம் காண வேண்டும். இல்லாவிட்டால் நாமும் எம்மையறியாமலேயே இவர்களுக்குப் பின்னால் அரோகராப் போடும் கூட்டமாக மாறிவிடும் வாய்ப்புக்கள் உண்டு.

**உண்மையான, நிரந்தர சமாதானத்துக்கான கோஷம் என்பது வெறும் அரோகராப் போடும் விடயமல்ல. அது இன்று தீவிர அரசியல் கோஷமாக மாற்றப்பட வேண்டும். இல்லாவிடில் கொலைகாரருக்கும் கொள்ளைக்காரருக்கும் தேவைப்படும் ஒரு சுடுகாட்டு அமைதி நிலையே சமாதானம் என்று இலங்கையில் உருவாக்கப்படும். அதற்கு அவர்களே நிரந்தர சமாதானம் எனப் பெயர் சூட்டிக் கொள்வார்கள்.**

இன்று இலங்கையில் நடக்கும் சமாதான முயற்சியில் சர்வதேச சக்திகளாக நேரடியாக ஈடுபடுபவர்கள்: **நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து அமெரிக்கா.** மறைமுகமாக ஈடுபடுபவர்கள் : **கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா.**

இவர்கள் எல்லோருக்கும் தனித்தனியான அரசியல் தேவைகளும் வேலைத்திட்டங்களும் உள்ளன. இத் தமிழ் பாசிசக் கும்பலிடம் வடகிழக்குப் பிரதேசம் ஒப்படைக்கப் படுவதிலும் இவர்களுக்கு தனியான இலாப நட்டங்கள் உள்ளன. ஆனால் அவை தமிழ் மக்களின் வாழ் நலன் சம்பந்தப்பட்டவையா என்பதில் அவர்களுக்கு பெரிதாக அக்கறை கிடையாது. அவர்களின் அக்கறையெல்லாம் 'இந்தமிருகம் தங்களின் சொல்வழி கேட்கும் சர்க்கஸ் மிருகமாக இருக்குமா?" என்பதுதான். இவர்கள் இலங்கை அரசுகளுக்கு கொடுக்கும் உத்தரவாதம் என்ன? "இந்த மிருகத்தை நாங்கள் ஒரு வழிக்கு கொண்டுவந்து சிங்கள அரசுகளையும் அதன் தலைவர்களையும் கடிக்காத மிருகமாக மாற்றித் தருவோம்". என்பதே.

**இந்த இரண்டு மிருகங்களுமே ஆட்சியில் இருக்கும் வரை தமிழர்களும் சிங்களவர்களுக்குமிடையே உண்மையான அரசியல் புரிந்துணர்வு வர அனுமதிக்க மாட்டார்கள் என்பதே உண்மை. ஒன்றைக் காட்டி மற்றது மக்களை அச்சத்துக்குள் வைத்தே ஆட்சியை நடாத்தும். அடுத்த சந்ததியையும் தமது யுத்த அரசியலின் துப்பாக்கிச் சன்னங்களாகவே உருவாக்குவார்கள். இப்போது மோதிக்கொண்டு செய்யும் தமது இனவாத அரசியலை பின்னர் இருசாராரும் ஒருவரை ஒருவர் பொய்யாக சொட்டிக் கொண்டு இதைவிட சிறப்பாகச் செய்யலாம்.**

இந்த சர்வதேச சக்திகளைப் பொறுத்தவரை இலங்கையில் தமது முதலீடு, அதற்கான சுமுகச் சூழ்நிலை, அத்திட்டங்களுக்கு தாம் வழங்கும் நிதி இந்த அற்ப யுத்தத்தில் செலவாகிறது என்பவையே கவலை. சர்வதேச பொருளாதாரக் கொள்கை, அரசியல் அதிகாரக் காய் நகர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகப் பார்க்கின்ற போது சிங்களப் பேரினவாத மிருகத்துக்கும் தமிழ் பாசிச மிருகத்துக்குமிடையே பாரிய வேறுபாடு கிடையாது. இரண்டும் அடி விட்டையும் நுனி விட்டையும் தான். (நாய் விட்டையில் அடியென்ன நுனியென்ன). எனவே இவர்களைச் சேர்த்துப் பிடித்து இந்த சமாதான பம்மாத்துக் கலியாணத்தை ஒப்பேற்றி விட்டால், பிறகு சுதந்திரமாக தங்கள் வியாபாரத்தைத் தொடங்கலாம்.

பிறகு உலகமயமாக்கல், ஜனநாயகம், மனித உரிமை எனக் கூறிக்கொண்டு புறப்படும் மக்கள் போராட்டம், மசிர்ப் போராட்டம் எல்லாவற்றையும் இந்த இரண்டு மிருகங்களுமே பார்த்துக் கொள்ளும். இவை இரண்டுமே ஆட்சியில் இருக்கும் வரை தமிழர்களும் சிங்களவர்களுக்குமிடையே உண்மையான அரசியல் புரிந்துணர்வு வர அனுமதிக்க மாட்டார்கள் என்பதே உண்மை. ஒன்றைக் காட்டி மற்றது மக்களை அச்சத்துக்குள் வைத்தே ஆட்சியை நடாத்தும். அடுத்த சந்ததியையும் தமது யுத்த அரசியலின் துப்பாக்கிச் சன்னங்களாகவே உருவாக்குவார்கள். இப்போது மோதிக்கொண்டு செய்யும் தமது இனவாத அரசியலை பின்னர் இருசாராரும் ஒருவரை ஒருவர் பொய்யாக சொட்டிக் கொண்டு இதைவிட சிறப்பாகச் செய்யலாம். சகல மக்கள் தரப்பினரும் வலு அற்றவர்கள் ஆக்கப்படுவர்.

அடிப்படையில் இந்த தமிழ் பாசிசவாத அமைப்பின் கீழ் குறிப்பாக தமிழ் மக்கள் மந்தைகளாக்கப் படுவதற்காக நடக்கும் இந்த சர்வதேச முஸ்தீபுகளையும் நாம் இன்று இனம்காண வேண்டும்.



இதில் சடுதியான மாற்றங்கள் தானாக நிகழ்வதற்கு உடனடி சாத்தியப்பாடுகள் இல்லை. இந்நிலமையில் மாற்றம் ஏற்படுவதை இச்சக்திகள் அனுமதிக்கப் போவதுமில்லை. மாறாக இச் சக்திகள் தமது இருப்புக்காக சகல சமூகங்களையும் குறிப்பாக தமிழ், முஸ்லீம் சமூகங்களை பலவீனமாக்கி வெறும் பகடைகளாக வைத்திருப்பதற்கான திட்டங்களையே தொடர்ந்தும் முன் கொண்டு செல்லும்.

அதேவேளை இந்த சமாதான சதித் திட்டத்தை விமர்சிப்பவர்களையும் இதில் மக்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் என வலியுறுத்துவோரையும் கண்டதும் "இதோ யுத்தம் வந்துவிடப் போகிறது...! இவர்கள் சமாதான விரோதிகள்..! யுத்த வெறியர்கள்...!" என கூக்குரலிட்டு அவர்களின் வாயடைக்க முனைகின்றனர்.

இந்த மாய வலைக்குள் சிக்காது, இவர்களின் பிரச்சாரங்களுக்குள் இழுபட்டுப் போகாது, இவர்களின் மிரட்டல்களுக்கு அடிபணியாது செயல்பட களமிறங்க வேண்டிய தருணமிது. சிதறிக்கிடக்கும் ஜனநாயக சக்திகளையும், தமிழ், முஸ்லீம் உட்பட சகல சிறுபான்மை மக்களின் உண்மையான அபிலாசைகள், உரிமைகள் என்பவற்றை விலைபேசாது முன்செல்லக்கூடிய அனைத்துத் தரப்பினரையும் ஓரணியில் சேர்த்து எம்மை பலப்படுத்திக் கொள்வோம். இச்சதிகாரர்களோடு மோதுவதற்கு எமக்கும் அதிக பலம் அவசியம்.

**-ஆன்டோனியோ-**

www.tamilarangam.net






# யுத்தக் காய்சல்


பரனைற் 9 /11 (FAHRENHIET.9/11) என்பது தற்போது வட அமெரிக்கா எங்கும் பரபரப்பாகப் பேசப்படும் ஒரு விவரணத் திரைப்படம். (Documentary Film). அத்தி ரைப்படம் வெளிவந்ததைத் தொடர்ந்து சினிமா ஊடகவியலாளர் (Film Journalist) வரிசையில் அதி பயங்கரமானவராக இத்திரைப் படத்தை எழுதி இயக்கிய மைக்கல் மூர் (Michael Moore) வர்ணிக்கப்படுகின்றார். யார் இந்த பயங்கரமான மைக்கல் மூர்...?

2002 ஆண்டு சிறந்த திரைப்படங்க ளுக்கான ஒஸ்கார் விருது வழங்கப் படுகின்ற பொழுது கோடிக்கணக்கான மக்கள் அக்காட்சியை நேரடியாக தொலை க்காட்சியில் பார்த்த வண்ணம் இருந்தனர். வானதிரும் கரகோஷமும், கண்ணைப் பறிக்கும் மின்விளக்குகளின் வர்ண ஜாலங்களும், தம் விருதுகளைப் பெற மேடைக்கு வந்து போகும் சர்வதேச புகழ் பெற்ற சினிமா நட்சத்திரங்களும் பார்வையாளர் மனங் களை ஆட்கொண் டிருந்தன.

அப்போதுதான் 2002 ஆண்டிற்கான சிறந்த விவரணத் திரைப்படத்தின் பெயர் வாசிக்கப்பட்டது. திரைப்படத்தின் கதை வசனத்தை எழுதி அதை நெறியாள்கை செய்த மைக்கல் மூரின் பெயரும் அறிவிக்கப்பட்டது. சற்றே உயரமான, தொள தொளவென்ற உடலோடு நடுத்தர வயது மதிக்கத்தக்க அந்த மனிதன் மேடைக்கு வந்தான். அரங்கத்தில் கர வொலி உயர்ந்து எழுந்தது. "போலிங் போர் கொலம்பைன்" (BOWLING FOR COLOMBINE) என்னும் அவரின் திரைப்படத்திற்கு 2002ம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது. அந்த நேரத்தில் நிகழ்ச்சியைப் பார்த்து கொண்டு இருப்பவர்களுக்கு அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்னும் வழமையான கேள்வி அவரிடமும் கேட்கப்பட்டது. இது வழமையாக விருதுபெற வரும் எல்லா நட்சத்திரங்களிடமும் கேட்கப்படுவதுதான்.

ஒலிவாங்கிக்கு முன்னால் வந்த மைக்கல் மூர் எவரும் எதிர்பாராத வகையில் யுத்தத்திற்கு எதிராக கோஷம் எழுப்பினார். 2000ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி நியூயோர்க் நகரில் அல் கய்தா இயக்கத்தால் நடத்தப்பட்ட தாக்குதலை மையமாக்கி அமெரிக்க அரசு ஈராக் மீது ஜனநாயக விரோதமாக தொடுத்து இருக்கும் யுத்தத்தை மைக்கல் மூர் கடுமையாக சாடியதுடன் ஈராக் மீதான யுத்தத்தை சகல அமெரிக்கர்களும் எதிர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். ஆனால் அவர் அதை கூறிக்கொண்டு இருக்கும் போதே மிக உசார் அடைந்த ஆஸ்கார் விருது நிகழ்சி அமைப்பாளர்கள் ஒலிவாங்கியை சட்டென நிறுத்தி மைக்கல் மூரை மேலும் பேசவிடாமல் தடுத்து விட்டனர்.

ஆனால் மைக்கல் மூர் தான் சொல்ல வந்த செய்தியை உலகிற்குச் சொல்லிவிட்டார். செப்டம்பர் 11 தாக்குதலால் ஏற்பட்ட உயிர் இழப்புகளின் அதிர்ச்சி அமெரிக்க மக்களிடையே அப்போதும் மிகவும் கனன்று கொண்டிருந்தது. ஈராக் மீது ஜோர்ஜ் புஷ் ஆரம்பித்த யுத்தம் அமெரிகர்களிடையே பெரு வரவேற்பைப் பெற்றிருந்தது. ஆனால் யுத்தத்திற்கு எதிராகவும் இலட்சக்கணக்கில் அமெரிக்கர்கள் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும் அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் அவ் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பொதுவாக அமெரிக்க ஊடகங்கள் அனைத்தும் அமெரிக்க தேசப்பற்று என்பதை முன்நிறுத்தி ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தை சரியானதாகவும் அது வெற்றியுடன் முன்னேறிக் கொண்டு இருப்பதாகவுமே காண்பிக்க முனைந்தன.




2002ம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருது நிகழவில் யுத்தத்துக்கு எதிராக முழுங்கும் மைக்கல் மூர்

## FAHRENHEIT 9/11

அன்று மைக்கல் மூர் துணிந்து தம் கருத்தை பகிரங்கமாக உலகிற்கு சொல்லிவிட்டு நிதான-மாக மேடையை விட்டு இறங்கி மண்டபத்தை விட்டு வெளியே றினார். அவரைப் போற்றியவர்களும் தூற்றியவர்களும் எனப் பலர் இருந்தனர். தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமாகவும் அவருக்கு வாழ்த்துக்களும், மிரட்டல்களும், துரோகிப் பட்டங்களும் கூட வந்து சேர்ந்தன.

தெருவில் கண்ட பலபேர் அவருக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தினர். ஆனால் பலர் அவரை தூற்றியும் மிக மோசமான வார்த்தை களால் ஏசியும் ஒருவித மானசீக அச்சுறுத்தலுக்கு அவரை உள்ளாக்கினர். தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் மின்அஞ்சல் மூலமும் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் வந்து கொண்டிருந்தாலும் மைக்கல் மூர் சளைக்கவில்லை.

தன் பருத்த சரீரத்தை சுமந்து கொண்டு தன் சகபாடிகளுடன் இராப்பகலாக உழைத்தார். ஓர் பெரிய இயக்கம், அரசியல் ஸ்தாபனம் செய்ய வேண்டிய ஆய்வை ஒரு சிலரோடு சேர்ந்து மைக்கல் மூர் செய்து முடித்தார்.

"செப்டம்பர் 11 காய்ச்சல்" (FAHRENHEIT 9/11) என்னும் நாகஸ்திரத்தை தயார் செய்தார். எந்த உண்மையை துணிந்து சொன்னதற்காக, தேசபக்த அமெரிக்கர்கள் எனத் தம்மைத்தாமே பீற்றிக் கொண்டவர்கள் அவரை தூற்றினார்களோ அந்த உண்மையை அப்பட்டமாக தோலுரித்து, ஆதாரங்களுடன் முழு உலகிற்கும் காட்டத் துணிந்துவிட்டார் மைக்கல் மூர். உண்மையில் ஓர் அபாரமான துணிச்சல் நிறையவே உள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






மைக்கல் மூர்

ஊடகவியலாளன் தான். இன்று தானே உண்மையான அமெரிக்கத் தேசபக்தன் என உலகிற்கு மைக்கல் மூர் சவால் விடுகிறார்.

செப்டெம்பர் 11 காச்சல் எனப் பொருள்படும் பரனைற் 9/11 என்னும் அந்த விவரணத் திரைப்படத்தை எழுதி தயாரித்து வெளியிட ஆயத்தமானபோது ஹோலிவூட் திரைப்படத் துறையின் பெயர் போன நிறுவனமான, அதைத் தயாரித்த டிஸ்னி (*Disney*) தொடை நடுங்கிப் போய் அதை விநியோகிக்கப் பயந்து மறுத்துவிட்டது. ஆனால் வெயின்ஸ்டைன் (*Weinstein*) திரைப்படத் துறையின் மிராமெக்ஸ் (*Mira Max*) நிறுவனம் வியாபார நோக்குடனாவது சர்ச்சைக்குரிய அத்திரைப்படத்தின் விநியோக உரிமையை டிஸ்னியிடம் இருந்து வாங்கி விநியோகித்தது.




**எந்த தேசபக்த அமெரிக்கர்கள் அவரை தூற்றினார்களோ அவர்களுக்கு உண்மையை அப்பட்டமாக தோலுரித்து, ஆதாரங்களுடன் முன்வைக்கும் மைக்கல் மூர், துணிச்சல் மிக்க ஒரு ஊடகவியலாளன்தான். இன்று தானே உண்மையான அமெரிக்கத் தேசபக்தன் என சவால் விடுகிறார் அவர்..**



இந்த வருடம் "கான்" (*CANNES*) திரைப்படவிழாவில் சிறந்த திரைப்படத்திற்கான விருதை பரனைற் 9/11 திரைப்படம் தட்டிக் கொண்டதோடு அது திரை அரங்குகளுக்கு வந்து சேர்ந்தது. முதல் இரண்டு வாரங்களுக்கிடையே அதிவேகமாக பார்வையாளர்களை கவர்ந்து 24 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது.

2004 ஒக்டோபர் மாதம் அத்திரைப் படத்தின் *DVD* மற்றும *VHS* கசட்டுக்கள் விற்பனைக்கு வரவுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையும் அவரது கட்சியான றிபப்ளிக்கன் கட்சியின் ஆட்சியையும் எதிர்வரும் தேர்தலில் ஒரு உலுக்கு உலுக்கிவிடும் பலம் அத்திரைப்படத்திற்கு இருப்பதாக பேசப்படுகிறது.

செப்டெம்பர் 11ம் திகதி தாக்குதலை அடிப்படையாக வைத்து ஆப்கானிஸ்தானுக்குள் நுளைந்த ஜோர்ஜ் புஷ்ஷின் படைகள் அங்கு ஒஸாமா பின்லாடனை பிடிக்க முயலாமல் அல்லது முடியாமல் ஈராக்கின் மீது ஏன் படையெடுத்தன என்பதிலிருந்து, பின்லாடன் குடும்பத்துடனும் பின்லாடன் நிறுவனத்துடனும் புஷ் குடும்பத்துக்கு உள்ள நல்ல உறவு, கள்ள உறவு என எல்லாவற்றையும் அம்மணமாக்கி காண்பிக்கின்றது திரைப்படம். தாக்குதல் நடந்த பின்னர் அமெரிக்காவுக்குள் வரும் போகும் ஒவ்வொரு சாதாரன மனிதனும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், பின்லாடன் கம்பனியைச் சேர்ந்த ஒஸாமாவின் நெருங்கிய உறவினர்கள் மாத்திரம் விசேட விமானங்கள் மூலம் பத்திரமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மர்மமான உண்மையை திரைப்படம் அம்பலப்படுத்துகிறது.

**செப்டெம்பர் 11ம் திகதி தாக்குதலை அடிப்படையாக வைத்து ஆப்கானிஸ்தானுக்குள் நுளைந்த ஜோர்ஜ் புஷ்ஷின் படைகள் அங்கு ஒஸாமா பின்லாடனை பிடிக்க முயலாமல் அல்லது முடியாமல் ஈராக்கின் மீது ஏன் படையெடுத்தன என்பதிலிருந்து, பின்லாடன் குடும்பத்துடனும் பின்லாடன் நிறுவனத்துடனும் புஷ் குடும்பத்துக்கு உள்ள நல்ல உறவு, கள்ள உறவு எல்லாவற்றையும் அம்மணமாக்கி காண்பிக்கின்றது திரைப்படம்.**

ஓர் இரவிற்குள் ஜோர்ஜ் புஷ் அரசு நடைமுறைக்கு கொணடுவந்த தேசபக்த சட்டம் (*Patriotic Act*) 240 பக்கங்களை கொண்டது. அமெரிக்க செனற் சபையில் எவருமே ஓர் இரவிற்குள் அதை வாசித்து முடித்திருக்க முடியாது. அப்படியிருக்க எவ்வாறு இச்சட்டம் ஓரிரு நாட்களுக்குள் வரையப் பட்டு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது என கேள்வி எழுப்பும் மைக்கல் மூர் இது ஏற்கனவே வரையப்பட்டு தயாராக வைக்கப் பட்டு இருந்த ஒரு மோசமான சட்டம் என்பதை நிருபிக்க முயல்கிறார்.

இது தொடர்பாக ஒரு செனற்சபை உறுப்பினரிடம் அவர் கேள்வி எழுப்பும் போது "அநேகமாக அமுலுக்கு வரும் சட்ட வரைபுகள் எதனையும் தாம் முற்றும் முழுதாக வாசிப்பது இல்லை" என அவரே கூறும் காட்சி திரைப்படத்தில் வருகிறது. இதற்காக மைக்கல் மூர் வாகனம் ஒன்றில் ஒலி பெருக்கியை கட்டியபடி செனற் சபை கட்டிடத்திற்கு வெளியே அக்கட்டிடத்தை சுற்றிவந்த வண்ணம் ஒலிபெருக்கி மூலம் தேசபக்த சட்டத்தை செனற் சபைக்கு கேட்கும்படி வாசிக்கும் நகைச்சுவைக் காட்சியும் திரைப்படத்தில் வருகின்றது.

ஒட்டுமொத்தமாக ஜோர்ஜ் புஷ்ஷையும் அவரின் ஆட்சியையும் கோமாளித்தன மானது என எள்ளி நகையாடுகிறது திரைப்படம்.




இது திரைப்படத்தின் வெளியீட்டுப் போஸ்டர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஜோர்ஜ் புஷ் போன்ற ஒரு முட்டாளை இனிமேலும் அமெரிக்கர்கள் தேர்ந்தெடுக்க கூடாது" என்னும் கோரிக்கையை ஈராக்கிய யுத்தமுனைக்குச் சென்று இறந்துபோன ஓர் அமெரிக்க இராணுவச் சிப்பாய் தன் குடும்பத்தாருக்கு எழுதிய இறுதிக் கடிதத்தின் வரிகள் மூலம் மைக்கல் மூர் முழு அமெரிக்காவிற்கும் பகிரங்கமாக விடுக்கிறார். 500 பேரைக் கொண்ட செனற் சபையில் ஒரே ஒருவரின் மகன் மட்டுமே யுத்த முனைக்கு அனுப்பப் பட்டிருப்தாக எடுத்துக்காட்டும் மைக்கல் மூர் யுத்தத்திற்குச் சென்று காயப்பட்டு திரும்பிவந்த ஓர் இராணுவ சார்ஜனுடன் செனற் சபை வாசலில் நின்று அங்குவந்து போகும் செனற்சபை உறுப்பினர்களிடம் "உங்கள் பிள்ளைகளையும் யுத்தமுனைக்கு அனுப்பினால் என்ன...?" என்று கேள்வி எழுப்புவதும் அதைக் கேட்டு பதில் சொல்லமுடியாது அவர்கள் தப்பி ஓடுவதும் திரைப்படத்தில் சுவாரசியமான காட்சிகள்.

ஆனால் இத்தனை கடுமையான சவால்களை அமெ ரிக்க அரசிற்கும் ஜோர்ஜ் புஷ்ஷிற்கும் விடுக்கும் திரைப்படம் அமெரிக்கா எங்கும் 600க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் தற்போது ஓடிக்கொண்டிருக்கிறது. கனடாவில் 140 திரையரங்குகளில் காண்பிக் கப்படுகிறது. உலகெங்கும் பல நூற்றுக்கணக்கான திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறது. ஆனால் குவைத் நாட்டில் இத்திரைப்படத்திற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல முக்கியமன விடயம் என்னவென்றால் மைக்கல் மூர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார். இதுவரைக்கும் அவரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக அவர் எங்கும் கருத்து வெளியிடவில்லை. அதுவரைக்கும் மகிழ்சிதான்.

இலங்கையிலும் யுத்தத்தையே வைத்து அரசியல் நடத்தும் இரண்டு கூட்டம் நீண்ட காலம் அதிகாரத்தில் இருக்கிறது. ஒன்று சிங்கள பேரினவாதக் கூட்டம். மற்றது தமிழ் தீவிரவாத பாசிசக் கூட்டம். இரண்டுமே மற்றவர் பிள்ளைகளை யுத்தத்திற்கு அனுப்பி அரசியல் நடத்தும் களிசடைக் கூட்டம்தான். இவர்களிடம் போய் உங்கள் பிள்ளைகள் எங்கே அவர்களையும் யுத்த முனைக்கு அனுப்பலாமே என்று ஓர் ஊடகவியளாளன் கேட்டால் அதற்கான பதில் வருவதற்கு முதலே அவனைத் தொலைத்துக் கட்டுவது எப்படி என்பதே முக்கியமான விடயமாக இருக்கும் இவர்களுக்கு. நமது மக்களும் கூட **"உப்பிடிக் கேட்க உவருக்கு என்ன அருகதை யிருக்கு..? உவருக்கு மண்டையில்தான் போட வேண்டும்"** என சர்வ சாதாரணமாக கதைக்க பழக்கப்பட்டுள்ள மிக முன்னேறிய நிலையில் தான் நாமும் நமது தமிழ்ச் சமூகமும் இருக்கிறோம்.

ஆனால் நிலைமை நீண்டகாலத்துக்கு இப்படியே போய்விடாது. இவர்களை அம்பலப்படுத்தும் விவர ணத் திரைப்படங்கள் காலம் தாழ்த்தியாவது வெளிவ ந்தே தீரும். அதுவரை இந்த கொலை காரர்களைப் பற்றிய தகவல்களை வைத்திருப்பவர்கள் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும். துப்பாக்கிகளுக்கு முதுகு சொறியாத ஊடகவியலாளர்கள் துணிச்சலுடன் வருவார்கள். அது வரையிலும் பொறுத்திருப்போம்.


**சி.கதிர்காமு**

**இலங்கையிலும் யுத்தத்தையே வைத்து அரசியல் நடத்தும் இரண்டு கூட்டம் நீண்ட காலம் அதிகாரத்தில் இருக்கிறது. ஒன்று சிங்கள பேரினவாதக் கூட்டம் மற்றது தமிழ் தீவிரவாதப் பாசிசக் கூட்டம். இரண்டுமே மற்றவர் பிள்ளைகளை யுத்தத்திற்கு அனுப்பி அரசியல் நடத்தும் களிசடைக் கூட்டம்தான். இவர்களிடம் போய் உங்கள் பிள்ளைகள் எங்கே அவர்களை யுத்தமுனைக்கு அனுப்பலாமே என்று ஓர் ஊடகவியளாளன் கேட்டால் அதற்கான பதில் வருவதற்கு முதலே அவனைத் தொலைத்துக் கட்டுவது எப்படி என்பதே முக்கியமான விடயமாக இருக்கும்**


# IN THE NAME OF BUDDHA





WE WANT PEACE IN SRI LANKA



Rajes- Director





Shanmugadas- producer





Sai George-producer

Though it is a film which has not gone deeply into subject of the Sri lankan Ethnic Conflict it raises some questions which should be answered today. As both the animal instincts from Sri Lankan politics have shown their anger towards the film, it is clear that the film has some what touched the Sri Lankan civil war on its nerve.

Though the production was done with a commercial motive, the Sri lankan Peace loving people would regard and remember you for choosing this plot. As the Sri Lankan issue is no more a pain in the ass of the first world giants, we know it's going to be a challenge for you to market it, So it's our own itch, let's keep scratching. ⇨




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# IN THE NAME OF BUDDHA

# புத்தரின் பெயரால்



புனித நுலால் யுத்தத்திற்கு ஆசீர்வாதம்

**SRI LANKA**

**"A nation ravaged by armed ethnic conflict that has been raging for nearly two decades. The once peaceful and prosperous island in the Indian ocean, just a few miles away from the Indian sub-continent has witnessed one of the worst ever genocide in history.**

**A sizeable segment of the population was forced to flee their homeland and to take asylum in other countries, trying, more often than not, in vain, to get refugee status.**

**The movie " in the name of Buddha is the film maker's response to this enormous human tragedy that has engulfed the lives of tens of thousands of innocent people."**

இலங்கையில் அரசியல் செய்யும் சிங்கத்துக்கும் புலிக்கும் ஒரே நேரத்தில் எரிச்சலைத் தந்த திரைப்படம் இது. சாதாரன மனிதர்களுக்கு இரத்த வெறியூட்டி யுத்த முனைக்கு அனுப்பிவிட்டு, அந்த அப்பாவிகளின் இரத்த வாடையில் அரசியல் சுகம்காணும் மிருகங்களுக்கு இப்படம் பிரைச்சினையாய் இருக்கிறதென்றால் இது யுத்தத்தை வெறுக்கும் மானிடர்களுக்கான திரைப்படம்தான். வியாபார நோக்கத்தோடு இப்படம் எடுக்கப் பட்டிருந்தாலும், இலங்கையின் சிவில் யுத்தம் தொடர்பாக சில உருப்படியான கேள்விகளை இது எழுப்புகின்றது. அதுவே இவ்விரு சாராரின் எரிச்சலுக்கும் காரணம். எனவே ஓரளவிற்கு பிரைச்சினையின் தொட வேண்டிய முக்கிய நரம்பொன்றைத் தொட்டிருக்கிறது படம்.

இதைத் தயாரித்தவர்கள் தாமே கூறியுள்ளபடி '*.....The movie In The Name of Buddha is the film maker's response to this enormous human tragedy that has engulfed the lives of tens of thousands of innocent people.*' (அதாவது புத்தரின் பெயரால் என்னும் இத்திரைப்படமானது பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்களின் வாழ்க்கைகளை விழுங்கிக் கொண்டிருக்கும் பாரிய மானிட அவலம் பற்றிய சினிமாக்காரனின் எதிர்வினை- அல்லது பிரதி-பலிப்பு.) என்னும் அந்த உயர்ந்த நோக்கத்தில் எடுக்கப்பட்டிருந்தால் இப்படத்தை எடுத்தவர்கள் உண்மையிலேயே தாம் பெருமைப்படலாம். ஏனெனில் இருசாராருமே உங்கள் படைப்பு மீது கடுப்புக் கெண்டுள்ளனர்.

தென் இந்தியாவில் கேரளாவைச் சேர்ந்த திரைப்பட தயாரிப்பாளர் ஒருவரின் மகனான சாயி ஜோர்ஜ் மற்றும் இலங்கையில் துன்னாலையைச் சேர்ந்த சண்முகதாஸ் என்னும் இருவர் பணம் போட்டு இப்படத்தைத் தயாரித்து இருக்கிறார்கள். கேரளாவைச் சேர்ந்த ராஜேஸ் றோர்ச்சிரீவெர் திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ளார். பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பல விருதுகளைப் பெற்றி ருக்கிறது இப்படம்.

இப்படத்தின் கரு இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் நிகழும் யுத்தத்தைப் பின்புலமாக வைத்து சித்தரிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக யுத்தத்தின் தாக்கத்தினால் பலர் தம் சொந்த மண்ணைவிட்டு அகதிகளாக வெளிநாடுகளுக்கு ஓடுகின்றதையும், அவ்வாறு இங்கிலாந்துக்கு ஓடிய சிவா என்கின்ற ஒரு யாழ். இளைஞனின்

www.tamilarangam.net



கடந்தகால மனவோட்டத்தின் *(Flash back)* காட்சிகளுக்கூடாக படம் நகர்த்தப் படுகின்றது. படத்தின் இறுதியில் அவ்விளைஞன் நாட்டின் அரசியல் நிலைமை சுமுகமடையும் என்னும் நம்பிக்கையை இழப்பதோடு அங்கு நடக்கும் விடுதலைப் போராட்டத்திலும் நம்பிக்கை இழந்தவனாக தன் குடும்பத்தினர் அனைவரையும் இங்கிலாந்திற்கு அழைத்துக் கொள்ளுவதோடு படம் முடிகிறது.

ஆரம்பம் முதலே தன்னைச் சுற்றி நிகழும் விடயங்களால் குழப்பத்திற்குள்ளேயே இருக்கும் சிவா அடிக்கடி போராட்டம் பற்றி பல கேள்விகளை எழுப்புகிறான். யுத்தத்தில் அர்த்தமற்ற விதத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவது. சிறுவர், குழந்தைகள் பெண்கள் மற்றும் வயோதிபர் கடுமையாக பாதிகப்படுவ தைக்கண்டு மனம் கலங்குகின்றான். யுத்த சூழலுக்குள் அர்ப்பணிப்போடு பணிபுரியும் ஒரு வைத்தியர் அவனது தந்தை. தீவிரவாதிகளுக்கு உதவியதற்காக அவனது தந்தை இலங்கை இராணுவத்தால் கொல்லப்படுகின்றார். அப்போது தானும் ஆயுதம் ஏந்த வேண்டும் என ஒருகணம் ஆத்திரப்படுகின்றான் சிவா. ஆனால் போராட்டம் நடத்தப்படும் விதம் பற்றி அவனுக்குள் திரும்பத் திரும்ப கேள்விகள் எழும்புகின்றன. குறிப்பாக சிறுவர்கள் ஆயுதம் ஏந்த வைக்கப்படுவது பற்றியும் பொதுமக்கள் அநியாயமாகப் பலிகொடுக்கப்படுவது பற்றி அவன் ஆத்திரமுறுகின்றான். சில இடங்களில் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராளிகளிடமும், அதன் தலைவரிடமும் அவன் கேள்வி எழுப்புகிறான். அப்போது ஆயுதம் ஏந்திய சிறுவர்கள் சிவாவை எதிரியைப் பார்ப்பது போல் முறைத்துப் பார்க்கிறார்கள்.

சிங்கள பௌத்த பேரினவாதத்துக்குள் வளர்க்கப்பட்ட அரச இராணுவம் எவ்வாறு ஒவ்வொரு தமிழ் குடிமகனையும் எதிரியாகவும் தீவிரவாதியாகவும் பார்க்கின்றது, கொலைகள் மற்றும் பாலியல் பலாத்காரம் என்பவற்றை மேற்கொள்ள அதற்கு வழங்கப் பட்டிருக்கும் சுதந்திரம் என்பன அழுத்தமாகக் காண்பிக்கப்படுகின்றன. யுத்தத்திற்குப் போகும் அரச படைக ளுக்கு பௌத்த பிக்குகள் கைகளில் புனித நூல் அணிவித்து ஆசீர்வதித்து அனுப்பும் காட்சியும் இலங்கையில் நிறுவனமயப் பட்டுப்போன சிங்கள பௌத்த பேரினவாதத்தை எடுத்துக்காட்டும் குறியீடாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்திய இராணுவம் வடகிழக்கில் செய்த அட்டூழியங்களும் காண்பிக்கப்படுகின்றன. சிவாவின் காதலியான கீதா இந்திய சீக்கிய சிப்பாய்களால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப் படுவதும், அதைக் கண்ணுறும் விடுதலை இயக்கச்சிறுவன் இராணுவத்தைச் சுடுவதும், பின்னர் இந்திய இராணுவம் இச்சிறுவனைச் சுட்டுக் கொல்வதும் அழுத்தமான திருப்புமுனைக் காட்சிகள். இச்சம்பவங்களால் அதிர்ந்து போகும் சிவா பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்ட தன் காதலியையும் அழைத்துக்கொண்டு இறந்த அந்த சிறுவனின் உடலைத் தூக்கியபடி கொட்டும் மழையில் போராளிகளின் முகாமுக்குச் செல்கிறான். அங்கு இயக்கத் தலைவரின் முன்னால் சிறுவனின் உடலைக் கிடத்தி "இதுகளை விதைத்து எதுகளை அறுக்கப் போகி றீர்கள்" என கேட்கும் அழுத்தமான கேள்வி தமிழ் போராட்டத்தில் அநியாயமாக ஒரு இயக்கத்தின் அதிகார வெறிக்காக கொல்லப்படும் இளைஞர்களை வர்ணிக்கும் 'வித்துடல்' பதத்துக்கு ஒரு சாட்டையடி. அதைக் கேட்டுக்கொண்டு எவ்வித உணர்ச்சியுமின்றி பிணம்போல் நிற்கும் காட்சியில் இயக்கத் தலைவராக நடித்திருக்கும் ஜோதி லாலின் நடிப்பு அபாரம்.

இந்த காரணங்களைக் கொண்டு இலங்கையரசால் பகிரங்கமாகவும் தமிழரின் ஏகப்பிரதிநிதிகளால் இரகசியமாவும் இப்படம் ஏன் தடை செய்யப்பட்டது என்பது ஓரளவு புரிந்து கொள்ளலாம். புத்த பகவானையும், பௌத்த மதத்தையும் இப்படம் கேலி செய்வதாக இத்தடைக்கு காரணம் கூறியது இலங்கை அரசு. இது நடந்தது 2002ம் ஆண்டில். இது தொடர்பாக உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் ஊடகங்கள் பெரிதாக குரல் கொடுத்தன. தமிழ் மக்களின் உண்மையான பிரைச்சினைகளை எடுத்துக்காட்ட இப்படம் முனைந்ததாக பெரிதாக சிலாகித்தன. இதேவேளை இந்திய அரசும் இப்படம் இந்தியாவில் திரையிடப்பட அனுமதி வழங்கவில்லை.

ஆனால் 2001ம் ஆண்டு தேர்தலின் பின்னர் தமிழ் மக்களை இரட்சிக்க வந்த சிங்கள இனவாதி இரட்சகன் (பட்டலந்த வதைமுகாம் பொறுப்பாளர்) ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களின் தேசியத் தலைவர் கோமகனும் 'சுடுகிது மடியைப் பிடி' என்று ஒருவர் வன்னியிலும் மற்றவர் வவுனியாவிலும் கையொப்பமிட்ட தமிழர் விமோசன ஒப்பந்தத்தின் பின்னர் இத்திரைப்படத்தை இலங்கை மக்கள் பார்க்கும் பாக்கியத்தை தேசியத் தலைவர் செய்திருக்கலாம். அல்லது தமிழர்களின் விடுதலையின்பால் அதீத அக்கறை கொண்ட ஊடகப் பெருமக்(கு)களும் எழுதியிருக்கலாம் ஆனால் எவருமே மூச்சும் விடவில்லை. அப்படியொரு படம் வந்ததே தெரியாதது போல் இருந்து விட்டனர்.

இந்த ஊடகங்களின் கபடத் தனமான மௌனத்துக்குப் பின்னால் இரண்டு காரணங் கள் உள்ளன. ஒன்று, இலங்கை அரச இயந்தி ரத்தை பௌத்த இனவாத இயந்திரமாக நிறுவனமயப் படுத்திய ஐ.தே.க. அரசாங் கத்தை நோகடிக்க இவர்கள் விரும்பாமை. இரண்டாவது ஒரு ஜனநாயக விரோத தமிழ் ஆயுதக் கும்பலிடம் தம் ஊடக மனச்சாட்சியை அடகுவைத்திருக்கும் இவர் கள். அக்கும்பலின் அனுமதி யின்றி மலம் சலம் கூட கழிக்க மாட்டோம் என்று

**"இதுகளை விதைத்து...."**

**பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட தன் காதலியையும் அழைத்து க்கொண்டு, இறந்த அந்த சிறுவனின் உடலைத் தூக்கியபடி கொட்டும் மழை யில் போராளிகளின் முகாமு க்குச் செல்லும் சிவா, இயக் கத் தலைவரின் முன்னால் சிறுவனின் உடலைக் கிடத்தி "இதுகளை விதை த்து எதுகளை அறுக்கப் போகி றீர்கள்" என கேட்கும அழுத்தமான கேள்வி தமிழ் போராட்டத்தில் அநியாயமாக ஒரு இயக்கத்தின் அதிகார வெறிக்காக கொல்லப்படும் சிறுவர்களை வர்ணிக்கும் 'வித்துடல்' பதத்துக்கு ஒரு சாட்டையடி.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கங்கணம் கட்டியுள்ள நிலையில் இன்று இருக்கின்றனர். அத்துடன் மொத்தத் தமிழ் சமூகத்தையும் அக்கும்பலிடம் ஒப்படைப்பது எனவும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர். எனவே அக்கும்பலின் நாசகார அரசியலை மூடி மறைப்பது இவர்கள் கடமை. அந்த வகையில் இவர்களுக்கு அக்கும்பலால் வழங்கப்பட்ட சமிக்ஞை இத்திரைப்படம் தங்களுக்கும் எதிரானது என்பதாகும்.

இத்திரைப்படம் இலண்டன், நோர்வே, கனடா ஆகிய இடங்களில் விசேட அழைப்பின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய பார்வையாளர் வட்டத்திற்கு காண்பிக்கப்பட்டது. இலண்டன் மற்றும் கனடா ஆகிய இடங்களில் திரையரங்குளிலும் காண்பிக்கப்பட்டன. சாதாரண தமிழ் மற்றும் ஏனைய பார்வையாளர்கள் படத்தைப் பற்றி ஆரோக்கியமாக கருத்துத் தெரிவித்திருந்தாலும், வேங்கைப் பரம்பரையில் பிறந்தவர்கள் இத்திரைப்படக் குழுவினருக்கு காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தனர் அவை மிக மிக சுவாரசியமான விமர்சனங்கள்.

முதலாவது, உலகப் புகழ் பெற்ற தலைவரை ஒரு பாத்திரமாக காண்பிக்க முன்னர் வி.பு. இயக்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பது. இரண்டாவது, தலைவரின் பாத்திரம் எடுக்கப் படும்போது மம்முட்டி அல்லது மோகன்லால் போன்ற மலையாள திரை உலகைச் சேர்ந்த சுப்பர் ஸ்டார்களைப் போட்டு எடுத்திருக்க வேண்டும் என்பது.

மூன்றாவது, திரைப்படத்தின் பிரதான பாத்திரமான சிவா விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து வெளி நாட்டிற்குச் செல்வதாக காண்பிக்கப்படுவது.

நான்காவது, சிறுவர் சிறுமியரை தாம் படையில் சேர்ப்பதாக ஏற்கனவே தமக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் குற்றச்சாட்டுக் களும் பிரச்சாரமும் பலமாக இருப்பதாகவும் அவற்றை மேலும் உறுதிப்படுத்துவதாக திரைப்படத்தில் வரும் காட்சிகள் காண்பிக் கப்படுவது. என்பவை கடும் விமர்சனங்களாக முன்வைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான விடயங்கள் இப்படத்தில் இருப்பதாக அறிந்து கொள்ளுவதற்கு முன்னரே அவசரப்பட்டு கனடா 'உலகத் தமிழர் இயக்கத்தின்' வாகீசன் என்பவர் கொஞ்சம் பணம் பண்ணும் நோக்கிலும் தங்கள் தனிப்பெரும் தலைவருக்கு பெருமை சேர்க்கும் நோக்கிலும் இதை வாங்கி திரையிட்டார். இவர்களின் நடவடிக் கையானது, சரியாக அந்த மன்னனின் தூக்கத்தைக் கலைத்த இலையானைக் கொல்லப்போய் மன்னனைக் கொன்று போட்ட மன்னரின் நம்பிக்கைக்குரிய குரங்குத் தோழனின் கதையாகியது. ஒரு சில நாட்களுக்குள்ளேயே படத்தை நிறுத்தச் சொல்லி கட்டளை வந்தது. படத்தை வெளி நாடுகளில் உள்ள தமிழர் களிடம் விற்றுப் பணம் பண்ணலாம் என நம்பியிருந்த தயாரிப ்பாளர்கள் நம்பிக்கையில் மண் விழுந்தது. 'இது புலிகளுக்கும் எதிரான படமாம்' என வெளிநாட்டுத் தமிழர்களடையே குசுகுசுப்பு அதிகமாகியது. படத்தை இப்போது கீரை விலைக்காவது விற்று விட்டு போட்ட பணத்தை எடுக்க முடியுமா என தயாரிப் பாளர்கள் அலைவதாகக் கேள்வி.

இவையெல்லாம் ஒரு புறமி ருக்க வன்னியின் தமிழர் உளவுப்படை உசாரடைந் தது.

இத்திரைப்படத்தின் உண்மை யான பின்னணி என்ன?

யார் இதற்குப் பணம் போட்டவர்கள்? கதையின் கருவை யார் கொடுத்தது?




திரைப்படம் பெற்ற விருதுகள்



**திரைப்படத்தின் பிரதான பாத்திரமான சிவா விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து வெளி நாட்டிற்குச் செல்வதாக காண்பிக்கப்படுவதும், சிறுவர் சிறுமியரை தாம் படையில் சேர்ப்பதாக ஏற்கனவே தமக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் குற்றச் சாட்டுக்களும் பிரச்சாரமும் பலமாக இருப்பதாகவும், அவற்றை மேலும் உறுதிப்ப டுத்துவதாக திரைப்படத்தில் வரும் காட்சிகள் காண்பிக் கப்படுவது. என்பவை கடும் விமர்சனங்களாக முன்வைக்கப் பட்டுள்ளன.**

www.tamilarangam.net



தமது அழிவுகர அரசியலைப் நன்றாகப் புரிந்துகொண்ட எவரோதான் திரம்பட நாசூக்காக இந்த திரைக்கதையை எழுதியிருக்க வேண்டும். அது யார்?
இத்திரைப்படத்தை பரவலாக திரையிடுவதற்கான முயற்சியில் யாரெல்லாம் இத்தயாரிப்பாளர் குழுவுக்கு உதவுகிறார்கள்? பொன்ற விடயங்களை ஆராய உளவுப் பிரிவு ஆரம்பித்தது.



சிவா தனது காதலியுடன்

அதன் முடிவாக பிரதான தயாரிப்பாளரான கேரளத்து சாயி ஜோர்ஜுக்கு வன்னிக்காட்டுக்கு அழைப்பு வந்தது. தலைவரைச் சந்தித்து விட்டால் எப்படியாவது படத்தை விற்பதற்கு வகை பண்ணி விடலாம் என்ற நப்பாசையில் சாயி ஜோர்ஜ் வன்னிக்குச் சென்றார். ஆனால் அங்கு கதை வேறாக இருந்தது. கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தருகே கட்டப்பட்டுள்ள *Tank view* விடுதியில் சாயி ஜோர்ஜ் ஒரு வாரம் தங்க வைக்கப்பட்டார். நன்றாக இறால், மீன், இறைச்சியென சமைத்துப் போட்டு அவரை விருந்தோம்பலில் சொக்க வைத்துள்ளனர் விடுதலை வீரர்கள்.

**முடிவாக பிரதான தயாரிப்பாளரான கேரளத்து சாயி ஜோர்ஜுக்கு வன்னிக்காட்டுக்கு அழைப்பு வந்தது. தலைவரைச் சந்தித்து விட்டால் எப்படியாவது படத்தை விற்பதற்கு வகை பண்ணி விடலாம் என்ற நப்பாசையில் சாயி ஜோர்ஜ் வன்னிக்குச் சென்றார். ஆனால் அங்கு கதை வேறாக இருந்தது. கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தருகே Tank view விடுதியில் சாயி ஜோர்ஜ் ஒரு வாரம் தங்க வைக்கப்பட்டார். நன்றாக இறால், மீன்,இறைச்சியென சமைத்துப் போட்டு அவரை விருந்தோம்பலில் சொக்க வைத்துள்ளனர் விடுதலை வீரர்கள்.**

'சூனா பானா' உட்பட உளவுப்பிரிவின் பலர் அவரைப் பேட்டி கண்டுள்ளனர். தமது கேள்விகளை மிக நட்போடு கேட்டு தேவையான தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளனர். திடீரென ஒருநாள் தலைவரை சந்திக்க சாயி ஜோர்ஜை அழைத்துச் சென்றனர். 'ஒரு மலையாள இனத்தவராக இருந்தும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரைச்சினையை வைத்து படம் எடுத்ததற்காக பல்லரித்தப்போன தலைவர் அவரை வாழ்த்தி வெறுங்கையோடு அனுப்பி விட்டார். தன்னை அழைத்ததே அவர்கள் தமக்குத் தேவையான தகவல்களைப் பெறத்தான் என்பது சாயி ஜோர்ஜ் போன்றோருக்குப் புரிய இன்னும் அதிக காலம் செல்லும். பாவம் சாயி ஜோர்ஜ்.

அதுமட்டுமன்று இனிமேல் இம்மாதிரியான படங்களை தயாரிக்காதீர்கள் என்பதற்கான எச்சரிக்கையும் சமிக்ஞையும் அந்த வன்னி அழைப்புக்குள் அடக்கம். தன்னிடம் கைவசம் வைத்திருந்த 'கண்ணி வெடியினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்' பற்றிய கதைக் கருவை அவர்களிடம் வெகுளித்தனமாக காண்பித்த சாயி, நீங்கள் விரும்பினால் இந்தப் படத்தை உங்களுக்காக தான் எடுத்துத் தரலாம் என்றாராம். அவர்கள் அதை காதில் வாங்கிக் கொண்ட தாகவே காட்டவில்லையாம். உண்மையிலேயே ஏகப்பிரதிநிதிகள் கண்ணிவெடி அகற்றுவதைப் படிப்பதே அடுத்த ரவுண்ட் யுத்தத்தில் இன்னும் திறம்பட கண்ணி வெடிகளை புதைக்கத்தான் என்பதை சாயி போன்றவர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை தான். *

## Ethics And Capitalism

### தார்மீக விழுமியங்களும் முதலாளித்துவமும்

*1904ம் ஆண்டில் மெக்ஸ் வெபர் (Max Weber) வெளியிட்ட 'The protestant Ethics and the Sprit of Socialism' என்னும் நூலின் மூலம் இவர் அன்றைய காலகட்டத்தில் பாரிய விவாதம் ஒன்றைக் கிளப்பி விட்டதோடு அப்போதிருந்த பெரும் சமூக சிந்தனையாளர்களிடையேகூட எதிரும் புதிருமான நிலைகளை உருவாக்கினார். அவருடைய ஆக்கத்தின் முக்கிய மையக்கருவாக அமைந்திருந்தது, சமயப் பெறுமானங்களும் சமூகப் பொருளாதார செயற்பாடுகளுக்கும் இடையேயான உறவு பற்றிய விடயதானமாகும். அப்போது பரவலான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த நடைமுறை மாக்ஸிசத்துடன் முரண்பட்ட அவர் பொருளாதாரக் காரணிமட்டும், அல்லது தனியாக ஒரு காரணி மட்டும் சமூகத்தின் மொத்தச் செயற்பாட்டையும் தீர்மானிக்கின்றது என்னும் வாதத்தை நிராகரித்தார். குறிப்பாக சமயப் பெறுமானங்கள் மற்றும் மத ரீதியான கருத்துக்களும் சமூகத்தின் செயற்பாடுகளை தீர்மானிக்கின்றன என அவர் வாதிட்டார்.*

*அது மட்டுமன்றி மதமும், மதரீதியான கருத்துக்களும் பெரும்பாலும் பொருளாதார கட்டுமானங்களை மாற்றியமைக்க வல்லன என்பது அவரின் வாதம். ஐரோப்பா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு, ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கும் முதலாளித்துவத்துக்கு "சார்பான நிலைமைகளின் அளவு" (Degree of Favorableness) பற்றியும் அவர் விளக்கினார். இத்துடன் கெல்வினிஸ (Calvanism) போதனைகள் மூலம் முக்கியப் படுத்தப்பட்டு சொல்லப் படுகின்ற,* ***கடும் உழைப்பின் மீதான நேர்மை, கௌரவம், தார்மீகப் பொறுப்பு*** *என்பவை முதலாளித்துவத்தின் அதிவேக வளர்ச்சியை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளன என்கிறார். (Calvanism என்பது பிரெஞ்சுப் புரட்ட ஸ்தாந்துப் போதகர்* ***ஜோன் கெல்வின்*** *மற்றும் அவரைப் பின் பற்றியவர்கள் மேற்கொண்ட போதனை)*



Max Weber
மெக்ஸ் வெபர்

*கடந்த நூற்றாண்டின் தலை சிறந்த சமூக சிந்தனையாளர்களில் ஒருவரும் சமூகத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியவரும், நவீன சமூகவிஞ்ஞானத்தை ஸ்தாபித்தவர்களுள் முக்கியமான ஒருவராகவும் கணிக்கப்படுகின்ற இவர், சமூக நிறுவனங்கள் அல்லது சமூக ஸ்தாபனங்களை ஆய்வு செய்வதற்கென, பல்கலாச்சார தன்மைகளுக் கூடான (cross cultural) அதேவேளை பெறுமானச் சூன்யமான (Value Free) ஓர் வழி முறைக்கூடான அபத்த மாதிரி (Abstract Model) ஒன்றை உருவாக்க கடுமையாக உழைத்தவர்.* *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லீம்களை அணிவகுக்கச் செய்யும் தமிழ் அரசியலின் பேரினவாதம்



எல்லாளன்

இலங்கையில் வாழும் முஸ்லீம் சிறுபான்மை மக்களின் இனத்துவ அடையாளத்திற்கான அச்சுறுத்தல் பிரித்தானியர் இலங்கையை ஆண்ட காலத்தில் இருந்தே ஏற்பட்டுள்ளதற்கான சான்றுகள் ஆய்வுகளின் மூலம் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. பிரித்தானியர் தமது காலணித்துவ நாடுகளில் இன, மொழி, மத, சாதி பேதங்களை அடிப்படையாக வைத்து அச்சமூகங்களை பிரித்தாண்டதின் மூலம் அந்நாடுகளை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்பது நிரூபணமானதொன்று. இதற்கு இலங்கையும் விதிவிலக்காக இருக்கவில்லை. குறிப்பாக தமது ஆட்சியை ஏற்க மறுத்த பெரும்பான்மை சிங்கள மக்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக ஒரு புறம் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலம் கற்ற சிறுபான்மை தமிழர்களை நிர்வாக சேவைகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கியதோடு, வியாபாரத் துறையில் முஸ்லீம்கள் மலேயர்கள், சோனகர்கள் போன்றோரை ஆதிக்கம் செலுத்த இடமளித்தனர். இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்கு வகித்த தோட்டத் தொழில்துறையில் தென் இந்தியாவில் இருந்து கூலிகளாக கொண்டுவந்த இலட்சக்கணக்கான தமிழர்களை ஈடுபடுத்தினர்.

இவ்வாறு இலங்கையின் சனத்தொகையில் 70 வீதத்திற்கு மேற்பட்ட பெரும்பான்மை சிங்கள மக்களை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததன் மூலம் அவர்களின் கோபத்தை வடகிழக்கு தமிழர்களின் மீதும் முஸ்லீம்களின் மீதும் மலையக தமிழர்களின் மீதும் திருப்பி விட்டனர். அத்தோடு கிறிஸ்தவ, கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களுக்கு கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் முன்னுரிமை வழங்கியதன் மூலம் பெரும்பான்மையான சிங்கள பௌத்தமக்களின் ஆத்திரத்தை அவர்கள் மீதும் திருப்பினர்.

இலங்கையின் கடந்த 100 ஆண்டு அரசியல் வரலாற்றில் பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள், இந்த நான்கு சிறுபான்மை பிரிவினரின் மீதும் வன்முறையைப் பிரயோகித்துள்ளனர். 1915ம் ஆண்டு முதல் முறையாக முஸ்லீம் வியாபாரிகள் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல சந்தர்ப்பங்களில் நாட்டின் பல பிரதேசங்களிலும் பெரும்பான்மை சிங்கள மக்கள் முஸ்லீம் மக்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் மிக அண்மைய உதாரணமாக 2001ம் ஆண்டில் நிகழ்ந்த மாவனெல்லை சம்பவத்தை கூறமுடியும். இது சாதாரண சிங்கள மக்கள் முஸ்லீம் மக்களுக்கு எதிராக நடத்திய கலவரம் அல்ல. சந்திரிகா அரசாங்கத்தின் பொறுப்பான பிரதி அமைச்சர் ஒருவரும் மாகாண சபை அங்கத்தவர் ஒருவரும் அப்பிரதேசத்தில் சிங்கள பௌத்தர்கள் இடையே தமக்கு இருக்கும் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக நடத்தி முடிக்கப்பட்ட இனக் கலவரமாகும்.

இலங்கையில் சிறுபான்மை இனமக்களுக்கு எதிராக நடத்தப்படும் இனக்கலவரங்களில் எல்லாம் சாதாரண சிங்களப் பொதுமக்கள் தாமாக கிளர்ந்தெழுந்து வன்முறைகளில் ஈடுபட்டார்கள் என்பதை விடவும் அரசாங்கம், அரசியல் வாதிகள், அரச இயந்திரம், (பொலிஸ், பாதுகாப்பு படைகள், அரசாங்க அதிகாரிகள் ) அல்லது இனவாத கட்சிகள், குழுக்கள் என்பவற்றின் தூண்டுதல்கள், ஒத்துழைப்புக்கள் என்பவற்றுடன் நடத்தப்பட்டதற்கான சான்றுக்களே அதிகம். அந்த வகையில் இலங்கையில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான சிங்கள பெரும்பான்மையினரின் வன்முறைகளுக்கும் இது பொருந்தும். ஆனால் இதே வேளை தலைநகர் கொழும்பிலும் தென்னிலங்கை கரையோரப் பகுதிகளிலும் ஆங்காங்கே முஸ்லீம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே அவ்வப்போது நிகழும் சிறு சிறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைகலப்புகள், மோதல்கள் பெரும் இனக்கலவரங்களாக வெடிக்காமல் பொலீஸ் மற்றும் முஸ்லீம் அரசியல்வாதிகளின் தலையீடுகளோடு தீர்க்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

## இலங்கை முஸ்லீம்களும் தேசிய அரசியலும்

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் 1980களின் முற்பகுதிவரை முஸ்லீம் மக்கள் தமது இனத்துவ அடையாளத்திற்கு எதிராக பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இருந்து வந்த அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதற்கு இரண்டு பிரதான வழிமுறைகளை கையாண்டுள்ளனர். அதில் பிரதானமான மூலோபாயமாக முஸ்லீம் சமூகம் இலங்கையை ஆண்ட இருபெரும் கட்சிகளோடு (UNP, SLFP) கணிசமாக தம்மை இணைத்துக் கொண்டனர். சிங்கள மக்களிடையே பரவலான குழுமங்களாக வாழ்ந்த முஸ்லீம் சமூகத்தவர்கள் தமது வாக்குப் பலத்தை வைத்து இவ்விரு பெரும் கட்சிகளுக்குள்ளும் தமது செல்வாக்கை செலுத்தியதோடு இவ்வரசாங்கங்களிலும் பிரதான பதவிகளை வகித்துள்ளனர். இதன் மூலம் தமது சமூகத்திற்கு எதிராக பெரும்பான்மை சிங்கள மக்களை அரசாங்கமே தூண்டிவிடும் செய்கைகளை கெட்டித்தனமாக அவர்கள் கட்டுப்படுத்தினர்.

மறுபுறமாக கீழே சமூக மட்டத்தில் ‘சிங்களவர்கள் தாக்கினால் நாமும் திருப்பி தாக்குவோம்’ என்கின்ற தற்காப்பு ரீதியான நடைமுறையை முஸ்லீம் மக்கள் ஆரம்பம் முதலே தமது அனுபவங்களின் மூலம் கடைப்பிடித்து வந்துள்ளனர். இதனால் “முஸ்லீம் மக்களுக்கு எதிராக கையை தூக்கினால் அவர்கள் மாட்டிறைச்சி வெட்டும் கத்தியால் எங்களை துண்டு துண்டாக வெட்டுவார்கள்“ என்ற பரவலான அச்ச உணர்வை முஸ்லீம்கள் சிங்களவர்களிடையே ஏற்படுத்தி வைத்திருந்தனர்.

அத்தோடு பிரச்சினைகள் வந்தவுடன் முஸ்லீம் மக்களை ஒன்று குவித்து தற்பாதுகாப்பு நடவடிக்கைக்காக அணிதிரட்டும் மையங்களாக பள்ளிவாசல்கள் இருந்துள்ளமை முஸ்லீம் சமூகத்திற்கு பெரும் வாய்ப்பாக இருந்துள்ளது. பள்ளிவாசல்கள் என்பது இவர்களை வர்க்க வேறுபாடு இன்றி அணிதிரட்டும் மையமாக இருப்பதால் பொருளாதார, அரசியல், நிர்வாக, சமூக மட்டங்களில் மிக உயர்ந்த செல்வாக்குள்ள முஸ்லீம்களும் இவ் அணிசேர்க்கைக்குள் வருவதன் மூலம் சிங்களவர்களுக்கு எதிரான தற்காப்பு தாக்குதலை மிகப்பலமாக செய்ய அவர்களால் கூடுமாக இருந்தது. அதே நேரம் அரசாங்க மட்டத்தில் மற்றும் நிர்வாக மட்டங்களில் தேவையான அழுத்தங்களை இட்டு உடனுக்குடன் பதில் நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டார்கள். இதை அவர்கள் மிகச் சாணக்கியமாகச் செய்து வந்துள்ளனர்.

எனவே 1980களின் நடுப்பகுதிவரை இலங்கைவாழ் முஸ்லீம்கள் தேசிய அரசியலில் இருந்து தம்மைப் பிரித்து தனியான இனத்துவ அடையாளத்துடன் கூடிய தனியான ஒரு அரசியல் சக்தியாக பிராந்திய ரீதியில் தம்மை வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை. பல்வேறு சமூக கலாச்சார தேவைகளுக்காக மன்றங்கள், கூட்டமைப்புக்கள், சங்கங்கள் என்பவற்றை அவர்கள் அமைத்துக் கொண்டாலும் தமக்கான தனியான அரசியல் கட்சியை உருவாக்குவதை வேண்டும் என்றே அவர்கள் தவிர்த்துக் கொண்டார்கள் என்றே கூறவேண்டும். இதே போல் இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வடகிழக்கு அரசியலிலும் அவர்கள் பிரதானமான மூலோபாயமாக தமிழ் மக்களிடம் பெரும்பாலும் செல்வாக்கு பெற்றிருந்த தமிழரசுக் கட்சியோடு இணைந்தே அரசியலை நடத்தியுள்ளார்கள். இதற்கும் புறம்பாக இலங்கையில் பரவலாக இடதுசாரி கட்சிகளுக்குள்ளும் தம்மை இணைத்து கொண்டு அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.



**அரசியல் ரீதியாக முஸ்லீம்கள் வெவ்வேறு கட்சிகளுக்குள் இணைந்து செயற்பட்டாலும் முஸ்லீம்கள் தமது மதத்தின் அடிப்படையில் சமூக, கலாச்சாரங்களை பேணியதோடு தம் இனத்துவ அடையாளத்தை பேணிவந்துள்ளனர். ஆனால் 1980களில் இறுதிப்பகுதியில் இருந்து அவர்கள் அரசியல் ரீதியாகவும் தமக்கென ஓர் தனியான அடையாளத்தை நிலைநாட்டவும் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் தமக்கு உரிய நியாயமான பங்கினை கோரவும் தலைப்பட்டனர் இது முஸ்லீம் சமூகத்தின் அரசியலில் கூர்ப்பு நிலையில் ஓர் வளர்ச்சிக் கட்டமாகும்.**

அரசியல் ரீதியாக முஸ்லீம்கள் வெவ்வேறு கட்சிகளுக்குள் இணைந்து செயற்பட்டாலும் முஸ்லீம்கள் என்கின்ற தமது மதத்தின் அடிப்படையில் சமூக, கலாச்சார பண்பாடுகளை பேணியதோடு குறிப்பான ஓர் இனத்துவ அடையாளத்தை உறுதியாக பேணிவந்துள்ளனர். ஆனால் 1980களின் இறுதிப்பகுதியில் இருந்து அவர்கள் அரசியல் ரீதியாகவும் தமக்கென ஓர் தனியான அடையாளத்தை நிலைநாட்டவும் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் தமக்கு உரிய நியாயமான பங்கினை கோரவும் தலைப்பட்டதோடு தம்மைத்தாமே நிர்வகிக்கும் அதிகாரத்தை கோரி நிற்கவும் சிந்திக்க தலைப்பட்டனர். இது முஸ்லீம் சமூகத்தின் அரசியல் கூர்ப்பு நிலையில் ஓர் வளர்ச்சிக் கட்டமாகும்.

## தமிழ் பேரினவாத அரசியலும் முஸ்லீம்களும்

முஸ்லிம்களின் இந்த அரசியல் பாய்ச்சலுக்கு ஓர் அளவிற்கு இலங்கை அரசாங்கங்கள் வகைசொல்லியே தீரவேண்டும் என்றாலும் பிரதான பொறுப்பு வடகிழக்கு தமிழ் பேரினவாத அரசியலைச் சார்ந்ததாகும். வடக்குக் கிழக்கில் முஸ்லீம் சமூகமானது அதிகமாகவும் அதேவேளை அப்பிரதேசத்தின் பொருளாதார, சமூக, கலை இலக்கிய விடயங்களோடு நெருக்கமாகவும் பிணைந்து வாழ்ந்தது மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஆகும். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லீம் மக்ளுக்கும் தமிழர்களுக்குமிடையே அவ்வப்போது உரசல்கள், கைகலப்புக்கள் நிகழ்ந்திருந்தாலும் அவை பின்னர் அச்சமூகங்களாலேயே தீர்த்துக் கொள்ளப் பட்டுள்ளன. ஆனால் அவை முஸ்லீம் மக்களை தனியான அர சியல் சக்தியாக வளர்வதற்கு வழிசெய்யவில்லை. ஆனால் 1980ளின் பிற்பகுதியல் இருந்து முஸ்லீம்கள் மீது தமிழ் பேரினவாத அரசியல் பின்னணியில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல்களானது அவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனியான ஒரு அரசியல் சக்தியாக உருவாக வழி சமைத்தது. வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வாழ்ந்த அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை அடிப்படையாக கொண்டே சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) என்னும் முஸ்லீம்களின் தனித்துவமான கட்சி உருவாக்கப்பட்டாலும் திருகோணமலை, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம்களிடையேயும் அதன் செல்வாக்கு வேகமாக பரவத் தொடங்கியதுடன், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லீம் மக்களும் அக்கட்சியின் கொள்கைகள் மீது தம் கவனத்தை திருப்பினர். இதற்கு காரணம் குறிப்பாக தமிழ் சமூகத்தின் பேரினவாத ஆதிக்க அரசியலால் அச்சமூகத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எவ்வாறு இலங்கை பிர்தானியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் சிங்கள பெரும்பான்மை






**ஆயுதமேந்திய தமிழ் இனவாத பாசிச படைகளும் ஆயுதமேந்திய தமிழ் காடையர்களும் முஸ்லீம்களின் மீது நடத்திய கொடூரமான தாக்குதல்களினால் இன்று முஸ்லீம்கள் மிதவாத ஜனநாயக அரசியலையும் தாண்டி இஸ்லாமிய தீவிரவாத அரசியலை நோக்கிச் செல்ல வைத்துள்ளது. அதற்கான ஆழமான அத்திவாரத்தை தமிழ்ப் பேரினவாதம் வெட்டிக் கொடுத்துள்ளது.**

சமூகத்தின் பேரினவாத அரசியலின் காரணமாக தமிழ் மக்கள் தமக்கிடையே இருந்த பிரதேச, சாதி வேறுபாடுகளைக் கடந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, அதனைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின்பால் தமது கவனத்தை திருப்பினார்களோ அதை ஒத்ததுதான் தமிழ் பேரினவாத அரசியலின் அச்சுறுத்தல் காரணமாக முஸ்லீம் மக்கள் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் பின்னால் அணிவகுக்கச் செய்தது.

எவ்வாறு 1970களின் பின்னால் இலங்கை அரச படைகள், அரசியல்வாதிகளின் காடையர் கும்பல்கள், அடுத்தடுத்து தமிழர்கள் மீது கொடிய வன்முறைகளை கட்டவிழத்து விட்டதனால் தமிழர்கள் ஆயுதமேந்திய தீவிரவாத அரசியலுக்கு தள்ளப்பட்டார்களோ அதேபோல்தான் ஆயுதமேந்திய தமிழ் இனவாத பாசிச படைகளும் ஆயுதமேந்திய தமிழ் காடையர்களும் முஸ்லீம்களின் மீது நடத்திய கொடூரமான தாக்குதல்களினால் இன்று மூஸ்லீம்கள் மிதவாத ஜனநாயக அரசியலையும் தாண்டி இஸ்லாமிய தீவிரவாத அரசியலை நோக்கிச் செல்ல வைத்துள்ளது. அதற்கான ஆழமான அத்திவாரத்தை தமிழ்ப் பேரினவாதம் வெட்டிக் கொடுத்துள்ளது. இன்று உலக ரீதியாக பலராலும் அச்சத்தோடு பார்க்கப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதமும் தீவிரவாதமுமே இலங்கையிலும் முஸ்லீம் மக்களை பாதித்துள்ளது. எனவே இதை வளரவிடுவது ஆபத்தானது என ஒருவித கருத்து தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டாலும் அதற்கு எந்தவிதமான தர்க்க ரீதியான ஆதாரங்களும் கிடையாது.

இது சரியாக தமிழர்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து இன்றுவரை சிங்கள பேரினவாதிகள், தமிழரின் போராட்டம் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்றும், தமிழ் நாட்டில் உள்ள தமிழ் தீவிரவாதத்தின் பரவலென்றும், வரலாற்றில் சோழர்கள் இலங்கையை ஆக்கிரமித்த நடவடிக் கையின் தொடர்ச்சி என்றும் பிதற்றித் திரிந்ததை ஒத்ததாகும். ஆனால் உண்மையில் தமிழ்த் தீவிரவா தத்திற்கு காரணம் சிங்கள பேரினவாத அரசியல் என்பது எவ்வளவு உண்மையோ, அதேபோல் இலங்கை முஸ்லீம் மக்களை தீவிரவாதத்திற்குள் தள்ளிய பொறுப்பை தமிழ் அரசியல் சக்திகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர்களுக்கு எதிரான சிங்கள பேரினவாத அரசியலை குற்றம் சாட்டும் பொழுது சாதாரண சிங்களவர்கள் மீதும், சிங்களக் கல்விமான்கள், புத்திஜீவிகள், ஊடகங்கள் என்பவற்றின் மீதும் கணிசமான குற்றத்தை சுமத்த நாம் தவறுவதில்லை. ஏன் என்றால் சிங்கள பௌத்த பேரினவாத அரசியலானது அதிகாரத்திற்கு வருவதற்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் தம் வாக்குகளாலும், ஏனைய சகல சிங்கள சக்திகளும் தேசியம் எனக் கூறிக்கொண்டு ஆதரித்து அனுமதி வழங்கியுள்ளனர். அதேபோல் தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ள தமிழ்ப்பேரினவாத, பாசிச, முஸ்லீம் எதிர்ப்பு அரசியலை ஆதரிக்கும் தமிழ் பொதுமக்களும், தமிழ் புத்திஜீவிச் சமூகமும், தமிழ் ஊடகங்கள் என்பனவும் முஸ்லீம் மக்களின் இந்த தீவிரவாதப் போக்கிற்கு வகைசொல்லியே தீரவேண்டும்.

## முஸ்லிம்கள் மீதான ஆயுத பலாத்காரம்

ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்களால் முஸ்லீம் மக்கள் மீது நடத்தப்பட்ட ஆயுத பலாத்காரம் பற்றி பேசும்போது உடனடியாக முன்வைக்கப்படும் வாதம், முஸ்லீம்கள் எப்போதும் அரச படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதேயாகும். இவ்வாறான தாக்குதல்கள் தொடர்பாக ஆதாரங்கள் அல்லது சான்றுகள் முன்வைக்கப்படும் போது அவற்றை மூடி மறைப்பதற்கு முஸ்லீம் சமூகத்தில் சில சக்திகள் முனையலாம். ஆனால் இச் சம்பவங்கள் முற்றும் முழுதாக தமிழ் ஊடகங்களால் அம்பலப் படுத்தப்பட்டுள்ளன. அல்லது அம்பலப்படுத்தப்பட முடியும். காரணம் இலங்கையில் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் வடகிழக்கு தமிழர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் வடகிழக்கில் குறிப்பாக முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே கைகலப்புக்கள், மோதல்கள் அதிகம் ஏற்பட்டுள்ளது என்றால் அது கிழக்கு மாகாணத்தில்தான். குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களையே சொல்ல முடியும். அதிலும் இம் மோதல்களுக்கு பின்னணியாக இருந்தமை தீவிர அரசியல் காரணங்கள் என்பதைவிட, தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கு மிடையேயான சமூக, பொருளாதார முரண் பாடுகளேயாகும். குறிப்பான சில துறைகளில் முஸ்லீம் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர்களை மேவிச் செல்வதும், அதற்கு முஸ்லீம்கள் தேசிய அரசியலோடு தம்மை பிணைத்துக் கொண்டிருந்தமையும், அதனால் அவர்களுக்கு தமிழர்களுக்கு கிடைக்காத சில வாய்ப்புக்கள் கிடைக்க கூடியதாக இருந்தமையும் கிழக்கு மாகாண தமிழர்களுக்கு எரிச்சலை ஊட்டியது. ஆனால் அவ்வாறான வசதி வாய்ப்புக்களை பெற்றவர்கள் கிழக்கு மாகாண முஸ்லீம்களில் மிகச் சிறிய வீதமானவர்களே. பெரும்பான்மையான முஸ்லீம்கள் தமிழர்களைப்போல் வறுமையில் உழல்பவர்கள்தான்.

வரலாறு முழுவதுமே எதிர்க்கட்சி அரசியலைச் செய்த தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கில் தமக்கு நெருக்கமானவர்களுக்கும், நம்பிக்கையானவர்களுக்கும், தமக்கு காக்காய் பிடிப்பவர்களுக்கும் மாத்திரம் சாராய தவறணைக் கோட்டா, பெற்றோல் செட் கோட்டா, பீடிக் கோட்டா என்பவற்றை இரகசியமாக பெற்றுக் கொடுத்து ஒருபுறம் பணம் சம்பாதித்துக் கொண்டதோடு, வெளியிலே பகட்டுக்கு சாதாரண தமிழர்கள் முன்னால் வீர வசனம் பேசுவதும், தமிழ் தேசியம் கதைப்பதும், அரசாங்கத்தோடு படுத்தவன் எல்லாம் துரோகி என்பதும் தான் வழமை. இது அன்று முதல் இன்றுள்ள கடைசி-கட்ட பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் வரை பொருந்தும்.

எனவே கிழக்கில் உள்ள சாதாரண வறிய தமிழர்கள் விசயம் அறியாமல் சாதாரண முஸ்லீம்கள் மீது எரிச்சல் அடைவதும், எளிய சோனி, தொப்பி பிரட்டி, முக்கால் என அவர்களை திட்டித் தீர்த்து முஸ்லீம் விரோதம் பேசுவதும் புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

ஆனால் விடுதலைப் போராட்டத்துக்கென ஆய்தமேந்தி முற்போக்கு தமிழ் ஈழம், புரட்சிகர தமிழ் ஈழம், சோசலிச தமிழ் ஈழம், இறுதியாக சோனிகள் இல்லாத புனிதத் தமிழ் ஈழம் பேசிய எல்லோருமே கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களிடையே இருந்த முஸ்லீம் விரோதத்தை தமக்கு ஏற்ற அளவில், தமக்கு ஏற்ற வகையில் பாவித்துதான் உள்ளனர். ஆனால் இவ்வாயுதம் ஏந்திய இயக்கங்கள் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இவற்றில் ஈடுபடாமல் இருந்தமைக்கு காரணம் அங்கு பாரிய அளவில் கிழக்கில் உள்ளது போன்ற முஸ்லீம் விரோதம் சாதாரண தமிழர்களிடையே பரப்பப்பட்டிருக்கவில்லை. வடக்கில் இருந்து முஸ்லீம்களை உடுத்த துணியுடன் விரட்டி இனச்சுத்திகரிப்பில் தமிழ் பாசிஸ்ட்டுகள் ஈடுபடும்போது கூட கிழக்கில் இருந்து கரிகாலன், கருணா உட்பட பலரைக் கொண்டு வந்துதான் அச்செயலை மேற்கொண்டதில் இருந்து மேலே சொன்ன உண்மையை புரிந்து கொள்ளலாம். வடக்கில் இருந்து விரட்டப்பட்டு 13 வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழும் முஸ்லீம்களும் கூட இன்றுவரை சாதாரண வடக்கு தமிழ் மக்களுக்கு எதிராக கருத்து வெளியிடாமல் இருப்பது இதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஆனால் விடுதலைப் போராட்டத்துக்கென ஆயுதமேந்தி முற்போக்கு தமிழ் ஈழம், புரட்சிகர தமிழ் ஈழம், சோசலிச தமிழ் ஈழம், இறுதியாக சோனிகள் இல்லாத புனிதத் தமிழ் ஈழம் பேசிய எல்லோருமே கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களிடையே இருந்த முஸ்லீம் விரோதத்தை தமக்கு ஏற்ற அளவில், தமக்கு ஏற்ற வகையில் பாவித்துதான் உள்ளனர். ஆனால் இவ்வாயுதம் ஏந்திய இயக்கங்கள் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிழிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் இவற்றில் ஈடுபடாமல் இருந்தமைக்கு காரணம் அங்கு பாரிய அளவில் கிழக்கில் உள்ளது போன்ற முஸ்லீம் விரோதம் சாதாரண தமிழர்களிடையே பரப்பப்பட்டிருக்கவில்லை.

ஆனால் ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்கள் பல்வேறு தருணங்களில் முஸ்லீம்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வது, சந்தேகத்தில் அவர்களைத் தாக்குவது அரச உளவாளிகள் என்று கூறி கொலை செய்வது போன்ற உதிரியான சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்திருக்கின்றன. மன்னார் நானாட்டானில் ஒரு முஸ்லீமை துரத்திச் சென்று அவ்வூரில் இருந்த பள்ளிவாசலுக்குள் வைத்து அவரைச் சுட்டுக் கொன்ற சம்பவத்தின் மூலம் ஈரோஸ் இயக்கம் தமிழ் விடுதலை போராளிகள் மீது முஸ்லீம்கள் சந்தேகப்படும் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. அச்சம்பவம் முதல், இந்திய இராணுவத்தோடு சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் பிரதான பொறுப்பில் இருந்த மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த கிருபா எனப்படும் கிருபாகரன் தலைமையில் கிழக்கு மாகாண முஸ்லீம்கள் தாக்கப்பட்டது உட்பட அனைத்து சம்பவங்களும் கிழக்கு மாகாண முஸ்லீம்கள் ஆவணப் படுத்தி வைத்துள்ளனர். (பார்க்க நூல் 'ஈழத்தின் இன்னுமோர் மூலை') இன்நூலில் மிகப் பழைய சம்பவமான வீரமுனைச் சம்பவத்தில் இருந்து 1991ம் ஆண்டை அண்மித்த சம்பவங்கள் வரை தெளிவாக ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. இன்நூலில் உள்ள தகவல்கள் பொய்யானவை என்றோ இட்டுக் கட்டப்பட்டவை என்றோ இதுவரை தமிழர் தரப்பில் இருந்து குறிப்பான அறிக்கைகளோ ஆவணங்களோ வெளி வராதது இன்நூலில் வெளியிடப்பட்ட தகவல்


மூதூர் அகதிகள்

களுக்கு உரம் சேர்க்கின்றன. தமிழ் ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் வடக்கிலும் கிழக்கிலும் பரவலாக வளர்ச்சி பெற்றிருந்தாலும், முஸ்லீம்கள் மீது ஆங்காங்கே ஆயுத பலாத்காரத்தில் ஈடுபட்டாலும், 1986ம் ஆண்டு நடுப்பகுதிவரை பாரிய அளவில் முஸ்லீம் சமூகத்திற்கும் தமிழ் ஆயுதமேந்திய இயக்கங்களுக்கும் இடையே முரண்பாடுகள் பெருக்கவில்லை. இது அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு பாரிய தலையிடியாக இருந்தது. ஜே.ஆரின் அரசாங்கம் திட்டமிட்ட வகையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களுக்கு தமிழ் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளதாக பிரச்சாரம் செய்ததோடு கிழக்கில் ஐக்கிய தேசிய கட்சிக்கு நெருக்கமான குடும்பங்களில் இருந்து முஸ்லீம் ஊர்காவற் படையை உருவாக்கியது. இதற்கு பொறுப்பாக அப்போதைய அமைச்சர்கள் ஏ.சி.எஸ். ஹமீட் மற்றும் எம். எச்.முகமட் ஆகியோரை நியமித்தது.

1986ம் ஆண்டு இறுதியிலும் 1987ம் ஆண்டு முற்பகுதியிலும் கிழக்கில் ஆயுதமேந்திய முஸ்லீம் ஊர்காவல் படையானது தமிழர்கள் மீது நடத்திய பல தாக்குதல்களுக்கு அங்கிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு அரசியல் வாதிகளும், அரச படைகளும். அரசாங்கமுமே பொறுப்பாகும். இத்தாக்குதல்களின் போது சாதாரண உடையில் முஸ்லீம் கிராமத்தவர்கள் போல் போய் தமிழர்களின் வீடுகளுக்கு தீவைத்த ஐக்கிய தேசிய கட்சி முஸ்லீம் காடையர்கள் கொழும்பு, பேருவளை, அக்குரணை போன்ற இடங்களில் இருந்தும் அரச ஆதரவுடன் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஆனால் இந்தப் பழி கிழக்கு மாகாண சாதாரண முஸ்லீம் மக்கள் மீது திட்டமிட்டு சுமத்தப்பட்டதுடன். அதை தமிழ் மக்கள் நம்பவும் செய்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்கத்தின் இச்சதி வலைக்குள் விழாமல் தப்புவதற்கு ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்கங்களுக்கு அரசியல் சாணக்கியமும், நிதானமும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அது மிக மட்டமாகவே இவர்களிடம் இருந்தது. 1988களில் இந்திய இராணுவம் இருந்த பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் கிருபாவின் தலைமையில் முஸ்லீம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிக பாரதூரமாகவும் ஓர் வரலாற்றுக் கறையாகவும் பாரக்கப்பட வேண்டியதுமாகும். ஏனெனில் சோசலிசம், இடதுசாரித்துவம் எனக் கதைத்த ஓர் அரசியல் இயக்கம் இதை மேற்கொண்டதாகும்.

## தமிழ் பாசசத்தின் முஸ்லீம் விரோதம்

தமிழ் பாசிசப் புலிகளைப் பொறுத்தவரையில் முஸ்லீம்கள் மீதான தாக்குதலை மிகத் திட்டமிட்ட வகையில் தருணம் பார்த்து மிகத் தொலைநோக்கோடு 1990ல் அது மேற்கொண்டது. அதற்கு முன்னர் முஸ்லீம்கள் மீது அது பாரிய தாக்குதல் எதையும் தொடுக்கவில்லை. ஆனால் இந்திய ராணுவம் இருந்தபொழுது கிழக்கு மாகாண முஸ்லீம்கள் பிரச்சினையை தனியாக ஆராய்வதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி (PFLT) க்கு பொறுப்பாக இருந்த புலிகள் இயக்கத்தின் பிரதிப் பொறுப்பாளர் மாத்தையா எனப்படும் மகேந்திரராசாவின் தலைமையில் 1988ல் வாகரை மாநாடு நடத்தப்பட்டது. கிழக்கு மாகாண முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளும் அம்மாநாட்டில் மிக நம்பிக்கையோடு பங்குபற்றி உள்ளனர். வாகரை மாநாட்டு முடிவுகள் நூல் வடிவமாக பிரசுரிக்கப்பட்டு வடகிழக்கு மக்கள் இடையே பரவலாக விநியோகிக்கப் பட்டது. ஆனால் 1990களில் தமிழ்ப் பாசிசம் தன் இராணுவ அதிகாரத்தை நிலைநிறுத்த எடுத்த முயற்சியில் முஸ்லீம்களை வடகிழக்கில் இருந்து துரத்தியதோடு கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு பெரும் தொகையில் முஸ்லீம் களை இனஅழிப்புச் செய்யது. அதே வேளை முஸ்லீம்களை தமிழர்களின் எதிரியாக பிரகடனப்படுத்தியதோடு, தனது இயக்கத் திற்குள் மக்கள் முன்னணியின் (PFLT) செயற்பாடுகளை தடை செய்ததோடு வாகரை மாநாட்டு அறிக்கையையும் குழி தோண்டிப் புதைத்தது. இன்று அப்படி ஒரு மாநாடு நடத்தப் பட்டதும் அதன் முடிவுகள் அறிக்கையாக வெளிவந்நதும் பலருக்கு தெரியாது.

1990ல் இருந்து இன்றுவரை முஸ்லீம்கள் மீது தமிழ் பாசிசம் நடத்திய கொடூரமான தாக்குதலின் பட்டியல் மிக நீண்டது. திடீரென எவ்வித பாரிய காரணங்களும் கூறப்படாமல் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கு இன்றுவரை தமிழ் சமூகத்தில் இருந்து காத்திரமான கேள்விகள் கேட்கப்படவும் இல்லை, அதற்கான பதில்கள் கொடுக்கப்படவும் இல்லை. ஆனால் தமிழ் பாசிஸ்டுகளின் இத் திடீர் இனச் சுத்திகரிப்பு நடவடிக் கைக்கான அரசியல் பின்னணி இலங்கை மண்ணின் எல்லைக ளையும் தாண்டியது. இது தமிழர்களுக்குத் தெரியாவிட்டாலும் முஸ்லீம் மக்களுக்கு ஓரளவு புரிந்து விட்டது போல் தெரிகின்றது. அவர்களின் தீவிர மதவாத அரசியலை நோக்கிய நகர்வு இதையே தெளிவாகக் காட்டுகிறது. அது தொடர்பான விபரமான கட்டுரை அடுத்து வரும் இதழ்களில் வெளிவரும்.

## முஸ்லீம் தீவிரவாதமும் தமிழர்களின் தர்க்கமும்

"நாங்கள் தமிழர்கள் எனவே எமது உடன் பிறப்புக்களாகிய ஆறரைக்கோடி தமிழ் நாட்டு மக்களிடம் ஆதரவு பெறுவது, அங்குள்ள அரசியல் வாதிகளிடம் கோடி கோடியாக பணமும், ஆயுதங்களும் வாங்குவது, அங்கள் ஊடகங்களைப் பயன்படுத்துவது, இந்திய மண்ணை நமது இராணுவப் பயிற்சிக் காகப் பயன்படுத்துவது சரி என்றால், உலகெங்கும் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் எல்லா நாட்டுத் தமிழர்களிடமும்

## 1988ல் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட வாகரை ஒப்பந்தத்தின் முக்கிய இணக்கப்பாடுகள்

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசினாலும் அவர்கள் முழுமையான தமிழ் தேசியத்தத்துள் உள்ளடக்கப் படுகின்ற தனித்துவமான ஒரு இனம் என்பது ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய தமிழ் மக்கள் கொள்ளுவதைப் போலவே வடக்குக் கிழக்கு மகாணப் பிரதேசத்தில் வாழும் முஸ்லீம்களும் அப்பிரதேசத்தை தமது பாரம்பரியத் தாயகப் பிரதேசமாகவே கொள்ளுகின்றனர்.

தமது பாரம்பரியப் தாயகப் பிரதேசத்திலேயே முஸ்லிம் மக்களின் நலன்கள் முழுமையாகப் பாதுகாக்கப்பட முடியும் என முஸ்லீம் மக்கள் நம்புகின்றனர். தமிழ் மொழி பேசும் பரந்துபட்ட மக்களின் ஒட்டுமொத்த ஐக்கியப்பாடு மூலமே அது அடையப்பட முடியும் எனவும் அவர்கள் நம்புகின்றனர்.

தமது தாயகப் பிரதேசத்துக்குள் முஸ்லீம்கள் சிறுபான்மையினராக இருப்பதால் அப்பிரதேசத்துக்குள் அவர்களுக்கு சுதந்திரமானதும் அச்சம் இல்லாததுமான வாழ்நிலையானது உறுதிப்படுத்தப்பட வேண்டும். சகல சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதோடு இதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவர்.

முஸ்லீம் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்ற வகையில் எடுக்கப்படும் எந்தவொரு நியாயமான அதிகாரப் பரவலாக்கல் நடவடிக்கைகளும் தமிழ் தாயகப் பிரதேசத்தின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிழக்குமாகாண மக்கள் சனத்தொகையில் முஸ்லீம் மக்கள் 33% மாக இருக்கின்ற அதேவேளை மொத்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் அவர்கள் 18% மானவர்களாய் இருக்கிறார்கள். எனவே முஸ்லீம் சமூகமானது தனக்குரிய நியாயமான அதிகாரப் பரவலாக்கத்தின் நன்மைகளை அநுபவிப்பதற்கு ஏற்ற வகையில் மாகாணசபையிலும் அதன் அமைச்சரவையிலும் 30% பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர்காலத்தில் நடத்தப்படும் எந்தவொரு நிலப்பங்கீட்டின் போதும் முஸ்லீம் மக்களுக்கு, கிழக்கு மாகாணத்தில் 35% இற்கு குறையாமலும் மன்னார் மாவட்டத்தில் 30% இற்கு குறையாமலும், ஏனைய பிரதேசங்களில் 5% இற்கு குறையாமலும் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வடகிழக்கு மாகாண சபையில் ஒரு முஸ்லீம் முதலமைச்சராக தெரிவுசெய்யப்படாத பட்சத்தில் பிரதி முதலமைச்சர் பதவிக்கு நிட்சயமாக ஒரு முஸ்லீம் தெரிவு செய்யப்படுவதற்கான சட்ட ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களால் எற்பட்டுள்ள பாரதூரமான விளைவுகளை கணக்கிற் கொண்டு குடியேற்றக் கலைப்பு கொள்கையொன்று வகுக்கப்படுவதற்கு வகை செய்யப்படுதல் வேண்டும்.

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக அதிகம் பாதிக்கப் பட்டவர்கள் பெருந்தொகையான அப்பாவிப் பொதுமக்களே என்பதால் அவர்கள் தமது துன்பங்களில் இருந்து மீண்டு சுமகமானதும், அமைதியானதுமான வாழ்க்கை நிலைக்கு திரும்ப வழிவகைகள் செய்யப்படல் வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதரவைப் பெற்று நாம் போராடுவது சரியென்றால், இலங்கையில் எம்மைவிட எண்ணிக்கையில் குறைந்த சிறுபான்மை இனமான இலங்கை முஸ்லீம்கள் உலகெங்கும் உள்ள முஸ்லீம் நாடுகள், தலிபான்கள், ஏன் ஒசாமா பின்லாடனிடமும் கூட ஆதரவைப் பெற்று தம்மை ஒடுக்க நினைக்கின்ற இலங்கைத் தமிழர்களோடு மோத நினைப்பதில் என்ன தவறு?

ஆயிரக்கணக்காக தமிழ் சமூகத்தில் துரோகிகளைக் கொலை செய்து, தமிழரின் உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடவந்த ஏனைய தமிழ் இயக்கங்களை கொன்றொழித்து, சிங்களக் கிராமங்களுக்குள் பாய்ந்து சாதாரண சிங்கள மக்களை ஆயிரக்கணக்கில் வெட்டிக்கொன்று, சிங்கள அரசியல் வாதிகளை கொலை செய்து, சிங்கள இராணுவத்தினரை ஓட ஓட அடித்து விரட்டியதால் தான் சிங்களவன் இன்று தமிழர்களுக்கு பயந்து சமாதானம் பேச வந்திருக்கிறான், என தமிழர்களாகிய எமது அரசியல் தர்க்க சாஸ்திரத்தின்படி சரியென்றால், அதேபாணியில் முஸ்லீம் சமூகத்தில் துரோகிகளை ஒழிப்பதில் ஆரம்பித்து, தமிழ் சமூகத்தை வெட்டிக் குவித்து, தமிழ் பாசிசப் படைகளை ஓட ஓட விரட்டி தமிழ் தலைவர்களை கட்டிப்பிடித்து மாலை அணிவிக்கும் மனித வெடிகுண்டுகளை அல்லாஹ்வின் பெயரால், ஜிஹாத் புனித யுத்தத்தின் பெயரால் அனுப்பினால் தான் தமிழன் எங்களுக்கு பயந்து சமாதானம் பேச வருவான் என்று முஸ்லீம் மாவீரர்கள் நினைக்க ஆரம்பித்தால் அதைத் தவறு என கூறுவதற்கு எந்த மறத் தமிழனுக்கு அருகதை இருகிறது...? அந்த அருகதையை நாம் என்றோ இழந்து விட்டோம்.

அதே பாணியில் முஸ்லீம் சமூகத்தில் துரோகிகளை ஒழிப்பதில் ஆரம்பித்து, தமிழ் சமூகத்தை வெட்டிக் குவித்து, தமிழ் பாசிசப் படைகளை ஓட ஓட விரட்டி தமிழ் தலைவர்களை கட்டிப்பிடித்து மாலை அணிவிக்கும் மனித வெடிகுண்டுகளை அல்லாஹ்வின் பெயரால், ஜிஹாத் புனித யுத்தத்தின் பெயரால் அனுப்பினால் தான் தமிழன் எங்களுக்கு பயந்து சமாதானம் பேச வருவான் என்று முஸ்லீம் மாவீரர்கள் நினைக்க ஆரம்பித்தால் அதைத் தவறு என கூறுவதற்கு எந்த மறத் தமிழனுக்கு அருகதை இருகிறது...?

இவ்வாறான யதார்த்த சூழலில்தான் இன்று இலங்கை வாழ், குறிப்பாக வடகிழக்கு முஸ்லீம்களின் அரசியல் நிலமை இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் தீவிரவாத ஆயுத அரசியலால் தூக்கி எறியப்பட்டது போல், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசும், மிதவாத முஸ்லீம் தலைவர்களும் முஸ்லீம் தீவிரவாதத்தால் தூக்கி எறியப்படுவதற்கான சூழ்நிலையை நோக்கி முஸ்லீம் சமூகம் தமிழ் பேரினவாத அரசியலால் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

முஸ்லீம் சமூகத்திலும் துரோகிகளை அழிக்கும் அரசியல் மெல்ல தலையெடுக்க தொடங்கியுள்ளது. தென்கிழக்கு பல்கலைக்கழகம் முஸ்லீம் இனத்துவ அடையாளத்தை பேசி முஸ்லீம் தீவிரவாதத்தை நியாயப்படுத்தும் மையமாக விரைவாக மாறக்கூடும். அல்லது மாறிவிட்டது. அதேவேளை சர்வதேச ரீதியாக முஸ்லீம் மக்களின் தீவிர அணிச் சேர்க்கை இன்று நிகழ்ந்து கொண்டு இருப்பதும், அதோடு இலங்கை முஸ்லீம்கள் தம்மை அதிவிரைவில் இணைத்துக் கொள்வதற்கு அவர்களை வேகமாக தள்ளிவிடும் பணியையும் இன்று தமிழ் பேரினவாத பாசிச அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்த யதார்த்தத்தில் 1950களில் சிங்கள மொழிச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரும் பொழுது சிங்கள இடதுசாரி அரசியல்வாதியான கொல்வின் ஆர். டி. சில்வா, சிங்கள மக்களுக்கு கூறிய **"ஒரு மொழி என்றால் இரு நாடு. இரு மொழி என்றால் ஒரு நாடு"** என்னும் வாக்கியத்தை, இன்று தமிழர்களாகிய நாம் **"ஒரு இனமென்றால் இரு பிராந்தியம். இரு இனமென்றால் ஒரு பிராந்தியம்"** என முஸ்லிம்கள் சார்பாக தமிழர்களுக்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

"வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் கோடி கோடியாக பணம் தருவார்கள். ஆயுதம் கப்பல் கப்பலாக வரும். ஊரில் எஞ்சியிருக்கும் வறிய பள், பறையின் பிள்ளைகளையும் தோட்டக்காட்டானையும் பிடித்து குண்டைக் கட்டி அனுப்பி சோனிகளை எல்லாம் தொலைத்துவிட்டு தலைவர் தமிழ் ஈழம் காண்பார். தலைவரை ஒருத்தரும் ஒரு மசிரும் புடுங்க இயலாது" என கனவு காணாது இருப்போம். இப்படி கனவு கண்ட பல தலைவர்களும் அரசியல் சக்திகளும் சமூகங்களும் கூட உலகில் உருத்தெரியாமல் அழிந்து போய் உள்ளன.

எனவேதான் ஒரு விடுதலைப் போராட்டத்தைப் போராடி வெற்றி பெறும்போது அதிக நிதானமும், நாகரீகமும், அரசியல் விவேகமும் அவசியம். நெல்சன் மண்டேலா போராடிப் பெற்ற தென்னாபிரிக்காவில், தம்மையே அடக்கி ஆண்ட வெள்ளைச் சிறுபான்மையினருக்கு சம அந்தஸ்து கொடுக்கும் பக்குவத்திற்கு பெரும்பான்மை கறுப்பினத்தவர்களை அவர் கொண்டு சென்றதால்தான் இன்று அவர்கள் நிம்மதியாக உண்டு உறங்கி வாழ்கிறார்கள். தமது வெற்றியின் பலனை அனுபவிக்கிறார்கள். எனவே கடந்த 25 வருடகால தமிழர் போராட்டத்தின் பயனாக எதையாவது பெற்று நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்னும் எண்ணம் இருந்தால் எம்மோடு பல நூற்றாண்டு காலம் ஒரே மொழியைப் பேசி, ஒரே பிரதேசத்தில் எம்மோடு வாழ்ந்து, இன்று எம்மாலேயே ஒடுக்கப்பட்டு, அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் முஸ்லீம் சமூகத்திற்கு சம அந்தஸ்து கொடுக்க நாம் முன்வந்தால் மட்டுமே நமது சமூகம் நிம்மதியாக வாழமுடியும். சிங்களவனிடம் இருந்து நாங்கள் பெறுவதை எல்லாம் பெற்று அதை ஆண்டு அனுபவித்து திண்டு சுவைத்து எலும்புத் துண்டை வீசுவோம் இதைப் பொறுக்கி முஸ்லீம்கள் வாழட்டும் என்று சிந்திப்பதற்கு இது அடிமைச் சமூக காலகட்டமல்ல. 21ம் நூற்றாண்டு.

கடந்த 25 வருடகால தமிழர் போராட்டத்தின் பயனாக எதையாவது பெற்று நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்னும் எண்ணம் இருந்தால் எம்மோடு பல நூற்றாண்டு காலம் ஒரே மொழியைப் பேசி, ஒரே பிரதேசத்தில் எம்மோடு வாழ்ந்து, இன்று எம்மாலேயே ஒடுக்கப்பட்டு, அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் முஸ்லீம் சமூகத்திற்கு சம அந்தஸ்து கொடுக்க நாம் முன்வந்தால் மட்டுமே நமது சமூகம் நிம்மதியாக வாழமுடியும்.

## முஸ்லீம் சமூகத்தின் கவனத்திற்கு

முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ்வதால் நன்மையா அல்லது பிரிந்து வாழ்வது அவர்களுக்கு நன்மையா என்பதை தீர்மானிப்பதற்கு அவர்களுக்கு முழுமையான உரிமை உண்டு. அதில் எவரும் அவர்களுக்கு அழுத்தமிட முடியாது. ஆனால் சிறுபான்மை தமிழர்களாகிய எங்களைப் பொறுத்தவரை, வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை முஸ்லீம் மக்களோடு சேர்ந்து வாழ்வதே சிறந்தது என நாம் கருதுகிறோம். இலங்கையில் யாப்பியல் ரீதியாக சிறுபான்மை மக்களுக்கான அரசியல் அதிகாரப் பகிர்வானது உறுதிப் படுத்தப்பட்டு ஓர் முழுமையான சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களின் (முஸ்லீம்கள் உட்பட) பாரம்பரியப் பிரதேசம் நிர்வகிக்கப் படவேண்டும். அதற்குள் தனித்துவமான அதிகாரங்களுடன் தமது இனத்துவ அடையாளத்துடன் எவ்வித அச்சமும் இன்றி முஸ்லீம் மக்கள் வாழுவதற்கான சட்ட ரீதியான உறுதிப் பாடுகள் வழங்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net



இலங்கையினுடைய அண்மைக்கால அரசியல் அனுபவத்தைக் கொண்டு பார்க்கையில் பெரும்பான்மை சிங்கள சமூகமும் அதை ஆளும் சிங்கள அரசியல் சக்திகளும் இன்னமும் சிறுபான்மை மக்களுக்கு சுய கௌரவத்துடன் வாழக்கூடிய அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. இக்கட்டத்தில் தமிழ் மொழியைப் பேசி பல நூற்றாண்டு காலம் ஒரே பிரதேசத்தில் வாழ்ந்து கலை, இலக்கிய, கலாச்சார ரீதியாக பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை பரஸ்பரம் செய்து வந்திருக்கும் தமிழர்களும் முஸ்லீம்களும் தனி தனியாக பிரிந்து சென்று வாழ்வது அரசியல் ரீதியாக ஆபத்தானதாகும். எனவே தான் அரசியல் தொலை நோக்குள்ள சிறுபான்மை தமிழர்கள் என்ற வகையில் இலங்கையில் 30%ற்கும் குறைவானவர்களாக வாழும் சிறுபான்மை மக்கள், அதிலும் வடக்கு கிழக்கில் வாழும் 20%ற்கும் குறைவான தமிழர்களும் முஸ்லீம்களும் தமக்குள் ஓர் அர்த்த புஷ்டியான புரிந்துணர்வுக்கும் அரசியல் இணக்கப் பாட்டிற்கும் வரவேண்டும்..



இக்கருத்தில் தமிழர்களின் ஒருவித சுயநலம் ஓரளவிற்கு இருந்தாலும் அல்லது இருப்பது போல் தோன்றினாலும்கூட, நீண்ட கால அடிப்படையில் முஸ்லீம்கள் உட்பட்ட தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பொது நலமும் உள்ளடக்கப் பட்டே இருக்கிறது. ஆனால் தமிழ் பேசும் சகல மக்களினதும் நீண்டகால அபிலாசைகளுக்கும், தமிழ் முஸ்லீம் மக்களின் நீண்ட நட்புக்கும், உறவுக்கும், இவ்விரு சமூகங்களின் ஜனநாயக வாழ்விற்கும், நாகரீகமான அரசியல் செயற்பாட்டிற்கும் பிரதான தடையாகவும் எதிரியாக இன்று பாசிசப் புலிகளே காணப்படுகின்றனர்.

எனவே முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கான சிறந்த தீர்வு என்பது சாதாரண தமிழ் மக்களோடு விரோதித்துக் கொண்டு தனியாக பிரிந்து சென்று வாழ்வது அல்ல. மாறாக தமிழ் பாசிசத்தை தோற்கடித்து தமிழ் சமூகத்தில் மீண்டும் ஓர் ஜனநாயக சூழ்நிலையை உருவாக்குவதோடு வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கான முழுமையான ஓர் சமஷ்டி ஆட்சிமுறைக்காக போராடத்தயாராகும் முற்போக்கான நவீன சிந்தனை கொண்ட ஜனநாயகத் தமிழ் சக்திகளோடு கைகோர்த்துக் கொள்வதேயாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதமும், தமிழ் பேரினவாதப் பாசிசமும் இன்று இலங்கையில் ஓர் முஸ்லீம் அடிப்படைவாத தீவிரவாதத்தை கட்டி வளர்க்கவே பெரும்பாடு படுகின்றன. முஸ்லீம் சமூகமானது எவ்வளவு விரைவில் மத அடிப்படைவாத தீவிர வாதத்திற்குள் இறங்குகிறதோ அதுவே சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கும் தமிழ் பேரினவாத பாசிசத்திற்கும் கிடைக்கபோகும் பெரு வெற்றியாகும். ஆகவே இவ்விரு மோசமான சக்திகளின் சதி வலைக்குள் விழுந்து விடாமல், பெரும்பான்மை சிங்கள சமூகத்திற்குள் இருக்கும் இனவாதமற்ற முற்போக்கு சக்திகளோடும் தமிழ் சமூகத்திற்குள் இருக்கும் ஜனநாயக, மற்றும் தமிழ் ஆதிக்க மனோபாவம் அற்ற, பாசிச எதிர்ப்பு சக்திகளோடு கைகோர்த்து உங்கள் கரங்களையும் எங்கள் கரங்களையும் பலப்படுத்துங்கள். இன்று தமிழ்ப் பாசிஸமானது தமிழ் தேசியம் பேசிக்கோண்டே தமிழ் சமூகத்தின் உண்மையான தேசியப் பலத்தை குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியம் பல துண்டுகளாக சிதறடிக்கப் பட்டுவிட்டது. அதை மீண்டும் கட்டியெழுப்ப தமிழ் சமூகமும் பாரிய விலை கொடுத்தாக வேண்டும். அதற்கு வேறு வழியில்லை.

## தமிழன் விட்ட வரலாற்றுத் தவறுகள்

தமிழ் சமூகம் தன் கடந்தகால அரசியல் பாதையில் பல பாரிய தவறுகளை இழைத்திருக்கிறது. ஆனால் தன் தவறுகளுக்காக மீண்டும் தட்டுத்தடுமாறி எழுந்து போராடும் தன்மையும் அதற்கு இருந்துள்ளது. இது நாகரீகமடை ந்த மனித சமூகத்தின் குணவியல்பாகும். நாம் வெள்ளையனை எதிர்துப் போராட வில்லை. வெள்ளையனுக்கு வால்பி டித்த தலைப்பாகைத் தலைவர்க ளைத்தான் நம்பினோம்.

தலைப்பாகைத் தமிழர்கள் முஸ் லிம்களுக்கு பாதகமாக செயற் பட்டு சிங்கள துரைமாரிடம் கைதட்டல் வாங்கியது 1915ம் ஆண்டுக் கதை. பின்னர் சிங்களத் துரைமார் எங்களுக்கு 'பெப்பே' காட்டியவுடன் எங்க ளுக்கு சற்று புத்தி வந்தது. பின்னர் நாம் தமிழ் துரைமாரை நம்பினோம். அவர்களும், மலையக மக்களின் கழுத்து அறுக்கப்படுகையில் தங்கள் கைகளையுயர்த்தி சிங்களத் துரைமாரிடம் பூமாலை வாங்கியது 1948ம் ஆண்டுக் கதை.

பின்னரும் கூட ஆங்கிலத்தைப் படித்துக் கொண்டே, ஆரியச் சிங்களவனிடம் தமிழுக்கு உரிமை கேட்டோம். அவன் முழங்கையையும் முஷ்டியையும் காட்டினான். எங்களுக்கு சற்று புத்தி வந்தது . பின்னர் றைய் கட்டின, வேட்டி கட்டின தலைவர்களை நம்பி வாக்குப்போட்டு இரத்தப் பொட்டும் வைத்து அனுப்பினோம். 30 வருடமாக பாராளுமன்றம் போய்வந்து ஒன்றும் கிழித்தார்கள் இல்லை. நாங்கள் அடிவாங்கி அகதியானதுதான் மிச்சம். மீண்டும் சாடையாகப் புத்தி வந்தது எங்களுக்கு.

நாங்களே நேரடியாக களத்தில் இறங்கினோம். எங்கள் பிள்ளை குட்டிகளையே போருக்கு அனுப்பினோம். அண்டை நாட்டானை நம்பினோம். அவனும் காலால் உதைத்து காறித் துப்பிவிட்டுப் போய்விட்டான். நாங்களே போராடுவோம் என்று எஞ்சியிருந் குழந்தைகளையும் பணத்தையும் எடுத்துச் சென்றது ஒரு கூட்டம். எல்லாரையும் எதிர்த்தோம் எல்லாரையும் கொன்றோம். இன்று சட்டியில் இருந்து அடுப்புக்குள் குதித்த கதையாய் ஆகிவிட்டது. சகல திருடர்களும், போக்கிரிகளும், கைதேர்ந்த கொலை காரர்களும் கைகோர்த்து நின்று விடுதலை வேண்டித் தருவதாக சொல்கிறார்கள். கொல்கிறார்கள்.

நாம் நம்பவில்லை. எமக்குப் புத்தி வந்தவிட்டது. அதுதான் சொல்கிறோம். நாம் விட்ட தவறை நீங்களும் விடாதீர்கள். நிதானமாக செயற்படுங்கள். உங்கள் சமூகத்தை நீங்களே அழித்துக் கொள்ளாதீர்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுக்கு வழி காட்டட்டும். இன்ஷா அல்லாஹ்!. *

www.tamilarangam.net

# கிழக்கைக் குதறும் வடக்கு

## கருணாவின் கிளர்ச்சியும், கிழக்கின் தனித்துவமும், நாமும்.



2004ம் ஆண்டு மார்ச் மாதம் எவரும் எதிர்பார்த்திராதபடி புலிப் பாசிச கட்டுமானத்தில் ஓர் பெரும் வெடிப்பு கருணா என்னும் கிழக்கு மாகாணத்தில் த.வி.பு. இயக்க த்துக்குப் பொறுப்பாக இருந்தவரால் மேற்கொள ளப்பட்ட திடீர் முடிவின் மூலம் நிகழ்த்தப்பட்டது. கருணாவோடு சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் கடந்த எட்டு ஆண்டுக ளுக்கும் மேலாக புலிப் பாசிச இயந்திரத்தை கட்டி வளர்த்து, அதை அம்மாகாணத்தில் நிறுவன மயப்படுத்தியது மட்டுமன்றி அங்கு ஏனைய சகல அரசியல் கருத்துக்கள் மற்றும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் எல்லாவற்றையும் துடைத்து அழித்து சுத்தப் படுத்தியதுடன் முஸ்லீம் மக்களையும் கத்தி முனையில் நிற்க வைத்திருந்த இவர்களுக்கு திடீர் என யாது நடந்தது? எப்படி ஞானம் பிறந்தது? உண்மையில் நடந்தது என்ன?

பல்வேறு விதமான ஆய்வுகள், வியாக்கியானங்கள், ஆருடங்கள், ஆதாரங்கள் இதுபற்றி பல திசைகளில் இருந்தும் பல்வேறு நோக்கங்களுடன், பல விதமான நப்பாசைகளுடன் முன்வைக்கப்பட்டன. இன்று அத்தனையும் அடங்கிப் போய்விட்டன. கிழக்குப் பற்றி வியாக்கியானங்கள் வைப்பதை பலரும் தவிர்த்துக் கொள்கின்றனர். தம் சுய திருப்திக்காக நெருப்பு டொட் கொம் (www.neruppu.com) இணையத்தளத்தை பார்ப்பதோடு திருப்திப் பட்டுக் கொள்கின்றனர். அதுவும் கருணா குழுவினருக்காக யாரோ வெளிநாட்டில் இருந்து செய்வதாக பலமான ஊகங்கள் உள்ளன. அதையும் இப்போது இடைஞ்சல் செய்து தடுத்துவிட மட்டக்களப்பு போடியார் சிவராம் தலைமையில் ஒரு கும்பல் தலையால் மண் கிண்டுகின்றது. நெருப்பின் சூடு அப்படிப்போலும்..!

சூட்டுக்கு சூடுதானே பதில் என்கிறது தமிழ் சமூகமும்.....!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருணாவையும், அவரின் கிளர்ச்சியையும், அவரின் கிளர்ச்சிக்கார படையையும், அவருக்கு பக்க பலமாக நிற்பதாக எல்லோரும் ஊகித்த மட்டக்களப்பு அல்லது கிழக்கு மக்களையும் அவர்களின் தனித்துவ சிந்தனையையும் நம்பி அவசரப்பட்டு வாயை விடப்போய் இன்று தம் தலைகளை எங்கே ஒளிப்பது என தெரியாமல் ஓடித் திரிபவர்கள் பலர். தமிழ் சமூகமும் அதற்குள் இயங்கும் அரசியல் சக்திகளும் மீண்டும் மீண்டும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் நம்பிக் கெடுகின்ற தவறை வரலாற்றில் விடுகின்றனர்.

கருணாவினால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சிக்கு அடிப்படை அவரின் தனிப்பட்ட பிரச்சினையோ அல்லது அவரும் அவர் சார்ந்த கிழக்கு மாகாண அங்கத்தவர்கள் பற்றிய பிரச்சினையோ அல்ல, மாறாக காலம் காலமாக அடங்கிக் கிடந்த கிழக்கு மாகாணத்தின் ஏக்கமும் ஒடுக்கப்பட்ட அவர்களின் தனித்துவ சிந்தனையுமே என்று பலமான தர்க்கம் ஒன்று முன் வைக்கப்பட்டது. பிரைச்சினை எதுவாக இருப்பினும் இப்பிரைச்சினை யானது புலிப் பாசிசத்திற்கு பாரிய அடி என்பதில் சந்தேக மில்லை. ஆனால் அக்கிளர்ச்சியை பலரும் வியாக்கியானப் படுத்தியது உண்மையிலேயே சரியான ஒரு சூழ்நிலை ஆய்வின் (Situational Analysis) அடிப்படையிலா அல்லது தத்தமது மன விருப்பின் அடிப்படையிலா அல்லது வெறும் தந்திரோபாய அடிப்படையில் புலிப் பாசிசத்திற்கு எதிரான சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்களா என்பதை இப்போதாவது நாம் எமக்குள் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் ஒருமுறை நாம் இலவு காத்த கிளிகளாவது நிட்சயம்.

**'வன்னிக் காட்டிற்குள் தன் சாம்ராட்சியத்தை அமைத்திருக்கும் யாழ். மையவாத புலிப் பாசிசம் தானாகவே அழிந்துபோகும். நிட்சயமாக அதற்குள் உள்முரண்பாடுகள் வெடிக்கும். தனிமனித தலைமைக்கு எதிராக கிளர்ச்சிகள் நடக்கும். என்கின்ற நம்பிக்கை இதற்கு முன்னர் எவருக்கும் இருந்ததில்லை. குறிப்பாக மாத்தையாவிற்கும் அவரது நெருங்கிய ஆதரவாளர்களுக்கும் அவ்வியக்கத்திற்குள் நேர்ந்த கதியின் பின்னர் அது சாத்தியமே இல்லை என்பது பரவலான கருத்தாக இருந்தது. ஆனால் கருணாவின் எழுச்சியோடு மீண்டும் நாங்களே ஓரளவு கற்பனா ரீதியில் எம் தர்க்கங்களை மாற்றிக் கொண்டோம்.**

"வன்னிக் காட்டிற்குள் தன் சாம்ராட்சியத்தை அமைத்திருக்கும் யாழ். மையவாத புலிப் பாசிசம் தானாகவே அழிந்துபோகும். நிட்சயமாக அதற்குள் உள்முரண்பாடுகள் வெடிக்கும். தனிமனித தலைமைக்கு எதிராக கிழர்ச்சிகள் நடக்கும்." என்கின்ற நம்பிக்கை இதற்கு முன்னர் எவருக்கும் இருந்ததில்லை. குறிப்பாக மாத்தையாவிற்கும் அவரது நெருங்கிய ஆதரவாளர்களுக்கும் அவ்வியக்கத்திற்குள் நேர்ந்த கதியின் பின்னர் அது சாத்தியமே இல்லை என்பது பரவலான கருத்தாக இருந்தது. ஆனால் கருணாவின் எழுச்சியோடு மீண்டும் நாங்களே ஓரளவு கற்பனாரீதியில் எம் தர்க்கங்களை மாற்றிக் கொண்டு இதோ புலிப் பாசிசம் உடைந்து நொருங்கி விட்டது இனி அது உயிர்பெற முடியாது என தர்க்கிக்க ஆரம்பித்து விட்டோம்.

புலிப் பாசிச தலைமையைப் பொறுத்தவரை அது இப்பிரச்சினையின் ஆரம்பம் முதலே இது கருணா என்னும் தனி மனிதனுடைய பிரச்சினை. அது அந்த மட்டத்திலேயே கையாளப்படும் என்று கூறியதுடன், இன்று அதை கருணாவின் தனிப்பட்ட பிரச்சினை என்னும் நிலமைக்கே கொண்டுவந்தும் இருக்கிறது. கருணா இலங்கையை விட்டு வெளியேறி தன் மனைவி பிள்ளைகளுடன் பாதுகாப்பாக இருப்பதாகவும் சண்டே டைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகையைப் படிப்பது போல் புகைப்படங்கள் வெளியிடப்பட்டதோடு, "நான் எப்போதும் ஒரு புலி, எனவே ஒரு போதும் புல்லைத் தின்னமாட்டேன்" என அவர் பேசும் வீர வசனங்கள் ஏசியன் றிபியூன் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதோடு நிலமை இன்று நிற்கிறது.

## திக்குத் திசை தெரியா நிலையில், கிழக்கு

இதே வேளை கருணாவை நம்பி ஓடிவந்து, போக போக்கிடம் இன்றி கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 300க்கு மேல் தாண்டிவிட்டது. இன்னும் சில நூற்றுக் கணக்கானோர் கிழக்கில் தொப்பிகலை, குடும்பிமலை காடுகளுக்குள் நின்று அடிக்கடி வெளியே வந்து வன்னிப் பாசிச புலிகளை அழிக்கும் கிழக்கின் புரட்சிகரப் புலிகளாக செயற்படுகிறார்கள். இதற்கிடையே எல்லோராலும் வியாக்கியானப் படுத்தப்பட்ட, திடீரென வீறு கொண்டு எழுச்சி கொண்ட கிழக்கின் தனித்துவ சிந்தனை எங்கே போனது என்பது இப்போது யாராலும் கேட்கப்படாத கேள்வியாக இருக்கிறது. கிழக்கு மாகாணம் தொடர்பாக தனித்துவ சிந்தனையை கொண்டவர்கள் கருணாவின் தத்துவ ஆலோசகர்களாக இருந்தவர்கள் என சந்தேகத்திற்கு உட்பட்ட பலர் வன்னியில் இருந்து அனுப்பப்பட்ட புலிப் பாசிஸ துப்பாக்கி நபர்களால் கொல்லப் பட்டுள்ளனர். அல்லது கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடப்பட்டுள்ளனர்.

மீண்டும் வழமைபோல் கிழக்கு மாகாணத்தில் ஒட்டு மொத்தமாக புலிப் பாசிசமும் அதில் இருந்து பிரிந்து சென்ற கருணா பிரிவும் பிரகடனப் படுத்தியிருக்கும் சுடுகாட்டு மௌனமே நிலவிக் கொண்டிருக்கிறது. இலங்கை இராணுவமோ வடக்குத் தமிழன் கிழக்குத் தமிழனை வேட்டையாடுவதை 'டிஸ்கவரி செனலில் காண்பிக்கப்படும் சிறுத்தை மானை வேட்டையாடும் காட்சிபோல்' பார்த்து இரசித்துக் கொண்டிருக்கின்றது. இதைத் தவிர கிழக்கில் தனித்துவ சிந்தனையோ யாழ். மையவாதத்திற்கு எதிரான முற்போக்குச் சிந்தனையோ புலிப் பாசிச அரசியலுக்கு எதிரான ஜனநாயக சிந்தனையோ வெடித்துக் கிளம்பத் தயாராக அச்சமூகத்திற்குள் கனன்று கொண்டிருக்கிறது என யாராவது கூறினால் அது மிகைப்படுத்தல் என்றே கூறவேண்டும்.

ஒரு சமூகத்தை மாற்றுவதற்கு அரசியல் செய்யப் புறப்படுபவர்கள் கற்பனையில் இருந்து அரசியல் செய்ய முடியாது. எவ்வித தயக்கமும் மயக்கங்களும் இன்றி உண்மை நிலையை அப்படியே ஏற்றுக் கொள்ள தயாராக வேண்டும். தமிழ் சமூகத்திற்குள் மாற்று அரசியலுக்கான இடைவெளிகள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அடைத்து மூடப்பட்டிருக்கிறது. மாற்று அரசியலைச் செய்பவர்கள் இலங்கை இராணுவத்தின் அல்லது இந்திய இராணுவத்தின் பாதுகாப்போடு தான் அதை செய்ய வேண்டும் என்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஏற்படுத்தப் பட்டுள்ளது. அவ்வாறு செயற்படுபவர்கள் துரோகிகள் என தமிழ் பாசிசத்தால் முத்திரை குத்தப்பட்டு தமிழ் ஊடகங்களால் அது பிரகடனப் படுத்தப்பட்டு பரவலான தமிழ் மக்களின் தலைகளுக்குள் ஆணி அடித்து தொங்க விடப்படுகிறது. இந்த நிலையில் அவ்வப்போது சடுதியாக நிகழ்கின்ற சம்பவங்களை சமூகத்தின் பெரும் புரட்சிக்கான, எழுச்சிக்கான அத்திவாரங்களாக நாங்கள் பார்த்துத் திருப்திப் படவேண்டியதாய் உள்ளது. இதிலிருந்து மீழுவதற்கான அரசியலை நாம் எப்படிச் செய்வது?

கருணா 5000 பேரோடு கிளர்ச்சியை செய்துள்ளார். கிழக்கு மாகாணம் முழுமையாக அவருக்கு பின்னால் நிற்கும். கிழக்கு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாகாணம் சிந்திக்க தொடங்கி விட்டது. யாழ்ப்பாண மையவாத தமிழ் பாசிசம் பெரும்சவாலை முன்நோக்கப் போகிறது என்னும் ஆரூடங்களை நாம் முன்வைத்தாலும் எமது உண்மையான எதிர்பார்ப்பாக இருந்தது, கருணா குழுவிற்கு கிழக்கு மாகாணம் நன்கு தெரியும், ஆகவே வன்னியில் இருந்து வருபவர்களால் அவர்களுடன் மோத முடியாது, இலங்கை அரசும் இராணுவமும் கருணா குழுவிற்கு தேவையான ஆதரவை பலமாக வழங்கும், இந்திய அரசு நிட்சயமாக கருணாவிற்கு சகல உதவிகளையும் செய்யும், ஆகவே கருணா நின்று பிடித்து அடிபடுவான். என்பவையே புலிப்பாசிசத்திற்கு எதிரானவர்கள் உண்மையாக நம்பிய அல்லது எதிர்பார்த்த நிலைமையாகும்.

அதை நாம் வெளியே சொல்லாமல் கிழக்கு எழுச்சி கொண்டு விட்டது, வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட கிழக்கு, இன்று போராட்டத்தில் தன் பங்கை அது கோரி நிற்பது சரி. என ஏதோ எல்லாம் கூறப்போய் இன்று செய்வதறியாது நிற்கின்றோம். அப்படித்தான் கிழக்கில் உள்ள மேல் தட்டுவர்க்க, பணம் படைத்த சமூகப் பிரிவினர் கருணாவின் பின்னால் உறுதியாக நின்றிருப்பார்கள் என ஒரு பேச்சிற்கு எடுத்துக் கொண்டாலும் அதே




பிரிவினர்தான் கிழக்கு மாகாணத்தில் ஒட்டு மொத்த புலிப் பாசிசத்தை கிழக்கு மாகாணத்தில் நிலை நிறுத்துவதற்கு கடந்த காலத்தில் முழு மூச்சாக செயல்பட்டவர்கள். கிழக்கில் முஸ்லீம் விரோதத்தை, அதிகமாக கொண்டுள்ளவர்களும் இப் பிரிவினரே.

இவர்கள், அதிகாரம் யாரின் கையில் இருக்கிறதோ அவர்களோடு சேர்ந்து சமூகத்தின் பெரும்பான்மையான மக்களை அடக்கி ஆள்பவர்களாகவே இருப்பர். இருந்துள்ளனர். இவர்கள் புலிக்குப் பயந்தவர்கள் அல்லர். மாறாக இவர்களே புலிகளின் சமூக அத்தி வாரம். கடந்த காலங்களில் புலிகளால் கிழக்கில் மேற்கொள் ளப்பட்ட அனைத்துக் கொடூரங்களின் போதும் ஆதரவளித்து அவற்றை நியாயப் படுத்தியவர்கள் அல்லது மௌனம் காத்தவர்கள். இப்பிரிவினர் தான் இன்றும் கருணாவைக் கை கழுவிட்டு மௌனம் காப்பவர்கள். நாளை கருணா குழுவினர் முற்றாகத் தோற்கடிக்கப் பட்டால், மீண்டும் வன்னிப் பாசிசத்தோடு கைகோர்த்தும் விடுவர்.

## பாசிசம் புனிதர்களைப் உருவாக்குமா ?

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் சாதாரண மக்களின் பிள்ளைகளை துரோகிகள் என ஆயிரக்கணக்கில் சுட்டுக் கொன்ற வர்களை, சாதாரண முஸ்லீம்களை கதறக் கதற சுட்டும் வெட்டியும் கொன்றவர்களை, பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக் ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்களின் பிள்ளைகளை பலவந்தமாக பிடித்து சென்றவர்களையும் கிழக்கு மாகாணத்தின் சாதாரண மக்கள் எப்படி நம்புவார்கள். நம்பி மீண்டும் கருணாவிடம் பிள்ளைகளை விட்டால் அப்பிள்ளைக-ளின் கதி என்ன? எனவே அம்மக்கள் எப்படி கருணா அணியைப் பார்ப்பார்கள், அல்லது எப்படி பார்க்க


கேநேசன்

வேண்டும். எப்படி அழுத்தம் இடவேண்டும் என சரியான ஆய்வுகள் எவராலும் முன்வைக்கப்பட்டதாக தெரியவில்லை. எந்த மக்களின் சிறார்களை அநியாயமாக கிழக்குப் பாசிச புலிகள் (பிளவிற்கு முன்னர்) பிடித்துக் கொண்டு போகும்போது நாம் கதறினோமோ, அதே சிறார்கள் கருணாவோடு நின்று வன்னியில் இருந்துவரும் பாசிச புலிகளோடு மோதவேண்டும் என எமக்குள் பிரார்த்தித்தோம். அல்லவா? இது எப்படிப்பட்ட அரசியல் நிலைப்பாடு?

ஆனால் கருணா தனது உண்மை நிலையை அறிந்தோ, அல்லது எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையிலோ, அல்லது தன்னால் கிழக்கு மக்களை சரியான ஒரு அரசியலுக்காக அணிதிரட்டும் தார்மீக பலம் தன்னிடம் இல்லை என்பதாலோ பின்வாங்கியதால் பாரிய இரத்தக்களரி நின்று, இன்று ஓரிரு நூறுகளின் உயிர் இழப்புகளோடு நிலைமை தப்பியுள்ளது என்றே சொல்ல வேண்டும். இது புலி எதிர்ப்பாளர்களுக்கு எரிச்சலைத் தந்திருக்கலாம். ஆனால் அது நடந்து முடிந்துவிட்ட உண்மைக் கதை. ஆனால் கருணாவை நம்பி எந்த அடிப்படையில் அரசியலில் யாராவது இறங்க முடியும்? கருணா எந்தவகையான அரசியலுக்குப் பழக்கப்பட்டவர்? எந்தவகை அரசியலில் அவருக்கு நம்பிக்கை அதிகம், என்பதை நாம் கேட்க வேண்டாமா? கிழக்கில் ஆயிரக்கணக்கான கொலைகளுக்கு நேரடி பொறுப்பேற்று அந்த படுகொலைகளின் இரத்தத்தில் ஸ்நானித்து கேணல் கருணாவான கிரான் வினாயகமூர்த்தி முரளீதரனை திடீரென புனித மகானாக்கி கிழக்கின் இரட்சகனாக்க முனைவது மட்டுமன்றி அவரை நம்புங்கள் என கிழக்கின் நைந்துபோன மக்களைப் பார்த்துக் கேட்கும் அரசியலை அந்த மக்கள் எப்படிப் பார்ப்பார்கள்?

மக்களை துப்பாக்கி முனையில் ஒடுக்கி எமது சகல நாகரீக செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தி வெறும் சடப்பொருட்களாக்கி வைத்துக்கொண்டு, தாமே எமக்கெல்லாம் ஏகப் பிரதிநிதி என ஊளையிடும் இரத்த வெறிகொண்ட ஓநாய்களின் பாசறையில் புடம்போட்டு வளர்க்கப்பட்டவர் கேணல் கருணா அம்மான். அவர் எப்படிப் புனிதராவார்? இந்தக் கேள்வி ஏன் கேட்கப்படவில்லை? தன் பதவிக்காகவே, தலைவர் 'எள்ளைக் கொண்டு வா' என்றால், அதை எண்ணையாக்கிக் கொண்டு போனவர் அல்லவா கருணா?

பிளவைத் தொடர்ந்து கருணா தலைவருக்கு நேரடியாக அனுப்பிய கடிதம் பலரக்கு நினைவிருக்கும். தான் நேரடியாக அவருக்குக் கீழ் இயங்கத் தயார் என்றும், இப்போதும் தலைவரை தாம் கடவுளாகத்தான் நினைப்பதாகவும் எழுதியிருந்தார். ஒரு வேளை அவ்வாறு கருணா புலிப்பாசிச தலைமையால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தால் நிலைமை என்னாகியிருக்கும்? அப்போது கருணா என்ன பேசியிருப்பார்? தொடர்ந்தும் கிழக்கின் தனித்துவம் பற்றிப் பேசியிருப்பாரா?


கசவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இது காஸ்ட்ரோவின் கதை



"... யாருக்காகப் போராடினேன்? ஏன் கொல்லப்பட்டேன்? தெரிந்தால் சொல்லுங்கள்"

எழுவான்கரைப் பகுதியான நொச்சிமுனைக் கிராமத்தில் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்தவனே காஸ்ட்ரோ என புலிகளால் பெயர் சூட்டப்பெற்ற கந்தையா ஆனந்தகுமார். தந்தை கிராமசேவகர். தாய் ஆசிரியை. படிப்பைக் கெடுத்துக் கொண்டு தனது 15வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான். பிறக்கும்போதே அவன் இதயம்பலவீனப் பட்டவனாக இருந்தான்.

தொழில்நுட்பம் சார் அறிவு நிறையவே அவனுக்கு இருந்தது. இதனால் கருணா, காஸ்ட்ரோவை தனது மெய்க் காவலர் அணியில் சேர்த்துக்கொண்டு, தொலைத் தொடர்பு சாதனங்கட்கு பொறுப்பாக நியமித்திருந்தார். 1989-90களில், புலிகளின் மட்டக்களப்புத் தலைமையுடன் நான் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த காலத்தில் புலிகளின் கஞ்சிக்குடிச்சாறு பகுதிக்கு கருணாவை சந்திக்க சென்றிருந்த வேளை, எனது உறவுக்காரன‐ான, காஸ்ட்ரோவை சுட்டிக்காட்டி மிகத் திறமையான தொழில்நுட்பப் புத்தியுடையவன் எனக் கருணா என்னிடம் கூறியிருந்தார். 15 வருடங்களுக்கு மேலாக புலிப் போராளியாக இருந்த காஸ்ட்ரோ கருணாவின் மெய்ப்பாதுகாவலனாக இருந்து, கருணா முன்னின்று நடத்திய பல படை நடவடிக்கைகளில் பங்குபற்றியவன். கருணா விவகாரம் வெடித்து, பின் கருணா தனது படைகளைக் கலைத்த பின்னர் இவன் வெளிநாடு செல்லும் நோக்கில் கொழும்பு சென்று தங்கியிருந்தான். இவனுக்கான தங்குமிட வசதிகளை கருணாவே செய்து தந்திருக்க வேண்டும்.

கொழும்பு சென்றது முதல் என்னுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருந்தான். அவன் அவுஸ்திரேலியா வந்துவிடவே விரும்பினான். இதனால் முதலில் மத்திய கிழக்கிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட்ட போதும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவுஸ்த்திரேலியா வருவது சாத்தியமில்லை எனக்கண்டவுடன், மத்திய கிழக்கிற்கு செல்லும் முயற்சியை மீண்டும் ஆரம்பித்து, கொலை செய்யப் படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் கூட துபாய்க்கு வேலைக்குச் செல்லவென நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும் சென்றிருந்தான். கொல்லப்படுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என்னுடன் கதைத்தபோது கருணா அம்மான் கட்சி ஆரம்பிக்கப் போவதாகவும், தன்னுடன் வந்து மீண்டும் சேரும்படி கருணாஅம்மான் தொலைபேசியில் கேட்டதாகவும், தான் வெளிநாடு செல்ல விரும்புவதாகக் கூறி கருணாஅம்மானின் அந்த அழைப்பைத் தான் ஏற்க மறுத்து விட்டதாகவும் காஸ்ட்ரோ என்னிடம் கூறியிருந்தான். காஸ்ட்ரோ கொழும்பு சென்ற பின்னர் மட்டக்களப்பு திரும்பவில்லை. தனது கல்வித்தராதர பத்திரங்களை தனது உறவினரை கொழும்புக்கு கொண்டுவந்து தருமாறு கேட்டுப் பெற்றிருந்தான்.

கருணாவின் மெய்க்காவலனாக கருணாவுடன் புலிகளின் ஐரோப்பிய நகர் பேச்சுகளில் கலந்துகொள்ளச் சென்றிருந்ததால், காஸ்ட்ரோவிடம் இலங்கை அரசின் சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுசீட்டு இருந்தது. காஸ்ட்ரோ இரு அணியினருக்கும் இடையிலான சகோதரப் படுகொலைகளில் கலந்து கொள்ளவில்லை. அத்தகைய விருப்பும் கொண்டிருக்கவில்லை. வன்னிப் புலிகளின் மட்டக்களப்புத் அரசியற் பிரிவுத் தலைவனாக இருந்த சேனாதி அண்மையில் சுடப்பட்டு, பின்னர் வைத்திய சாலையில் இறந்த காலகட்டத்தில் என்னுடன் தொலைபேசியில் கதைத்தபோது, அந்த இழப்பையிட்டு மனவருத்தப்பட்டே கதைத் திருந்தான். ஆனால் தன்னுடன் இருந்த ராஜன் என்பவன் வன்னிப் புலிகளின் கையாளாக மாறி தன்னைப்பற்றியும் தன்னுடன் இருந்த ஏனையோர் பற்றியும் வன்னிப் புலிகட்கு தகவல் கொடுத்து, தங்களை கொலை செய்ய சதிசெய்கிறான் என காஸ்ட்ரோ நினைத்திருக்கவில்லை. உண்ட உணவில் மயக்கமருந்து கொடுக்கப்பட்டு தூங்கிக் கொண்டிருந்த நிலையில் எந்த இயக்கத்திற்காக தனது வாழ்நாளில் அரைவாசி காலப்பகுதியை அர்பணித்தானோ அந்த இயக்கத்தினால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான். 30வயதில் அவன் உயிர் பிரிந்தது. 15 வருடங்கள் புலிகளுக்காகப் போராடியதில் காஸ்ட்ரோ எதனையும் பெற வில்லை. கடைசியில் துரோகி என்ற பட்டத்துடன் புலிகளால் நயவஞ்ச கமாகக் கொலை செய்யப்பட்டிருந்தான். தன் வாழ்நாளில் அரைவாசிப்பகு தியை தன் இன விடுதலைக்காய் அர்ப்பணம் செய்துபோராடிய காஸ்ட்ரோ வன்னிப் புலிகளால் நயவஞ்சகமாக கொல்லப்பட்ட ஒரு சுத்த வீரனே என்பதில் சந்தேகம் இல்லை.

**நன்றி: உதயம், அவுஸ்திரேலியா ஆகஸ்ட் இதழ்.**
**கட்டுரை. மட்டக்களப்பின் இருண்ட எதிர்காலம்**
**-எழுவான்கரையான்-**

எப்படியாவது தலைவரிடம் மன்றாடி கருணாவை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காவே மட்டக்களப்பு மேல்த்தட்டு வர்க்கம் மட்டக்களப்பு ஆண்டகை கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் வரிந்து கட்டி க்கொண்டு வன்னிக் காட்டுக்கு ஓடியது. ஆனால் வன்னித் தலை மையோ மட்டக்களப்பு உயர் வர்க்கத்தை நோக்கி ‘அஞ்ச வேண்டாம் நாம் உங்களுக்கு எதிராக ஏதும் செய்ய மாட்டோம்’ என உறுதி கூறியவுடன், அது திருப்தியுடன் வாலைச் சுருட்டிக் கொண்டு வந்து விட்டது. இன்று கிழக்கில் நடக்கும் சாதாரன வறிய குடும்பத்து பிள்ளைகளின் கொலைகள் தொடர்பாக இவர்கள் ஏன் மௌனம் சாதிக்கி றார்கள்? ஆகவே தமிழ் சமுகத்தின் விடிவிற்காகப் போராடப் புறப்படுபவர்கள் நிலைமைகளை தமது மன விருப்பகளுக்கு ஏற்ப வியாக் கியானப் படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

## இலங்கை, இந்திய அரசுகள் எடுத்த நிலைப்பாடுகள்

நாம் நினைத்தபடி இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுகள் கருணாவின் கிளர்ச்சியை சரியாக பயன்படுத்தவில்லை என எம் எல்லோருக்கும் ஒரு ஏக்கம் உண்டு. அவ்வரசுகள் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? எதற்காக கருணாவை பாதுகாத்து ஒரு குட்டிப் புலியை உயிர் வாழவைக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கான அரசியல் தேவைகள் ஏதாவது இவ்வரசுகளுக்கு இருக்கின்றதா? என்ற கேள்வியை நாம் கேட்டுக் கொள்ளத் தவறிவி ட்டோம். இவ்விரு அரசுகளைப் பொறுத்தவரை யிலும் இலங்கையில் தமிழ் புலி பாசிசத்தை முற்றாக அழிப்பது என்பது அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இல்லாத ஒன்று. அவர்களின் முயற்சியெல்லாம் அதை சற்று பலவீனப் படுத்தி தமக்கு இசைவாக செயற்படும் சக்தியாக மாற்றுவதே. அந்த வகையில் கருணாவின் கிளர்ச்சியானது தமிழ் பாசிச புலிகளை ஓர் அளவு பலவீனப் படுத்தியிருக்கிறது. எனவே தற்போதைக்கு உடனடியாக புலிகள் யுத்தத்தில் இறங்க மாட் டார்கள். இறங்கினால் கிழக்கு அவர்களின் கையைவிட்டு முழுமையாகப் போய்விடும். எனவே தற்போதைக்கு புலிகள் பல்லுக் கழட்டியவர்களாக இருக்கிறார்கள். தமது ஆட்சி அதிகாரங் களுக்கு உடனடியாக பாரிய இடைஞ்சலாக இருக்க மாட்டார்கள் அதுவே இவ்வரசுகளுக்குப் போதுமானது. இதற்கு மேல் நாங்கள் பேசுகின்ற பல கட்சி அரசியல், ஜனநாயகம் மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம் என்பவை பற்றியெல்லாம் இவ் அரசுகள் ஏன் கவலைப் படவேண்டும்? அதற்கான தேவை என்ன இருக்கிறது? இதை நாம் ஏன் சிந்திக்க மறந்தோம்?

அது மட்டுமன்றி கடந்த காலத்தில் புலிப்பா சிசத்துக்கு எதிராக நின்ற ஏனைய தமிழ் சக்திகள் எல்லாம் இப்போது போய் மீண்டும் அவர்களோடு கூடிக்குலாவுவது போல் நடக்கும் என எவராவது கனவிலும் நினைத்துப் பார்த்தோமா? இல்லையே. நாளைக்கு நிலைமை தலை கீழாக மாறி இந்தக் கருணாவும் இவரது படையணியும் மீண்டும் போய் பிரபாகரனோடு விழுந்து படுத்தால் நிலைமை என்னாகும். பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய

**கருணா எந்தவகையான அரசியலுக்குப் பழக்கப்பட்டவர்?**



**எவ்வகை அரசியலில் அவருக்கு நம்பிக்கை அதிகம், என்பதை நாம் கேட்க வேண்டாமா? கிழக்கில் ஆயிரக்கணக்கான கொலைகளுக்கு நேரடியாக பொறுப்பேற்று அந்த படுகொலைகளின் இரத்தத்தில் ஸ்நானித்து கேணல் கருணாவான கிரான் முரளீதரனை திடீரென புனித மகானாக்கி கிழக்கின் இரட்சகனாக்க முனைவது மட்டுமன்றி அவரை நம்புங்கள் என கிழக்கின் நைந்துபோன மக்களைப் பார்த்துக் கேட்கும் அரசியலை அந்த மக்கள் எப்படிப் பார்ப்பார்கள்?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லாம் நடக்காது என சொல்லுமளவிற்கு இவர்களெல்லாம் என்ன நியாயமானர்களா? இந்த உலுத்தல்களை எல்லாம் நம்பியா இந்தியாவையும் இலங்கையையும் உதவச் சொல்லுகிறோம்? தமிழ் சமூகத்தின் அரசியல் செயல் தளத்தில் எவருமே நம்பத் தகாதவர்கள் என்பதே இன்று எங்கும் நிலவும் நிலைமை. அவ்வப்போது நாம் எல்லோருமே பாவிக்கப் படுவோம் அவ்வளவுதான். அதைத்தான் இப்போது இவ்வரசுகள் செய்கின்றன. இதையும் மீறிய கொள்கைப்பற்றுடன் கூடிய அரசியல் நடத்தப் படுவதற்கான காலமும், அதைச் செயற்படுத்துவதற்காக எமது சமூகமும் முற்றிக் கனிந்து விட்டனவா என்னும் கேள்வியை அரசியல் செயல்வீரர்கள் உடன் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

தென்னிலங்கையில் சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகள் இலங்கை அரசிற்கு எதிராக கடும் விமர்சனங்களை முன்வைக்கின்றன. நாம் கூறுவதைப் போலவே, அரசு கருணா விடயத்தை சரியாக கையாண்டு வன்னிப் புலிகளுக்கு மரண அடி கொடுத்திருக்க வேண்டும். அதை அரசு செய்யவில்லை என்பதே இவர்களின் குற்றச்சாட்டு. இது பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியிலே பரவலாகப வரவேற்கத்தக்க கருத்தாகவும் இருக்கிறது. இதன் உள் நோக்கம் என்ன? இலங்கை அரசு கிழக்குப் புலிகளைக் கொண்டு வடக்குப் புலிகளை அடித்து நொருக்கி விட்டால் தமிழ் சமூகத்தில் பிரிவினைக்கான கோஷமோ, சம அந்தஸ்த்துக்கான கோஷமோ, தாயகப் பிரதேசம், சமஸ்டி அரசியல், அதிகாரப் பகிர்வு போன்ற கோஷங்களுக்கு இனி இடமில்லை. எனவே இச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் நழுவ விட்டது பாரிய அரசியல் சொதப்பலாகும். *(blunder)* என்கிறன இச்சக்திகள். இது பற்றிய எமது நிலைப்பாடுகள் என்ன? இதுபற்றி சாதாரண தமிழ் மக்கள் எப்படி சிந்திப்பர்?

## மாற்று அரசியலுக்கான கனவு

புலிப் பாசிசத்துக்கு எதிராக அரசியல் செய்பவர்கள் தென்னிலங்கை அரசியல் சக்திகளோடும் அவற்றின் கருத்துக்களோடும் சமரசம் செய்து கொள்வாதற்கான எல்லைக்கோடு ஒன்றை வரைய வேண்டும். அல்லவா? பாசிசப் புலிகளை எதிர்க்கிறார்கள் என்பதற்காக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரைச்சினையை எப்படிக் கைகழுவுவது? எனவே புலிப்பாசிசத்தை அழிக்கும் போது அதன்பின்னும் சாதாரன தமிழ் பேசும் மக்களின் பிரைச்சினைக்கான போராட்டம் தொடரப்படும் அல்லது வெற்றிகரமாக கையாளப்படும் என்னும் நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்துவது எப்படி? மாற்றுச் சக்திகள் இதை உடன் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இன்று புலிப் பாசிசத்திற்கு எதிராக சில அரசியல் கட்சிகளை தனி நபர்களுடன் கூடிய குழுக்களை மாற்றுக்களாக நாம் காண்கிறோம் அவற்றையே மக்கள் முன் காண்பிக்கவும் முயல்கிறோம். ஆனால் அவை உண்மையில் தமிழ் பேசும் மக்களுக்கான மாற்றுக்கள் தானா? மக்களுக்கும் அதில் நம்பிக்கை இருக்கிறதா? அடிக்கடி தேர்தல்கள் வரும்போது இம் மாற்றுகளுக்கு ஆதரவாக பேசுவதும், அவர்களுக்கு மக்கள் தம் வாக்குகளைக் கொடுத்து புலிப் பாசிசத்திற்கு எதிரான தம் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்கின்ற விதத்திலும் நாம் செயல்படுகின்றோம். ஆனால் இம்மாற்றுக்களோடு இணைந்து செயற்பட்டு எமது அரசியல் கற்பை (அப்படி ஒன்று இருந்தால்) இழந்துவிடவும் நாம் தயாரில்லை.

புலிப் பாசிசத்திற்கு எதிரான மாற்றுக்களாக நாம் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டீ.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். றொபேட் அணி மற்றும் அண்மையில் இருந்து ஆனந்த சங்கரியும் அவரோடு நிற்பவர்களும் (இவருக்கு பின்னால் இந்தியா இருக்கிறது என்ற நம்பிக்கை), சித்தார்த்தனின் புளொட், அதன் பின்னர் கருணா. ஆனால் இவ் எந்த அணியோடும் எமக்கு பூரண உடன்பாடு உண்டா? அதேவேளை இப்பிரிவினரும் தமக்குள் ஓர் ஐக்கிய முன்னணியை அமைத்து புலிப் பாசிசத்திற்கு எதிராக ஓர் பலமான அணியாக உருப்பெறுவதற்கான தீவிர முயற்சி இல்லை. இன்றைய மிக நெருக்கடியான காலகட்டத்திலும் கூட இவர்கள் அவ்வாறு வரத் தயாராக இல்லை. இவ்வணியினருக்குள்ளும் முழுத் துரோகி, அரைத் துரோகி, கால் துரோகி என புலிகள் வழங்கிய பட்டங்கள் இருப்பதால் நாமும் இவர்களுடன் இணைந்து துரோகி சாயத்தைப் பூசிக்கொள்ள விரும்பவில்லை. அல்லது இவர்களிடம் தெளிவான அரசியல் பார்வை இல்லை, செயற்பாட்டு திட்டங்கள் இல்லை எனவே இவர்களோடு சேர்ந்து எமது சக்தியையும் காலத்தையும் வீணடிக்க விரும்பவில்லை. ஆனால் மக்களுக்கு மட்டும் நாங்கள் இவர்களை அடிக்கடி மாற்றாக காண்பிக்க விளைகின்றோம். இது ஏன்? இதற்கு விரைவில் விடைகாண வேண்டாமா? கிழக்கு மட்டுமல்ல வடக்கும் இருண்ட பாதாளத்தை நோக்கித்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது.

★

### வெருகல் ஆறு

பேரிகை ஆற்றின் கதறல்  
கதிரவெளி ஒரு குருஷேத்திரமாக  
மகாவலி உறைந்துபோனதொரு கணத்தில்  
கிழக்கு சூரியனும் உதிக்கமறுத்தான்  
வெலிக்கடையையும் வென்றுவிட்ட இறுமாப்பு  
வடக்கேயிருந்து வந்த வன்னி சூறாவளிக்கு  
அன்றுதான் 1972 ஆண்டுகள் கழித்து  
இரண்டாவது பெரிய வெள்ளியை  
எழுதிச்சென்றது இலங்கைத்தீவின் வரலாறு  
வடக்கு வாரியடித்த புழுதியில்  
வாகரைக்காடுகள் அதிர்ந்தது மட்டுமல்ல  
கிழக்கு மண்ணும் சிவப்பாயானது  
வெருகலாற்று படுக்கை வெந்தணலானபோதும்  
வங்கக்கடல் வற்றிவிட போவதில்லையே  
அதை நாம் அறிவோம் என்றும்  
காற்று திருப்பியடிக்கும் காலம் வருமென்றும்  
கணக்கு தீர்த்துக்கொள்ள காத்திருப்போமென்றும்  
காதுகளுள் சொல்லிப்பறந்தது- கதிரவெளி  
கடலலைக்களுக்கு ஓர் ஆட்காட்டி குருவி

09.04.2004 அன்று யாம் புலிகளின் கிழக்கு மீதான ஆக்கிரமிப்பு படுகொலையில் கொல்லப்பட்ட 175 இளம் உயிர்களின் நூறாவது நாள் நினைவாக

-மீன்பாடும் தேனாடான்-

நன்றிகள் பல: *thenee.com*



கருணாவிற்கு பாரிய அரசியல் பொறுப்பு இருக்கிறது என்பதை இக்கவிதை அவருக்கு சுட்டிக்காட்டுகிறது. கருணா தன் கடந்தகால அரசியலை ஒருமுறை மீள அசை போட்டுக் கொள்ள வேண்டும். பாசிசம் பலமிழக்கும் போது வரலாறு அவர்களுக்கு கை கொடுக்காது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாசிசத்துக்கு எதிரான மக்கள் எழுச்சிகளும் மக்களுக்கான தாபனங்களும்

யாழ். குருநகரில் புலிப் பாசிஸ்டுக்களின் அட்டகாசம்



கடந்த ஆகஸ்ட் 30ம் திகதி யாழ்ப்பாணம் குருநகரில் இரு மீனவர்கள் மீது புலிப் பாசிஸ்டுக்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் மீன்பிடி ட்ரோலர்கள் தீவைத்து கொழுத்தப்பட்ட சம்பவத்தையும் தொடர்ந்து அங்கு மீனவர்களுக்கு இடையேயும் புலிகளுக்கு இடையேயும் கடுமையான முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மீனவர்கள் குருநகர் பகுதியில் இருந்த பாசிஸ்டுக்களின் அரசியல் காரியாலயத்தை உடைத்து நொருக்கி அதன் பெயர்ப் பலகையையும் தூக்கி எறிந்ததோடு அவ்வியக்கத்தின் யாழ் மாவட்டப் பிரதிநிதி இளம்பரிதியுடன் கடும் வாய்த் தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

தங்களது காடைத்தனமான செய்கைக்கு நியாயம் கற்பிக்கவந்த இளம்பரிதியை மக்கள் திட்டித் தீர்த்து அவரைப் பேசவிடாது அங்கிருந்து கலைத்துவிட்டனர். அது மட்டுமன்றி அவ்வியக்கத்தின் அரசியல் பிரிவின் பொறுப்பாளராக இருப்பதாக சொல்லப்படும் 'இளித்தவாய்' தமிழ்ச்செல்வனை யாழ்ப்பாணத்திற்கு வந்து தம்மோடு பேசும்படி அவர்கள் வற்புறுத்தியதுடன், மீனவர்களின் அன்றாட வாழ்க்கைப் பிரைச்சினையில் தேவையற்ற விதத்தில் இனிமேல் அவ்வியக்கம் தலையீடு செய்யக் கூடாது என்றும் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இதேவேளை பிரச்சினையை சுமூகமாக தீர்த்து வைக்க சென்ற கத்தோலிக்க குருக்கள் அதை சுமுகமாக பூசிமெழுகி தீர்த்துவைக்க முயற்சித்துள்ளார்கள். ஆனால் மீனவர்கள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்றுள்ளனர்.

புலிகளின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக மீனவர்கள் மட்டுமன்றி தமிழ்ப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்வது அல்லது அடிதடியில் இறங்குவது என்பது இதுதான் முதல் தடவையல்ல. 1986ம் ஆண்டு புலிகள் ரெலோ இயக்கத்தை சுட்டு ஒழித்த வேளையில் நாவாந்துறைக்குள் ஓடி ஒழித்த ஓரிரு ரெலோ இயக்க அங்கத்தவர்களை பாதுகாக்கும் பொருட்டு அவர்களை கைது செய்யவந்த புலிகள் இயக்கத்தின் கொலையாளிகள் நாவாந்துறை மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். அங்கு மக்களுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் புலிக் கொலையாளிகள் அங்கிருந்து தப்பி ஓட நாவாந்துறை மக்கள் ஆத்திரத்தால் அவர்கள் வந்த வாகனத்தை தலைகீழாக கவிழ்த்து தீயிட்டுக் கொழுத்தினர் உண்மையிலேயே அச்சம்பவம் மிகவும் துணிகரமானது என்று அப்போது பலராலும் போற்றப்பட்டது.

ஆனால் அவர்களால் கொழுத்தப்பட்ட வாகனம் அப்போது யாழ்ப்பாண வி.பு. இயக்க பாசிசத் தளபதி கிட்டுவினுடையது என்றும், எனவே நிட்சயமாக அம்மக்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் சகல மட்டத்திலும் பேசப்பட்டது. சம்பவம் நடந்த ஓர் இரு நாட்களின் பின்னர் அச்சம்பவத்தில் ஈடுபட்ட நாவாந்துறையைச் சேர்ந்த 9 பேர் இரவு நேரத்தில் மிகவும் இரகசியமாக பாசிசப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் மோசமாக தாக்கப்பட்டு கடுமையான எச்சரிக்கைக்குப் பின் விடுவிக்கப்பட்டனர். அப்போராட்டம் அத்தோடு அடங்கிப் போனது. அப்போது பல்வேறு இயக்கங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் எவரும் பெரிதாக அவ்வூர் மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாதிருந்தனர்.

1986ம் ஆண்டு பாசையூரைச் சேர்ந்த எட்வேட் என்பவர் பாசிஸ்டுக்களின் அரியாலைப் பொறுப்பாளராக இருந்த மலரவன் என்பவனால் (இவன் சொந்தப் பெயர், தியாகராஜா வரதராஜன்) கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஆணி அடித்து மூடப்பட்ட சவப் பெட்டிக்குள்

www.tamilarangam.net



மின்சார அழுத்தியினால் (Electric Iron) சுடப்பட்டு, ஆண்குறி எரிக்கப்பட்டு, உடலின் பல இடங்களில் எலும்புகள் முறிக்கப்பட்ட நிலையிலேயே எட்வேட் என்ற அந்த நடுத்தர வயது பாசையூர் பொதுமகன் கொல்லப்பட்டிருந்தான். மலரவனின் கட்டளையை மீறி மூடப்பட்டிருந்த சவப்பெட்டியை உடைத்துப் பார்த்தே பாசையூர்மக்கள் எட்வேடுக்கு நேர்ந்த கதியை கண்ணுற்றனர். ஆத்திரமுற்ற மக்கள் பாசையூரில் இருந்த புலிப் பாசிஸ்டுக்களின் காரியாலயத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களை துரத்தியதோடு அக்காரியாலயத்தையும் உடைத்து நொருக்கினர். அவர்களுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். அப்போதும் யாழ்ப்பாணத்தில் பல இயக்கங்கள் இருந்தன. எவராலும் அந்த மக்களின் போராட்டத்தை புலிப் பாசிஸ்டுகளுக்கு எதிரான ஒன்றாக தீவிரமாக எடுத்து செல்ல முடியவில்லை.

மேலே சொன்னவை இரு உதாரணங்கள் மட்டுமாயினும் 84ம் ஆண்டுக்கும் 87ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புலிப் பாசிஸ்டுகளுக்கு எதிராக மட்டுமன்றி ஆயுதமேந்திய பெரும்பாலான இயக்கங்களுக்கு எதிராகவும் ஆங்காங்கே மக்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தே வந்துள்ளனர். ஆனால் இவை எல்லாமே வெறும் சம்பவக் கோர்வைகளாக மட்டுமே இன்று நினைவில் நிற்கின்றன. இவற்றை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்று மக்களை அணிதிரட்டவோ ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக அவர்களை தாபன மயப்படுத்தவோ எவராலும் முடியவில்லை. அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் பிரதான காரணங்களாக இவற்றைக் கூறலாம்.

**முதலாவது,** பிரதான எதிரியான சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டு இருக்கையில் ஆயுதமேந்திய விடுதலை இயக்கங்களுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற முரண்பாடுகளை தமிழ் சமூகத்தின் உள் ஜனநாயகத்திற்கான பகுதிப் போராட்டங்களாக எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றிய தெளிவின்மை. அல்லது அவ்வாறு அவை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் விடயமே சிந்திக்கப் படாமல் இருந்தமை.

**இரண்டாவது,** இயக்கங்களுக்கு எதிரான மக்களின் எழுச்சிகள் அல்லது போராட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டால் அது இன்னொரு கட்டத்தில் தமக்கு எதிராகவும் அம்மக்கள் எழுச்சியடைய வழிவகுக்கும். எனவே இவற்றை ஆதரிக்ககூடாது. என்கின்ற சிந்தனைப் போக்கு அதாவது **'இயக்கம் என்றால் மக்களுக்கு ஒருவித பயமிருக்கவேண்டும் இல்லாவிட்டால் இந்த மக்களோடு சமாளிக்க முடியாது'** என்கின்ற சிந்தனைப் போக்கு.

**மூன்றாவது,** ஒரு இயக்கத்திற்கு எதிராக மக்கள் எழுச்சிகளில் ஈடுபடும் போது அதற்கு நாம் ஆதரவு வழங்கச் சென்றால் அந்த இயக்கத்திற்கும் தமக்கும் வீணான மோதல்கள், பிரச்சினைகள் ஏற்பட்டு தாங்கள் அதனுடன் மோதவேண்டி வரலாம். அப்படி மோதல் நிலை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்க எமக்கு போதிய பலம் இல்லை, என்கின்ற அச்சம் அல்லது தமது இயக்க நலன்.

**நான்காவது,** தமிழ் மக்களுக்கான போராட்டம் ஆயுதமேந்திய இயக்கங்களால் எடுக்கப்பட வேண்டியவை, எனவே மக்களின் உதிரியான போராட்டங்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. என்கின்ற சிந்தனைப் போக்கு காரணமாக மக்களின் இயல்பான எழுச்சிகள் ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றுக்கு ஆதரவு வழங்காது அக்கறைப்படாது இருத்தல்.

மேற்கூறப்பட்ட காரணங்கள் , அல்லது பிற காரணங்களுக்காக மக்களின் இந்த எதேச்சையான எழுச்சிகள் பெரிதாக ஏனைய இயக்கங்களின் ஆதரவுகளைப் பெறவில்லை.

ஆனால் இந்த நிலைமைகளையும் மீறி சில எழுச்சிகளுக்கு பரவலான மக்கள் ஆதரவு இருந்ததோடு ஏனைய பல இயக்கங்களின் ஆதரவும் இருந்தது. பிரதான உதாரணங்களாக, ரெலோ இயக்கத்தின் பிரதான பொறுப்பிலிருந்த தாஸ் உட்பட காளி, பீற்றர் ஆகியோர் ரெலோ இயக்கத்தின் தலைமையினாலேயே சுட்டுக் கொல்லப்பட்ட பொழுதும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நெல்லியடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது அவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது மீண்டும் ரெலோ இயக்கம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று சிறார்கள் கொல்லப்பட்டும் பலர் காயத்திற்கும் உள்ளாகினர்.

இதற்கெதிராக மக்கள் ஆத்திரமுற்று ரெலோ இயக்கத்திற்கு எதிராக கிளர்சியில் ஈடுபட்டபோது பல இயக்கங்களும் அதற்கு ஆதரவு வழங்கின. ரெலோ இயக்கம் குறிப்பாக யாழ்ப்பாண மக்களிடையே தனக்கு இருந்த செல்வாக்கை இழப்பதற்கு குறிப்பாக இது காரணமாக இருந்தது. பின்னர் புலிப்



கழுத்தறுப்புக்கு முன்னைய கைகோர்ப்பு

**1986 நடுப்பகுதிக்கும் இறுதிக் காலகட் டத்திற்கும் இடைப்பட்ட 6 மாத காலத்தில் ஏனைய சகல இயக்கங்களும் துரோகிப் பட்ட ங்கள் சூட்டப்பட்டு தமிழ் பாசிஸ்டுக்களால் அழித்து ஒழிக்கப் பட்டபின் மக்கள் எழுச்சிக ளுக்கு எனைய இயக்கங்கள் ஆதரவு வழங்கும் நிலை என்பது முற்றாகவே இல்லாது ஒழிக்கப்ப ட்டதோடு, மக்களும் கூட தம் எழுச்சிகளில் ஏனைய இயக்க ங்களின் அல்லது இயக்க நபர்களின் ஆதரவைப் பெறுவதை தவிர்த்துக் கொண்டனர்.**

பாசிஸ்டுக்களால் அவ்வியக்கம் அழிக்கப்படுகின்ற பொழுது பெருமளவில் மக்கள் அதற்கு ஆதரவு வழங்கினர். சிற்சில இடங்களில் ரெலோ இயக்கத்தின் ஒருசில அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட நட்பின் பேரில் அங்கங்கே மக்கள் பாதுகாப்பு வழங்கினார்களே ஒழிய பரவலாக மக்களிடம் அவர்களுக்கு ஆதரவு இருக்கவில்லை.

அடுத்த ஒரு குறிப்பிட்ட சம்பவமாக யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் புலிப் பாசிஸ்டுக்களால் கடத்தப்பட்ட சம்பவத்திற்கு எதிராக பல்கலைக்களக மாணவர்கள் ஆரம்பித்த எதிர்ப்பு போராட்டம் பரவலான மக்கள் ஆதரவுடன் நடைபெற்றது. பல்கலைக்கழக மாணவர்களில் இருந்து இப்போராட்டம் பாடசாலை மட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, பெற்றோர்கள், ஆசிரியர்கள், வெகுஜன அமைப்புக்கள் என பலரினதும் ஆதரவைப் பெற்றது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் விஜிதரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலை செய்யப்படும் வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தது பலரின் கவனத்தை ஈர்த்ததுடன் அனுதாப அலையையும் ஏற்படுத்தியது. இப்போராட்டத்திற்கு இருந்த மக்கள் ஆதரவைக் கண்டும் பல்கலைக்கழக மாணவன் ஒருவனை கடத்திக் கொண்டுசெல்வது தவறு என்று கூறியும் பல்வேறு இயக்கங்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கின.

இவை இரண்டையும் தவிர குறிப்பான மக்கள் எழுச்சிகளுக்கு ஆதரவாக ஏனைய இயக்கங்களின் ஆதரவு பொது மக்களுக்கு பெரிதாக இருந்ததாக கூறமுடியாது. 1986 நடுப்பகுதியிலிருந்து இறுதிக் காலகட்டத்திற்கு இடைப்பட்ட 6 மாத காலத்தில் ஏனைய சகல இயக்கங்களும் துரோகிப் பட்டங்கள் சூட்டப்பட்டு தமிழ் பாசிஸ்டுக்களால் அழித்து ஒழிக்கப்பட்ட பின் மக்கள் எழுச்சிகளுக்கு ஏனைய இயக்கங்கள் ஆதரவு வழங்கும் நிலை என்பது முற்றாகவே இல்லாது ஒழிக்கப்பட்டதோடு, மக்களும் கூட தமது எழுச்சிகளில் ஏனைய இயக்கங்களின் அல்லது இயக்க நபர்களின் ஆதரவைப் பெறுவதை தவிர்த்துக் கொண்டனர்.




90ம் ஆண்டு மீண்டும் யாழ். குடாநாடும் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் கணிசமான பகுதியும் புலிப் பசிஸ்டுக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் உடன-டியாக இல்லாவிட்டாலும் படிப்படியாக ஆங்காங்கே அவர்களுக்கு எதிராக மக்கள் பல கிளர்ச்சிகளைச் செய்துள்ளனர். ஆனால் அவை எந்தவித அரசியல் பின்னணிகளும் இல்லாத, மக்கள் தமது சொந்த வாழ்க்கைக்கு புலிப் பாசிஸ்ட்டுக்களால் ஏற்படுத் தப்பட்ட இடைஞ்சல்களுக்கு எதிராக நடத்தப் பட்டவையாகும். ஆனால் அவ்வெழுச்சிகள் யாவுமே தமிழ் பாசிஸ்டுகளின் உளவுப் பிரிவு நபர்களால் அம்மக்களுக்கு அச்சுறுத்தல் விடப்பட்டதன் மூலம் நசுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அவ்வாறான எழுச்சிகள் நடந்தன என்றோ அவை எவ்வாறு நசுக்கப்பட்டன என்றோ எந்தத் தமிழ் ஊடகங்களிலும் வெளியுலகிற்கு எடுத்துச் சொல்ல ப்படவில்லை. பாசிஸ்டுகளுக்கு எதிரான தமிழ்க் கட்சிகள் வெளியிட்ட பத்திரிகைகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகள் மூலம் மட்டுமே அவை ஓரளவிற்கு வெளிக்கொணரப்பட்டன.

**தமிழ் பாசிசத்துக்கு எதிரான மக்களின் எழுச்சிகள், தமிழ் சமூகத்தில் பொதுவாக ஜனநாயம் மற்றும் மனித உரிமை மீறல் போன்ற வற்றுக்கு எதிரான போராட்டங்களில் கடந்த காலங்களில் ஈடுபட்டவர்கள் இறுதியில் தாம் தனிமைப்பட்டுப் போயுள்ளதாக உணர்ந்த சந்தர்ப்பங்கள் பல. இதுவே புலிப் பாசிசத்திற்கு கிடைக்கும் பெரு வெற்றியாகும். மண்ணில் நடக்கும் ஒவ்வொரு எழுச்சியின் தாக்கமும் பிரதி-பலிப்பும் வெளி நாடெங்கும் பரவும் என்னும் உணர்வும் நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்படும் வகையில் இவ்வலைக் கோர்ப்பு செயற்பாடு (Networking) நடத்தப்பட வேண்டும்.**

இதில் இரண்டு விடயங்களைக் கவனத்தில் நாம் எடுக்க வேண்டியுள்ளது. ஒன்று எவ்வளவுதான் மக்களை அச்சு றுத்தல்களின் கீழ் வைத்திருந்தாலும் தாங்க முடியாத கட்டத்தில் மக்கள் எழுச்சி கொண்டுள்ளனர் என்பது. மற்றது, அவர்களுக்குப் பின்னால் நின்று தொடர்ந்து போராட்டத்தை முன்கொண்டு செல்ல ஏதாவது ஒரு தாபன வடிவம் இல்லாதது பாசிஸ்டுகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

அப்படியான மாற்று தாபன அமைப் பொன்றை உருவாக்க தமிழ் பாசிசம் அனுமதிக்குமா? இது யதார்த்தமா? என்ற கேள்வி இவ்விடத்தில் வேண்டுமானால் கேட்கப்படலாம். ஆனால் பாசிச சக்தி அனுமதித்தால் மட்டும்தான் நாம் மாற்று தாபனங்களைக் கட்டலாம் என்பதும் யதார்த்தமானதா? என்பதும் கூடவே கேட்கப் படவேண்டும். ஒரு சமூகம் ஒட்டு மொத்தமாக ஒரு பாசிச அமைப்பின் கோரப்பிடிக்குள் அகப்பட்டிருக்கும் வேளை அது எழுச்சி கொள்ளுவதற்கத் தேவையான பலமும் ஊக்கமும் உள்ளிருந்து எழுவது மிக மிகக் கடினமானதாகும். ஆனால் அச்சமூகத்தில் ஆங்காங்கே வெடித்துக் கிளம்பும் எழுச்சிகளுக்கு வெளியேயிருந்து எவ்வளவு ஆதரவு பாசிச எதிர்ப்பு சக்திகளால் வழங்கப்பட வேண்டும் என்பது இங்கு முக்கியமாகும். இப்பாசிசக் கும்பலின் பிடிக்கு வெளியே இருப்பவர்கள், குறிப்பாக இலங்கை மண்ணுக்கு வெளியே சென்று வாழ்பவர்கள் இதுபற்றி அக்கறைப் படவேண்டியது அவசியம்.

### எழுச்சிகளும் பிரச்சாரமும்

அண்மையில் குருநகரில் நடந்த மீனவர் எழுச்சியிலும் கூட ஒரு உண்மை தெளிவாக உணரப்பட்டது. எவ்வாறு பிரச்சார இயந்திரத்தை புலிப்பாசிஸ்டுக்கள் பயன்படுத்தினார்கள் என்பது. குருநகர் மக்கள் தமிழ்ப் பாசிசத்தின் உள்ளூர் ஊதுகுழலான ‘உதயன்’ காரியாலயத்தினுள் நுளைந்து ‘யாராவது சீட்டு விளையாடினால் செய்தி போடுவீர்கள்... ஆனால் இது மக்களின் வாழ்க்கை மற்றும் உயிர்ப் பிரைச்சினை’ என கேள்வியெழுப்பியும் உள்ளனர். தமது நியாயமான போராட்டத்திற்கு போதிய பிரச்சாரம் வழங்கப் படவில்லை என்பதும் அது வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்யப் பட்டதும் என்பதே மக்களின் கேள்வி.

எனவே எழுச்சிகள், மற்றும் போராட்டங் களின் போது அதற்கு போதிய பிரச்சாரம் (*Publiclty*) கிடைக்கச் செய்வது மிக முக்கியமாகும். தற் போது இலங்கையில் உள்ள நிலை மையை எடுத்துப்பாாத்தால், சகல தமிழ் ஊடகங்களும் ஒன்றில் அச்சம் கார ணமாக அல்லது தாம் விரும்பியே புலிகளின் படுகொலை அரசியலை புகழ்ந்து உண்மைகளை மூடி மறைத்து பிரச்சாரம் செய்வதையே தம் ஊடக தர்மமாக கொண்டுள்ளன. ஓரளவிற்கு மக்களுக்காக உண்மைகளை எழுதும் ஊடகங்கள் துரோகி ஊடகங்களாக சாயம் பூசப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி மாற்று ஊடகவியலாளர்கள் குறிவைத்து கொல்லப்படுகின்றனர்.

இந்த நிலைமையில் மாற்றுத் தமிழ் ஊடகம் ஒன்றுக்கான சாத்தியப்பாடு இலங்கையில் இல்லாமல் செய்யப்ப்

www.tamilarangam.net



பட்டுக்கொண்டே வருகிறது. எனவே வர வர மக்கள் எழுச்சிகள் என்பவை வெளியுலகிற்குத் தெரியாமல் முளையிலேயே நசுக்கப்பட்டு விடலாம். இதனால்தான் அடுத்துவரும் காலங்களில் மக்களின் எழுச்சகள் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்து அதைப்பிரச்சாரம் செய்யும் ஊடகங்கள் அதிகம் வெளிக் கொணரப்படுவது மிக மிக அவசியம். இவ்வாறான ஊடகங்கள் அம்மக்களின் கைகளுக்கு போய்ச் சேர்வதற்கான வழிகளையும் நாம் கண்டறிய வேண்டும். தமது செயற்பாடுகளுக்கு பரந்தளவு பிரச்சாரம் கிடைக்கின்றது என்பதே மக்களைப் பொறுத்தவரை பெரும் ஆன்ம பலத்தை அவர்களுக்கு வழங்கும்.

குறிப்பாக பி.பி.சி. போன்ற பலமான ஊடகங்கள் பக்கசார்பாகவும் விடயங்களை பூசி மெழுகி செய்திகளை வெளியிடும் போதும் அவற்றை அம்பலப்படுத்தி அழுத்தமிட மாற்று ஊடகங்கள் அவசியமாகின்றன. அத்துடன் பி.பி.சி. போன்றவை இலங்கையில் நடைபெறும் எழுச்சிகள் தொடர்பாக செய்திகளை வெளியிடும்போது புலிகள் சார்பில் சிலரை பேட்டி காண்பர். ஆனால் எழுச்சியில் ஈடுபடும் மக்கள் அச்சம் காரணமாக பேட்டி வழங்க மறுக்கக்கூடும். இதையே சாட்டாக வைத்து அவர்கள் பக்கச் சார்பாக பிரச்சாரம் செய்கின்றனர். எனவே இவ்வாறான வேளைகளில் அந்த மக்கள் சார்பில் அப்போராட்டங்களுக்கு ஆதரவானவர்களிடம் பேட்டிகளை எடுத்து நடுவுநிலைமை பேணும்படி அவர்களுக்கு அழுத்தமிடுதல் அவசியம்.

### ஆதரவு நடவடிக்கைகள் (Solidarity Actions)

1990ஆம் ஆண்டிற்கும் 1995ற்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ். குடாநாட்டிற்குள் நடத்தப்பட்ட புலிப் பாசிஸ்டுகளுக்கு எதிரான எழுச்சிகள் பெரும்பாலும் வெளியுலகிற்குத் தெரியாமலேயே நசுக்கப்பட்டன. அதற்கான வாய்ப்பான சூழல் அப்போது அங்கு அரசாங்கத்தினாலும் பாசிஸ்டுக் களாலும் உருவாக்கப்பட்டிருந்தது.

- ***இலங்கை அரசிற்கு எதிராக யுத்தம் நடந்து கொண்டிருந்தமை***
- ***மக்கள் வெளியுலகோடு தொடர்புகள் இல்லாமல் வைக்கப் பட்டிருந்தமை***
- ***சகல உள்ளூர் ஊடகங்களும் பாசிச ஊதுகுழல்களாக ஆக்கப்பட்டிருந்ததோடு பெரும்பாலான வெளி ஊடகங்கள் உள்ளே அனுமதிக்கப்படாமை***
- ***மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப் பட்டிருந்தமை***
- ***தொலைபேசி, தொலை மடல் (Fax) , மின் அஞ்சல் (E.mail) வாய்ப்புகள் இல்லாத நிலைமை***
- ***பொது மக்களின் சகல போக்குவரத்துக்களும் பாசிஸ்டுக்களின் கொடிய பாஸ் நடைமுறைக் கூடாக கட்டுப் படுத்தப் பட்டிருந்தமை***
- ***சந்தேகத்திற்கு உரியவர்களாக கருதப்படுவோர் உளவுப் பிரிவி-னரால் என்நேரமும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்படும் நிலைமை***

இத்தகைய நிலைமைகள் இன்று யாழ். குடா நாட்டுக்குள் பாரிய அளவில் உடைபட்டுள்ளது. எனவேதான் மக்கள் நடத்தும் எழுச்சிகள் ஓரளவிற்கு வெளியுலகிற்குத் தெரியவருகின்றன. ஆனால் இன்றும் புலிப் பாசிஸ்டுக்களின் காலடியின் கீழ் வாழும் வன்னி மக்களுக்கு இந்த நிலைமைகளில் எந்த மாற்றத்தையும் கொடுக்க புலிப் பாசிஸ்டுக்கள் அனுமதிக்கவில்லை. அனுமதிக்கவும் மாட்டார்கள். ஆனால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா போன்ற இடங்களில் இருக்கும் வாய்ப்பான சூழ்நிலைகள் இன்னும் அதிகம் பாவிக்கப்பட்டு மக்கள் எழுச்சிகள் ஊக்குவிக்கப் படவேண்டும்.

**யுத்தமற்ற சூழலைப் பாவித்து சகல மாற்றுக் கருத்துள்ளவர்களையும் தமக்கு எதிரானவர்கள் என சந்தேகிப்பவர்களையும் புலிப் பாசிஸ்டுக்கள் கொன்றொ ழிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. எனவே இதற்கு முகம் கொடுத்து வேலை செய்வதற்கு நாம் தயாராக வேண்டும். பாசிஸ்டுகளுக்கு எதிரான மக்களின் ஒவ்வோரு சிறு எழுச்சியும் பயனுள்ளதாக்கப்பட வேண்டும். அச்சுறுத்தல் களைக் கண்டு பயந்து ஓடுவதும், ஓடுபவர்கள் தமது ஓட்டத்தை நியாயப்படுத்த தமக்குள் இருக்கும் பயத்தை ஏனையோருக்குள் விதைப் பதும் எமது அரசியல் செயற்பாட்டாளர்களிடம் ஒரு தொற்று நோயாகி வருவதை நாம் அவதானிக்க வேண்டும்.**

தற்போது யுத்தமற்ற சூழ்நிலையைப் பாவித்து சகல மாற்றுக் கருத்துள்ளவர்களையும் தமக்கு எதிராக செயற்படக்கூடும் என சந்தேகிப்பவர்களையும் புலிப் பாசிஸ்டுக்கள் கொன்றொழித்து வருகிறார்கள். இது ஒன்றும் புதிய விடயமல்ல. எனவே இதற்கு முகம் கொடுத்து வேலை செய்வதற்கு நாம் தயாராக வேண்டும். எனவே பாசிஸ்டுக்களுக்கு எதிரான மக்களின் ஒவ்வொரு சிறு எழுச்சியும் பயனுள்ளதாக்கப் படவேண்டும். அச்சுறுத்தல்களைக் கண்டு பயந்து ஓடுவதும் ஓடுபவர்கள் தமது ஓட்டத்தை நியாயப்படுத்த தமக்குள் இருக்கும் பயத்தை ஏனையோருக்குள் விதைப்பதும் எமது அரசியல் செயற்பாட் டாளர்களிடையே ஒரு தொற்று நோயாகி வருவதை நாம் அவதானிக்க வேண்டும். இந்த நோயை மக்களுக்கும் தொற்ற வைக்காதிருக்க வேண்டும்.

எனவேதான் மக்கள் எழுச்சிகளுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்கள் பிரச்சாரங்கள், ஒன்றில் வடக்குக் கிழக்கிற்கு வெளியே அல்லது வெளிநாடுகளில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படுதல் வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் தொடர்சியாகச் செயற்படுத்தப் படுகின்றபோது மக்களுக்கு அது மனோதைரியத்தைக் கொடுப்பதோடு புலிப் பாசிஸ்டுக்களின் பொய்யான பிரச்சாரங்களுக்கும் பதிலடியாக அமையும்.

உடனடியாக சில தனிநபர்கள் சேர்ந்து ஒரு தாபன வடிவத்தைக்கட்டி அதன் பெயரில் போராட்டங்களை நடத்தி மக்களை பாசிஸ்டுகளுக்கு எதிராக அணிதிரட்டுவது சாத்தியமற்றதாக இருக்கும் வேளைகளில் மக்களின் இயல்பான எழுச்சிகளுக்கூடாக அவர்களை தாபனப்படுத்துவதை ஒரு முறைமையாகக் கொள்ளல் வேண்டும். இது எதிரிக்கு தொடர்ச்சியான தலையிடியாக கொடுக்கப் படவேண்டும். இவ்வாறான எழுச்சிகள் நடப்பது பற்றி பரவலான பிரச்சாரங்கள் செய்யப்பட வேண்டியதுடன் இருட்டடிப்பு செய்யும் ஊடகங்கள் மீது அழுத்தமிடுவது மற்றும் அவற்றைப் பகிஷ்கரிப்பதற்கு மக்களை ஊக்குவிப்பது போன்ற வற்றிலும் ஈடுபட வேண்டும்.

தமிழ் பாசிசத்துக்கு எதிரான மக்களின் எழுச்சிப் போராட்டங்களாக இருந்தாலென்ன, தமிழ் சமூகத்தில் பொதுவாக ஜனநாயம் மற்றும் மனித உரிமை மீறல் போன்றவற்றுக்கு எதிரான போராட்டங்களாக இருந்தால் என்ன கடந்தகாலங்களில் இதில் ஈடுபட்டவர்கள் இறுதியில் தாம் தனிமைப்பட்டுப் போயுள்ளதாக உணர்ந்த சந்தர்ப்பங்கள் பல. இதுவே புலிப் பாசிசத்திற்கு கிடைக்கும் பெருவெற்றியாகும். இந்நிலைமை மாற்றப்பட வேண்டியது மிக அவசியம். மண்ணில் நடக்கும் ஒவ்வொரு எழுச்சியின் தாக்கமும் பிரதிபலிப்பும் வெளிநாடெங்கும் பரப்பப்படும் என்னும் உணர்வும் நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்படும் வகையில் இவ்வலைக் கோர்ப்பு செயற்பாடு (Net working) நடத்தப்பட வேண்டும். *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் பாசிசத்திற்கு சவால் விடுதல்

## Challenging the Tamil Fascism

இலங்கைத் தமிழ் சமூகம் தன் விடுதலைப் போராட்டத்தின் விளைவாக உருவாக்கி விட்டுள்ள ஓர் ஆதிக்க சக்தியானது தமிழ்த் தேசியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எல்லையையும் தாண்டி ஓர் ஏகபோக அதிகாரக் கும்பல் (*Totalitarian Regime*) என்கின்ற நிலையை இன்று எட்டியுள்ளதோடு, தன்னை ஒரு குறுந்தேசியவாத பாசிச சக்தியாகவும் இனம் காட்டி நிற்கிறது. ஆரம்ப காலம் முதலே அதன் செயற்பாடுகள் ஏகபோக அதிகாரத்துவத் தன்மைகளையும் அதிதீவிர குறுந்தேசியவாதத் தன்மைகளையும் கொண்டிருந்தது. ஒரே தலைமை, ஒரே இயக்கம், கேள்வி








கேட்கப்பட முடியாத ஒரே கொள்கை, உயரிய கட்டுப்பாடு, ஒழுக்கம், புனிதம் என்னும் ஓர் பாசிச கட்டுமானத்திற்குரிய சகல மோசமான தன்மைகளை அது கொண்டிருந்தாலும் அதனை ஓர் முழுமையான பாசிச ஸ்தாபனமாகவோ அல்லது பாசிசத்தை நோக்கி பயணிக்கின்ற சக்தியாக இனங்காண ஏனைய தமிழ் அரசியல் சக்திகள் தவறிவிட்டன.

இத்தகைய பலமான பாசிச சக்தியோடு நாம் மோதுவதற்கான வியூகங்களை வகுப்பதற்கு முன்னர் அதைப்பற்றி, அதன் குணாம்சங்கள் பற்றி, அதன் பலமான, பலவீனமான அம்சங்கள் பற்றி நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் தோற்றுவாய், மற்றும் அச்சக்தி இவ்வளவு பலம்பெற்று வளருவதற்கு அடிப்படையாக இருந்த எமது சமூக அரசியல், கலாசார ஊற்று வாய்களையும் சரியாக கண்டறிய வேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ இப் பாசிச ஜனநாயக விரோத சக்தியிடமே தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் கையளிக்கப்படப் போகின்றது. எனவே இதனை இனம் கண்டு இதனால் வரக்கூடிய எதிர்கால பாதகங்களை மனதிற் கொண்டு நாம் செயற்படவேண்டும். இக்கட்டுரைத் தொடர் மூலமான விவாதம் அதற்காகவே ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

### உலக வரலாற்றில் பாசிசம்

பாசிச கோட்பாட்டின் (*Fascist Doctrine*) அடிப்படையிலான சக்திகளின் உருவாக்கத்திற்கு உலகில் பல்வேறு நாடுகளில் இருந்த குறிப்பான சூழ்நிலைகள் வாய்ப்பாக அமைந்ததோடு அப்போது நிலவிய சர்வதேச அரசியல் நிலமைகளும் பாசிச சக்திகளின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்திருக்கின்றன. இத்தாலிய பாசிசம், ஜேர்மனிய நாசிசம் என்னும் இரட்டைக் குழந்தைகள், முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்விளைவுகளோடு ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த பாரிய பொருளாதார சீரழிவு மற்றும் அன்நாடுகளில் பரவலாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த சிவப்பு அரசியலின் வீரியம் என்பவற்றினால் ஏற்பட்ட அச்சம், அதன் விளைவாக அன்நாட்டு நடுத்தர, மேல்தர முதலாளித்துவ சக்திகளின் ஊக்கமும் ஆதரவும் பெருமளவில் வழங்கப்பட்ட நிலைமைகளின் பின்னணியிலேயே உருவாகியன. பாசிசம், நாசிசம் ஆகிய இரண்டுமே அந்நாடுகளின் சமூகங்கள் ஒட்டு மொத்தமாக பாரியளவில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான சிக்கல் மற்றும் சீரழிவுகளுக்குள் அகப்பட்டிருந்த வேளையிலேயே பிறப்பெடுத்துள்ளன என்பது இங்கு மிக முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக அவற்றின் வளர்ச்சியில் அந்தந்த நாடுகளின் மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் இனத்துவம், மதம் போன்ற விடயங்கள் மிகத் தீவிரமாக தூக்கி பிடிக்கப்பட்டு மக்கள் ஒருவித போதையேற்றப்பட்ட நிலையில் கண்மூடித்தனமாக அப்பாசிச, நாசிச தலைவர்களையும் அக்கோட்பாடுகளையும் பின்பற்ற வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக பாசிச, நாசிச கோட்பாடுகளை முன்வைத்து வளர்ச்சி பெற்ற இத்தாலியின் **பெனிற்றோ முசோலினி**, ஜேர்மனியின் **அடால்ப் ஹிட்லர்** ஆகிய இருவருமே பெரும்பாலும் தம்மை உயரிய கட்டுப்பாடுகள் மிக்க ஒழுக்க சீலர்களாகவும், அந்தந்த சமூகங்களின் பாரம்பரியங்கள், பழக்கங்கள், பண்பாடுகள் ஒழுக்கங்கள், என்பவற்றை பேணுபவர்களாகவும், இனம், தேசம், தேசஎல்லை என்பவற்றைக் காக்கப் பிறந்த உத்தமர்களாகவுமே தம்மைக் காட்டிக் கொண்டனர். அத்துடன் புனித ஸ்தாபனம் புனித போராட்டம் என்பவற்றுக்கு ஊடாக தத்தம் நாட்டு மக்களுக்கு அப்பழுக்கற்ற தேசங்களையும் சுகமான வாழ்க்கையையும் உருவாக்கித் தருவோம் என்கின்ற அடிப்படையில் மிக குறிப்பாக வறிய மற்றும் கீழ்த்தட்டு மக்களை கவர்ந்திழுத்து தம்மைப் பாதுகாக்கும் பலம் பொருந்திய படையணிகளை அவர்கள் கட்டியமைத்துள்ளனர்.

www.tamilarangam.net





# பாசிசத்தின் ஊற்றுக்கண்கள் கட்டுரைத் தொடர் 01

அந்தந்த நாட்டு நடுத்தர வர்க்கங்கள் பெரும்பாலும் தமது சமூகங்களின் இன, மொழி மத அடையாளங்கள் பேணப்பட்டு தாம் ஓர் பலம் பொருந்திய தேசமாக உருவாக வேண்டுமெனில், தாம் அனைவரும் அந்தப் பாசிச, நாசிசத் தலைமைத்துவங்களையும் அவற்றின் கோட்பாடுகள், செயல் திட்டங்களையும் எவ்வித கேள்விகளுக்கும் உட்படுத்தாமல் பின்பற்ற வேண்டும் என்னும் கருத்தை அடித்தட்டு மக்களிடம் பிரச்சாரம் செய்து அவர்களை நம்பவைப்பதில் பெரும் பங்காற்றியுள்ளன.

அத்தோடு அதன் தலைவர்கள் 'புனிதமானவர்கள்' அவர்கள் எப்போதும் 'சரியாகவே இருப்பார்கள்' போன்ற கண்மூடித்தனமான நம்பிக்கைகளை பிரச்சாரம் செய்வதிலும், கீழ்த்தட்டு மக்கள் எவ்வித கேள்விகளும் இன்றி அவர்களை கண்மூடித்தனமாக நம்பி செல்ல வைப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளனர். அப்பாசிச கட்டுமானத்தின் பல்வேறு கட்டங்களிலும் பல்வேறு பொறுப்புகளில் அக்கமுடன் பணியாற்றி அதற்கு பரவலான சமூக ஏற்றுக் கொள்ளலையும் அல்லது நியாயாதிக் கத்தையும் (Social Acceptance or Legitimacy) ஏற்படுத்தியவர்கள் குறிப்பாக இந்நடுத்தர வர்க்கத்தினரே.

உயர்தர வர்க்கத்தைப் பொறுத்தவரை இப்பாசிச, நாசிச கட்டுமானங்கள் வளர்ச்சி அடைவதற்கான நிதி மற்றும் அனைத்து வளங்கள் என்பவற்றை கொடுத்து உதவி யதோடு எப்போதும் நிழல் போல நின்று அக்கட்டுமானங்கள் சிதைந்து விடாமல் பாதுகாத்ததோடு அப்பாசிச, நாசிச தலைமை-கள் கீழ்த்தட்டு உழைக்கும் மக்களோடு எந்தக் கட்டத்திலும் அரசியல், பொருளாதார சமரசத்திற்கு செல்லாத வகையில் பார்த்துக் கொண்டன.

எனவேதான் அந்நாடுகளில் அப்பாசிச, நாசிச கட்டுமானங்களை உள்ளிருந்து உடைத்தல் என்பது மிகமிக சிரமமானவையாக இருந்துள்ளன. வெளித் தோற்றத்திற்கு இவை சமூகத்தின் சகல வர்க்க அல்லது சகல தட்டு மக்களுக்கும் எதிரானது போல தோன்றினாலும் மிக தீர்க்கமான கட்டங்களில் (Crucial Situations) நடுத்தர வர்க்கமானது அச்சக்திகளுடன் சமரசம் செய்துகொண்டுள்ள அதே வேளை மேல்தட்டு வர்க்கமானது எவ்வித சிரமும் இன்றி அவற்றோடு கைகோர்த்து நின்றுள்ளது. எனவே இவை பலம் பொருந்திய கட்டுமானங்களாக வளர்ந்து சமூகத்தின் சகல அங்கங்களிலும் வியாபித்து ஒட்டு மொத்தமாக சமூகத்தின் கழுத்தை நெரிக்கையில் அதற்கு எதிராக மக்களை திரட்டுவதோ அல்லது அதோடு மோதுவதோ அந்நாடுகளில் கடினமானதாக இருந்துள்ளது.

குறிப்பாக கீழ்த்தட்டு மக்கள் அதன் பிரிவு இராணுவ, பொலிஸ், மற்றும் உளவுப் பிரிவு போன்ற பாசிச இயந்திரத்தின் சக்கரப் பற்களாக மாற்றப்பட்டு அக்கட்டுமானங்களுக்கு எதிரான மக்கள் எழுச்சிகளை நெரித்து அழிக்கும் பலமான முன்னணி அங்கமாக மாற்றப்பட்டிருந்துள்ளனர்.

> **பாசிச, நாசிச கோட்பாடுகளை முன்வைத்து வளர்ச்சி பெற்ற இத்தாலியின் பெனிற்றோ முசோலினி, ஜேர்மனியின் அடொல்ப் ஹிட்லர் இருவருமே பெரும்பாலும் தம்மை உயரிய கட்டுப்பாடுகள் மிக்க ஒழுக்க சீலர்களாகவும், அந்தந்த சமூகங்களின் பாரம்பரியங்கள், பழக்கங்கள், பண்பாடுகள் ஒழுக்கங்கங்கள், என்பவற்றை பேணுபவர்களாகவும், இனம், தேசம், எல்லை என்பவற்றைக் காக்கப் பிறந்த உத்தமர்களாகவுமே காட்டிக் கொண்டனர். அத்துடன் புனித ஸ்தாபனம் புனித போராட்டம் என்பவற்றுக்கு ஊடாக தத்தம் நாட்டு மக்களுக்கு அப்பழுக்கற்ற தேசங்களையும் சுகமான வாழ்க்கையையும் உருவாக்கித் தருவோம் என்கின்ற அடிப்படையில் மிக குறிப்பாக வறிய மற்றும் கீழ்க்கட்டு மக்களை கவர்ந்திழுத்து தம்மைப் பாதுகாக்கும் பலம் பொருந்திய படையணிகளை அவர்கள் கட்டியமைத்துள்ளனர்.**

எனவே இத்தாலியப் பாசிசம், ஜேர்மனிய நாசிசம் இரண்டுமே பிற்போக்கான அதேவேளை தோல்விகண்ட முதலாளித்துவ அரசியல் செயற்பாட்டின் உற்பத்தியாகவே உலக நாடுகளில் தோற்றம் பெற்றுள்ளன. அவை *Totalitarian Regime* என்ற அடைமொழியால் அழைக்கப் பட்டுள்ளன. இதனை 'ஏகபோக அதிகாரத்துவ அரசு' அல்லது ஆட்சி முறை என்று அழைக்கலாம். ஆனால் இந்த ஏகபோக அதிகாரத்துவ ஆட்சி முறையானது பிற்போக்கான முதலாளித்துவ அரசியல் செயற்பாட்டினால் மட்டுமன்றி அதிதீவிர இடதுசாரி அரசியல் செயற்பாடுகளுக்கூடாகவும் உருப்பெற்று வளர்ச்சியடைய கூடும் என்பதும் உலக நாடுகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்விடயமும் இக்கட்டுரைத் தொடரில் தனியாக விரிவாக ஆராயப்படும்.

## இத்தாலியும் பாசிச கோட்பாடும் Italy and Fascist Doctrine

பாசிச கோட்பாட்டின் தோற்றம் முதலாம் உலக யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் இத்தாலியில் பெனிற்றோ முசோலினி என்ற ஓர் இளம் அரசியல் செயற்பாட்டாளனால் முன்வைக்கப்பட்டது. ஜேர்மனியைப் போலவே இத்தாலியும் 1860க்கும் 1870க்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஒரே இராச்சியமாக இணைக்கப்பட்டது. ஆனால் இத்தாலியால் உடனடியாக ஓர் பலம் பொருந்திய நாடாக உலக அரங்கில் எழுச்சிபெற முடியவில்லை. வடக்கு இத்தாலியில் இருந்த வளமான வாழ்க்கைத் தரமும் தெற்கு இத்தாலியில் பரவலாக காணப்பட்ட மிக வறிய வசதியற்ற வாழ்க்கை நிலைமையையும், ஒன்றிணைந்த இத்தாலிக்குள் பாரிய சமூகப், பொருளாதாரப் பிளவாக காணப்பட்டன. மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் கல்வி அறிவற்றவர்களாகவே காணப்பட்டனர். ஜேர்மனியைப் போலன்றி பல அத்தியாவசிய கச்சாப் பொருட்கள் (raw materials) இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே இருந்தனர். நாட்டில் 25 மில்லியன் சனத்தொகையில் ஆறு இலட்சம் பேர் மாத்திரமே 1882ம் ஆண்டளவில் வாக்குரிமை பெற்றவர்களாக இருந்தனர்.

இந்த நிலைமையில் இத்தாலிய அரசானது உள்நாட்டின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் உத்தியாக முதலாம் உலக மகா யுத்தத்திற்குள் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டது. ஆனால் யுத்த முனையிலும் பாரிய வெற்றிகளை இத்தாலி சாதிக்கவில்லை. மாறாக ஆஸ்திரியாவில் கைப்பற்றிய நிலப் பிரதேசத்திற்காக அதிக இலட்சம் உயிர்களையும் பெரும் தொகையான செல்வத்தையும் இத்தாலி விலையாக கொடுக்க நேர்ந்தது.

இத்தாலிக்குள் நிலவி வந்த அடைந்திருந்த வர்க்க வேறுபாடு காரணமாக வறிய மக்கள் பெருந்தொகையில் இராணுவ வீரர்களாக முன்னணி யுத்த முனைகளுக்கு அனுப்பப்பட்டு கொல்லப்பட, பணம் படைத்தவர்கள் பின்னால் நின்று சுகமாக வாழக்கை நடத்தும் நிலையே காணப்பட்டது. யுத்தம் முடிவடைந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னர் நாட்டில் பல விடயங்களை கட்டுப்படுத்தும் நிலமையை அரசு இழந்துபோய் இருந்தது. வானுயர சென்றிருந்த பணவீக்கம், விவசாயிகள் பலாத்காரமாக காணிகளை கைப்பற்றி இருந்த நிலமை, பரவலாக தொழிற்சாலைகள் எங்கும் தொடர்ந்த வேலை நிறுத்தங்கள் போன்றவற்றோடு இத்தாலிய தேசத்தின் எல்லைகளைத் தீர்மானிப்பதில் அரசாங்கம் விட்டுக் கொடுப்புகளுக்கு போகக் கூடாது என்ற நடுத்தர வர்க்கத்தினரின் தேசியவாத ஜனரஞ்சக கோஷம் போன்ற நிலமைகளினால் அரசு திக்கு முக்காடிப் போய் இருந்தது.

இத்தகைய ஒரு சமூக, அரசியல், பொருளாதார சீரழிவு நிலையிலேயே பெனிற்றோ முசோலினி என்னும் பாசிஸ்ட் இத்தாலியில் உருவானான், அல்லது உருவாக்கப்பட்டான்.

## பாசிச நாயகன் இளம் முசோலினி



கலகம் செய்தல் அடிக்கடி சிறை செல்லுதல் போன்றவற்றையே தன் இளமைக்காலத்தின் பண்பாக கொண்டிருந்த முசோலினி 1883ம் ஆண்டு ஓர் இத்தாலிய விவசாய குடும்பத்தில் பிறந்தான். ஓர் கொல்லனாக தொழில் செய்த அவரின் தந்தை, மெக்ஸிக்கோவைச் சேர்ந்த புரட்சியாளன் பெனிற்றோ ஜுவாரெஸ் (*Benito Juarez*)ன் ஞாபகமாக தனது மகனுக்கு பெனிற்றோ முசோலினி என்று பெயர் சூட்டினார். பாடசாலை நாட்களிலேயே இளம் முசோலினி சக மாணவர்கள் மீது வன்முறைகள் மேற்கொள்வதில் பிரபல்யமானவனாக இருந்தான். பின்னைய நாட்களில் சக மாணவர்களின் உடல்களில் தான் ஏற்படுத்திய காயங்களின் வடுக்களைக் கண்டு திருப்தியுடன் புன்னகைப்பது அவனது வழக்கமாக இருந்தது. தன்னோடு கூட படித்த ஒரு மாணவனை கத்தியால் குத்தியதற்காக இவன் கத்தோலிக்க குருமடப் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டான்.

ஆனால் கிராமத்து பாடசாலை ஒன்றில் ஆசிரியனாக வரும் அளவிற்கு அவன் கல்வி கற்றிருந்தான். ஆனாலும் தனது வகுப்பறையில் மாணவர்களுக்கு இடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேண தவறியதற்காகவும், இராணுவச் சேவையில் ஈடுபடச் சென்றிருந்த ஒருவரின் மனைவியோடு திருட்டு உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்ததற்காவும் முசோலினி ஆசிரியர் வேலையில் இருந்து நீக்கப்பட்டான்.

**முசோலினி தன்னைச்சுற்றி பலமானதொரு இராணுவ அணியைக் கட்டி வைத்திருந்தான். அதில் பணியாற்றியவர்கள் பெரும்பாலும் கீழ்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினரே. இத்தாலிய சமூகத்தில் சமூகப் பொருளாதார ரீதியாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருந்த பிரிவினருக்கு இதன் மூலம் மானசீக ரீதியான இலஞ்சமாக அதிகாரத்தை** (Power as a Moral Bribe) **முசோலினி வழங்கினான். எனவே அவனுடைய இந்த முன்னணி படையணிகள்** (Legionaries) **அவன் மீது கண்மூடித்தனமான பக்தியை கொண்டிருந்தவர்களாக காணப்பட்டனர். எனவே முசோலினியை வளர்த்துவிட்ட முதலாளித்துவ சக்திகள் நினைத்தாலும் இலகுவில் அவனைத் தோற்கடிக்க முடியாதபடி அவன் பலமாயிருந்தான்.**

தான் மிக உயர்வாகக் கருதிய அந்தப் பெண்ணுடனான உறவை இளம் முசோலினி விபரிக்கும் பொழுது, "நான் அவள் மீது கொண்டிருந்த ஆக்ரோஷமான, அதியுன்தமான காதலில் அவள் முழுமையாகவே தன்னை கரைத்து விட்டிருந்தாள். நான் கேட்டதற்கெல்லாம் அவள் எவ்வித மறுப்புமின்றிப் பணிந்தாள், இணங்கினாள். நான் விரும்பிய போதெல்லாம் என்னை அவளுக்குள் கரைத்துவிட இடமளித்தாள்" என்பான்.

1903ம் ஆண்டு முசோலினி சுவிர்சலாந்திற்கு ஓடினான். அங்குதான் அவன் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது மற்றும் அதிகாரத்துவம் பற்றிய தத்துவங்களை வாசித்தான். தன்னை ஒரு நாஸ்திகவாதியாக கூறிக்கொண்ட அவன் தான் ஒரு 'அதிகாரத்துவத்துடன் கூடிய கமியூனிஸ்ட்' (*Authoritarian Communist*) என்று பிரகடனப்படுத்தினான். "முடிந்தால் கடவுள் என்மீது மரணத்தை கொண்டு வரட்டும் பார்க்கலாம்" என்று பார்வையாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தும் விதமாக பகிரங்கமாக சவால் விடுவான். பின்னர் தன்னை ஊடகத்துறையில் இணைத்துக்கொண்ட முசோலினி அதற்கு ஊடாக தன் கருத்துக்களை பரப்புவதில் ஈடுபட்டதோடு உணர்ச்சிகளை தூண்டுகின்ற செய்திகள் மற்றும் விடயதானங்கள் மூலம் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாவதை இனங்கண்டான்.

1904ம் ஆண்டு மீண்டும் இத்தாலிக்கு திரும்பிய முசோலினி சோசலிசக் கட்சியோடு இணைந்து கொண்டு அங்கிருந்த பிரதானமான சோசலிச பத்திரிகையான அவாந்தியில் (*Avanti*) சேர்ந்து அதன் ஆசிரியராக பணியாற்றும்வரை உயர்ந்தான். இத்தாலிய ஏகாதிபத்தியம் லிபியா மீது புரிந்த ஆக்கிரமிப்பையும் கொடுமைகளையும் தன் பத்திரிகையில் விமர்சனம் செய்ததற்காக 1911ம் ஆண்டில் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் அதே முசோலினி 1914ம் ஆண்டு தீவிரமாக இராணுவ ஆக்கிரமிப்புவாத கருத்தை முன்வைத்ததோடு யுத்தத்தின்போது நடுநிலையாக இருக்க முடியாது என்னும் வாதத்தையும் முன் வைத்தான். அத்தோடு தனது சோசலிச நண்பர்களோடு முறித்துக் கொண்டு இராணுவத்தில் சேர்ந்து யுத்த முனைக்குச் சென்றான்.

யுத்த முனையில் இருந்து திரும்பி வந்தபின் தனக்கு ஏற்பட்ட இராணுவத்தினரின் தொடர்புகளுக்கு உள்ளேயே முசோலினி தன் பாசிஸப் பிரச்சாரத்தை முதலில் மேற்கொண்டான். யுத்தக் களைப்பு, விரக்தி, மன உழைச்சல் என்பவற்றால் பலர் முசோலினியின் கோட்பாட்டின் பால் கவரப்பட்டனர். நாட்டில் பரவலாக இருந்த வேலைநிறுத்த அச்சுறுத்தல் மற்றும் கமியூனிச எழுச்சி என்பவற்றையும் சாதகமாக பாவித்து மேல்தட்டு வர்க்கத்தை அவன் தன்பால் கவர்ந்ததோடு இத்தாலிய இனம், கலாச்சாரம், மொழி, நமது தேசம் என்பவை பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற கோஷங்களின் மூலமும் சமூகத்தில் ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றை நிலைநிறுத்த வேண்டும் எனவும் பிரசாரம் செய்து நடுத்தர வர்க்கத்தினரைக் தன்பால் கவர்ந்தான். 1912களில் சோசலிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இத்தாலியத் தேசியம்'' கலந்த ஓர் புரட்சிகர கருத்தை முன்வைத்த முசோலினி யுத்தத்தின் முடிவின் பின் தம் தொழிலை இழக்க நேர்ந்த பெருந்தொகையான இராணுவத்தினரை அரசுக்கு எதிராகவும், அப்போது யுத்தத்திற்கு எதிரான கருத்தை தீவிரமாக முன்வைத்த சோசலிச கட்சிக்கு எதிராகவும் திருப்பினான். யுத்த காலத்தில் பெரும் அதிகாரங்களோடு இருந்த நடுத்தர, உயர் இராணுவ அதிகாரிகள் மீண்டும் சாதாரண மனிதர்களாகி வீடுகளில் அடைபட்டுக் கிடக்க விரும்ப மாட்டார்கள் என்பதை சரியாக கணிப்பிட்ட முசோலினி அவர்களை கவர்ந்து இழுப்பதற்காகவே "இத்தாலிய வரலாற்றில் அது யுத்தம் புரிந்த காலகட்டமே புகழ் மிக்கது" என முழங்கினான். "சாகசம் புரிபவர்களுக்கே இத்தாலி சொந்தமானது" என்னும் அவனது வீர வாக்கியங்கள் இளம் இராணுவ வீரர்களை பெரும்பாலும் கவர்ந்தது. கிராமங்களில் மற்றும் வறியவர்களிடத்தில் முதலாளித்துவத்திற்கு எதிராக தான் செயற்படுவதுபோல் பிரசாரம் செய்து அங்கிருக்கும் இளைஞர்களையும் வேலையற்றவர்களையும் அணி திரட்டினான், நகரங்களில் சோசலிசத்திற்கு எதிராக பிரசாரம் செய்து பணம் படைத்த மக்களுக்கு தான் எதிரானவன் அல்ல எனக் காட்டியதன் மூலம் தனது பத்திரிகை, கட்சி, மற்றும் பிரச்சாரப் பணிகளுக்கான பெரும் தொகையான நிதியுதவிகளை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டான்.

எனவே இத்தாலிய பாசிசம் என்பதன் நாயகனாக முசோலினி தென்பட்டாலும் அப்பாசிசக் கட்டுமானத்தின் மொத்தச் சொந்தக்காரன் அவனல்ல என்பது இங்கு கவனிக்கப் படவேண்டும். அன்றைய இத்தாலிய நடுத்தர மற்றும் மேல்தட்டு வர்க்கங்களும் அக்கட்டுமானத்தின் பெரும் தூண்கள் என்பது கவனிக்கப் படவேண்டும். அவற்றின் துணையின்றி முசோலினியால் மேலெளுந்திருப்பது மிகக் கடினமாகவே இருந்திருக்கும்.

ஆனால் முசோலினி தன்னைச்சுற்றி பலமானதொரு இராணுவ அணியைக் கட்டி வைத்திருந்தான். அதில் பணியாற்றியவர்கள் பெரும்பாலும் கீழ்த்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினரே. இத்தாலிய சமூகத்தில் சமூகப் பொருளாதார ரீதியாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருந்த பிரிவினருக்கு இதன் மூலம் மானசீக ரீதியான இலஞ்சமாக அதிகாரத்தை *(Power as a Moral Bribe)* முசோலினி வழங்கினான். எனவே அவனுடைய இந்த முன்னணி படையணிகள் *(Legionaries)* அவன் மீது கண்மூடித்தனமான பக்தியை கொண்டிருந்தவர்களாக காணப் பட்டனர். ஆகவே முசோலினியை வளர்த்துவிட்ட உள்ளூர் முதலாளித்துவ சக்திகள் நினைத்திருந்தாலும் கூட இலகுவில் அவனைத் தோற்கடிக்க முடியாதபடி அவன் பலமாயிருந்தான்.

1922ம் ஆண்டு அக்டோபரில் உரோம் நகரில் அரசுக்கெதிரான தன் எதிர்பு ஊர்வலத்தை இராணுவப் பாணியிலான அணிவகுப்பாக முசோலினி நடத்தினான். கறுப்புச் சட்டைகளை அணிந்தபடி அவனது கட்சிக் குண்டர்படை ஆக்ரோஷமாக வீதிகளில் இறங்கியது. அரசாங்கத்தை பதவியில் இருந்து தூக்கியெறியப் போவதாக சவால்விட்டான். சிவில் யுத்தம் ஒன்று வரக்கூடும் என்ற அச்சத்தில் இத்தாலிய மன்னன் பெனிற்றோ முசோலினியை பிரதமராக நியமிக்க முன்வந்தான். இத்தாலிய ஏகாதிபத்திய நலன்கள் விருப்புக்கள் என்பவற்றைப் பாதுகாக்க அப்போது பதவியில் இருந்த லிபரல் பிரதம மந்திரியான ஓர்லாண்டோவை *(Orlando)* விடவும் முசோலினி பொருத்தமானவனாக இருப்பான் என இத்தாலிய மன்னன் விக்டர் இம்மானுவேல் கருதினான்.

ஆய்வாளர்களின் கருத்துப்படி அன்று இத்தாலிய அரசு நினைத்திருந்தால் முசோலினியின் ஆதிக்கத்தை அடக்கியிருக்கலாம். ஆனால் அரசின் முதுகெலும்பற்ற தன்மையும் பயந்தாங்கொள்ளியாக இருந்த அரசனும் துணிந்து நடவடிக்கை எடுக்கப் பயந்தனர். அதாவது பாசிஸ்டுக்கள் தமது பலத்தினால் அதிகாரத்திற்கு வந்தார்கள் என்பதிலும் பார்க்க, அரசின் பலவீனமான தன்மையினால் பதவிக்கு வந்தார்கள் என்பதே உண்மை. முசோலினிக்கு சதிப்பாணியில் இரகசியமாக உள்ளிருந்தே ஒத்துழைப்பு வழங்கிய இராணுவத்தினரும், பொலீசாரும், அரசாங்கத்தின் ஒரு பிரிவினரும் பலவீனமான மன்னனும் இல்லாத பட்சத்தில் முசோலினியின் அரசியல் சூதாட்டம் உடனடியாக வெற்றி பெற்றிருக்க வாய்ப்பில்லை.

அதேவேளை அரசு மக்களிடம் தன் செல்வாக்கை இழந்திருந்ததால் இத்தாலியில் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்வதையும் நடுத்தர, மேல்தர வர்க்கங்கள் விரும்பின. அதேவேளை இடதுசாரிகள் பதவிக்கு வருவதையும் அவர்கள் விரும்பவில்லை. முசோலினியின் அரசியலானது வன்முறை கலந்ததாக இருந்தாலும் அவர்கள் கைகளுக்கு ஆட்சி மாறினால், அவர்களே அதிகாரத்தைக் கையாளுபவர் களாக மாறினால், பாசிஸ்டுகளின் வன்முறை செயற்பாடுகள் குறையும் என்னும் தர்க்கமும் கணிப்பீடுகளும் பல ஆய்வாளர்களால் அப்போது முன்வைக்கப் பட்டுள்ளன. இதே தவறான கணிப்பீடு ஜேர்மனியில் ஹிட்லர் சம்பந்தமாகவும் அவனது கட்சியான தேசிய சோசலிஸ்டுக்கள் தொடர்பாகவும் எடுக்கப் பட்டுள்ளது.

**இராணுவத்தினரை கவர்ந்து இழுப்பதற்காகவே 'இத்தாலிய வரலாற்றில் அது யுத்தம் புரிந்த காலகட்டமே அதிக புகழ் மிக்கது' என முழங்கினான். 'சாகசம் புரிபவர்களுக்கே இத்தாலி சொந்தமானது' என்னும் அவனது வீர வாக்கியங்கள் இளம் இராணுவ வீரர்களை பெரும்பாலும் கவர்ந்திழுத்தது.. கிராமங்களில் மற்றும் வறிய வர்களே அதிகமா அவனது இராணுவத்தில் சேர்ந்தனர்**



ஆனால் இத்தாலிய பாசிசமும், ஜேர்மனிய நாசிமும் ஐரோப்பிய அரசியலில் படுபயங்கரமான ஒரு போக்கினையே பிரதிநிதித்துவப் படுத்தின. *(They represented a Dangerous Mutation of the European Politics)* என்பதையும், அவை அதிகாரத்திற்கு வரும் பட்சத்தில் ஏனைய சகல அரசியல் சக்திகளையும் துடைத்தழிக்கும் தன் சுயமான குணாம்சங்களை மேலும் பலப்படுத்திக் கொள்ளவே அவ்வதிகாரத்தை அது பயன்படுத்தும் என்னுமரசியல் யதார்த்தத்தையும் எவருமே இனம்காணத் தவறிவிட்டனர். அந்த மாபெரும் அரசியல் தவறின் தாற்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கு இத்தாலியும் ஜேர்மனியும் மட்டுமல்ல முழு ஐரோப்பாவும் ஏன் முழு உலகமுமே பாரிய விலை கொடுக்க நேர்ந்தது. அதுதான் இரண்டாம் உலக மகாயுத்தம். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழும் தேசம்

## துரோகி ஒழிப்பு யுத்தத்துக்கு முகம் [illegible]



நாம் இன்று மோத வேண்டியிருப்பது எமது சமூகத்துக்குள்ளேயே இருந்து வளர்க்கப்பட்ட ஒரு மோசமான எதிரியுடனாகும். நமது எதிரியை, தமது எதிரியாகப் பார்க்கும் தேசிய சர்வதேசிய சக்திகள் வர வர குறைந்து வருகின்றன. எனவே நாங்கள் எமது அணி சேர்க்கையில் பல மாறுதல்களை செய்ய வேண்டும். குறுகியகால, நீண்ட கால நண்பர்கள் (Short term, Long term friends ), மூலோபாய, தந்திரோபாய நண்பர்கள் (Stratergical, Tactical Friends) எனத் தெளிவாக இவர்களை இனம் கண்டுகொள்ளவும் வேண்டும்.

புதிதாக வந்து எம்மோடு வலிந்து சேர முனையும் நபர்கள், குழுக்கள் பற்றி கூடிய விழிப்புடன் இருக்க வேண்டும். புலி எதிாப்பு சக்திகளால் திட்டமிட்டு எதிரியின் அணிக்குள் ஏற்கனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ள எமது தகவல் சேகரிப்புக் [illegible]ள மேலும் பலப்படுத்த வேண்டும். அவ்வாறான அதிக நபர்க[illegible] இன்னும் உருவாக்கப்பட வேண்டு[illegible]ரவே அரசாங்கத்தின் பிரதிநி[illegible] முன்நின்று, புலிகளுக்கு வெண்சாம[illegible]வர்களை தனிநபர்களாக [illegible] அவர்கள் பற்றிய தகவல்களை[illegible]சேகரித்தல், அவர்களை [illegible] என்பது ஒரே நேரத்தில் உ[illegible]லும் வெளிநாட்டிலும் செய்தல் [illegible].

இவற்றையெல்லாம் ஒரு மையப் புள்ளியை நோக்கி குவியப் படுத்துவதற்காக புலி எதிர்ப்பு சக்திகள் தமக்குள் உடனடியாக மிகக் குறைந்த வேலைத்திட்டத்தில் (Minimum working Programme) ஐ கோர்த் துக்கொள்ள வேண்டியது அவசியம். பலமானதும் பரந்ததுமான புலி எதிர்ப்பு அணி உருவாக்கப்பட வேண்டும். இதுவே இன்றைய உடனடித் தேவை.

www.tamilarangam.net



சமாதானப் பேச்சுக்கள் என ஒன்று ஆரம்பித்ததில் இருந்தே புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையிலான யுத்தம் உத்தியோக பூர்வமாக நிறுத்தபபட்டது. ஆனால் தமிழ் சமுகத்தின் மீது உத்தியோகப் பற்றற்ற வகையில் புலிகளால் ஒரு யுத்தம் பிரகடனப் படுத்தப் பட்டது. இது உத்தி யோக பூர்வமாக அறிவிக்கப்படாது ஆரம்பிக்கப்பட்ட யுத்தமாயினும் தற்போது ஓரளவிற்கு தேசிய சர்வதேசிய அங்கீகாரம் அதற்கு கிடைத்துள்ளது. இவ்யுத்தத்திற்கு 'துரோகி ஒழிப்பு யுத்தம்' என புலிகள் பெயரிட்டுள்ளனர். ஆரம்பத்தில் இலக்குகளாக காண் பிக்கப் பட்டவர்கள் இலங்கை அரச படைகளுக்கு தகவல் கொடுத் தவர்கள் அல்லது அவற்றோடு இணைந்து பணியாற்றியவர்கள் என்பதில் இருந்து தற்போது மாற்றுக் கருத்துள்ள சகலரும் துடை த்து அழிக்கப்படும் நிலைக்கு அது விஸ்த்தரிக்கப் பட்டுள்ளது.

## நோர்வேயும், இலங்கை அரசும் என்ன செய்துவிட முடியும்?

இக்கொலைகளாவன அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாக இருந்தாலும், அதை தட்டிக் கேட்கும் உரிமை நோர்வே உட்பட்ட கண்காணிப்பாளர்களுக்கு இருந்தாலும், அவர்களால் என்ன செய்து விட முடியும்? என்பது ஒரு பெரிய கேள்வியே. அவர்களைப் பொறுத்தவரை நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய நாட்டின் பாதுகாப்புப் படைகள் தமது கடைமையை சரியாக செய்கிறார்கள் இல்லை என்பதே குற்றச்சாட்டு. பேச்சு வார்த்தை மத்தியஸ்தர்கள் என்ற வகையில் ஒரு மட்டத்துக்கு மேல் அவர்கள் புலிகள் மீதோ அரசு மீதோ அழுத்தம் போட முடி யாது. அவ்வாறு செய்தால் அவர்களின் பணி தடைப்படலாம். அதா வது அவர்களின் கணிப்பீட்டின்படி தற்போது நிகழும் கொலைக-ளின் எண்ணிக்கைகளை விடவும் யுத்த சூழ்நிலை ஏற்பட்டால் உயிரழிவுகள் இதைவிட அதிகம் என்பதேயாகும். அது உண்மை யும்தான். கடந்த யுத்த நிறுத்த காலகட்டமான இரண்டரை ஆண்டில் விழுந்த கொலைகளின் எண்ணிக்கையானது 400ஐ அண்மித்திருந்தாலும், யுத்தம் நிகழ்ந்திருந்தால் அவ்வெண்ணிக்கை பல மடங்காக இருக்கும். எனவே அவர்கள் புலிகள் மீது அதிகம் அழுத்தம் போட்டு தமது பணியை கெடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை அது ஒருவகை பிளெக்மெயில் பண்ணப்பட்ட நிலையில் இருக்கிறது. ஒருபுறம் தான் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க விரும்பும் அரசு என்று உலகிற்குக் காண்பித்து தனக்கான நிதி உதவிகளைப் பெறவேண்டும். அல்லாவிட்டால் பெரும்பான்மை சிங்கள் மக்கள் கொடிபிடிக்க ஆரம்பித்து விடுவார்கள். மறுபக்கம் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய வகையில் புலிகள் மேல் கடுமையாக நடந்து கொண்டால் பிரதான எதிர்க்கட்சியும் ஏனைய அரச எதிர்ப்பு சக்திகளும் தென்னிலங்கையில் உள்ள யூ. என். பி. சார்பு சமாதான என். ஜீ. ஓ.க்களும் "ஓ..! நாங்கள் அப்போதே சொன்னோம் சந்திரிகா ஆட்சிக்கு வந்தால் யுத்தம் வரும் என்று, மீன்டும் சமாதானப் புறா ரணிலை ஆட்சியல் ஏற்றுங்கள்" என குரல் கொடுக்க ஆரம்பிப்பர். அவ்வாறு நடந்தால் அது அது புலி எதிர்ப்பு அணியை இன்னும் சிக்கலுக்குள்ளாக்கும். எனவே அரசாங்கம் புலிகள் மீது கடும் அழுத்தம் போட்டு இக்கொலைகளை நிறுத்த வேண்டும் என நாம் கேட்கவும் முடியாது. அரசாங்கம் அழுத்தமிட்டு இக் கொலைகள் நிற்கப் போவதுமில்லை. அடுத்தது புலி எதிர்ப்பு அமைப்புக்களுக காக அரசாங்கம் தான் யுத்தத்தில் இறங்காது. ஆனால் ஒரு நாட்டில் கொலைகள் தலை விரித்தாடினால் அதைக் கட்டுப்படுத்த வேண்டியதும், பாதுகாப்பற்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும் ஒரு பொறுப்புள்ள அரசின் கடமை என்பது உண்மை.



ஆனால் இந்த அரசு அந்தப் பொறுப்பை உணர்வதற்கே சக்தியற்ற அரசாக உள்ளது. தமிழன் தமிழனைக் கொல்வதை அது சட்ட ஒழுங்குப் பிரைச்சி னையாகவே பார்க்க வில்லை போலும். அப்படியாயின் இதற்கு எப்படி நாம் முகம் கொடுப்பது?

## எமது தலையாய பணி என்ன?



புலி எதிர்ப்பு சக்திகளை பாதுகாப்பதே புலி எதிர்ப்பு அணிகளின் **(புஎஅ)** இன்றைய பிரதான அரசியல் பணி. புலி எதிர்ப்பு அணிகள் **(புஎஅ)** தம் மைப் பாது காப்பது இன்னொ ருவரின் கடமை என்று நினைக் கும்வரை அது தொடர்ந்து

***புலிகளின் அரசியலை எதிர்க்காமல், விமர்சிக்காமல் தமிழ் சமூகத்திற்குள் அரசியல் செய்ய முடியும் என ஒரு [illegible] இருக்குமென்றால் அது மிகப்பெரிய விடயமே. அப்படியொன்றில்லை. எனவே புலிகளோடு அரசியல் சமரசத்திற்குப் போக முடியாதவர்கள், புலிகளின் அரசியலை மறுப்பவர்கள் அவர்களுக்கு எதிராக செயற்பட்டே ஆக வேண்டும். அவர்கள் இயங்கினாலும், சாவு இயங்காவிட்டாலும் சாவு. எப்படி இயங்குவது என்பதே கேள்வி.***



இழப்புக்களை சந்தித்த வண் ணமே இருக்கும். இன்று **புஎஅ** களின் பிரதான அரசியல் பணி என்ன? தமிழ் மக்களுக்கு சேவை செய்வதா? தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுவதா? தமிழ் சமூகத்தில புணர்நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதா? தமிழ் சமூகத்திற்கு மனித உரிமை போதிப்பதா? எதுவுமே இல்லை. ஏனெனில் இவை எதையுமே **புஎஅ** கள் செய்ய முடியாதபடி தடுக்கப் பட்டிருக்கிறோம். இன்று **புஎஅ** கள் ஒரு ஒட்டு மொத்த யுத்த த்திற்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் அது திறந்த யுத்தமாக இருக்க முடியாது. ஒருவித தற்காப்பு யுத்தமாகும்.





புலிகளுடன் யுத்தத்திற்குப் போவது நம்மை நாமே அழிக்கும் செயல் என நினைத்தால், நாம் அவர்களுடன சமாதானமாகப் போவதே சரி. புலிகளோடு சமாதான-மாகி போனவர்கள் இப்போது பாதுகாப்பாவே இருக்கிறார்கள். அவ்வாறு செய்யாதவர்கள் புலிகளுக்கு எதிராக செயற்படா விட்டாலும் எதிர்காலத்தில் தமக் கெதிராக செயற்படலாம் எனக் கருதப்பட்டும் அவர்கள் தாக்கப் படுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அதுவே புலிகளின் கோட்பாடு. புலிகளின் அரசியலை நேரடியாக எதிர்க்காமல், விமர்சிக்காமல் தமிழ் சமூகத்திற்குள் அரசியல் செய்ய முடியும் என ஒரு வழிமுறை இருக்குமென்றால் அது மிகபெரிய் விடயமே. அப்படியொன்றில்லை. எனவே புலிகளோடு அரசியல் சமரசத்திற்குப் போக முடியாதவர்கள், புலிகளின் அரசியலை மறுப்பவர்கள் அவர்களுக்கு எதிராக செயற்பட்டேயாக வேண்டும். ஏனெனில் அவர்கள் இயங்கினாலும் சாவு இயங்காவிட்டாலும் சாவு. ஏன் இயங்கிச் சாகலாமே? ஆனால்..! எப்படி இயங்குவது என்பதே கேள்வி.

'இன்றைய யுத்தமானது சிங்கள இராணுவத்துக்கோ சிங்கள அரசுக்கோ எதிரான தல்ல இது தமிழ் துரோகிகளுக்கெதிரானது என புலிகள் தமிழ் சமூகத்தில் பிரகடனப் படுத்தியுள்ளனர். புலி சார்பு தமிழ் ஊடகங்களைப் பார்த்தால் அதைப் புரிந்து கொள்ளலாம். இப்போதைக்கு அரசாங்கத்துடன் மோதுவது தமக்கு பல வழிகளில் நட்டத்தை ஏற்படுத்த வல்லது என்பதை புலிகள் நன்கறிவர். எனவே அவ்வப்போது அரசுக்கெதிராக வாய்ச்சவடால் அடிப்பார்கள் அவ்வளவுதான். கிழக்கு தம் கையில் இல்லாது யுத்தம் என்பது புலிகளுக்கு உடனடிச் சாத்திய மில்லை. யுத்தத்தை தாமே ஆரம்பித்தால் ஏற்படும் வெளிநாட்டு அழுத்தங்களை முகம் கொடுப்பது உடனடியாகச் சிரமம், எனவேதான் தமது இயக்கத்தை மூர்க்கமாக வைத்திருக்கவும் நீண்ட கால அடிப்படையில் தமக்கெதிரான தமிழ் சக்திகளை துடைத்தழிப்பது என்னும் இவ்யுத்தம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இது நாம் எதிர் பார்த்திருக்க வேண்டியது. புலிகள் இப்படிக் கொல்ல மாட்டார்கள் என நாம் நினைத்திருந்தால் அது எமது அரசியல் கணிப்பீடு பற்றிய தவறு.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன? முதலாவது புலி எதிர்ப்பு சக்திகள் தமது எஞ்சியிருக்கும் மனித வளங்களைப் பாதுகாக்க வேண்டும். இப்போது போகின்ற வீதத்தில் வளங்கள் அழிக்கப்பட்டால் இனிப்புதிய வளங்கைளைச் சேகரிப்பது என்பது உடனடியாக இயலாத காரியம். இவ்விடயத்தில் மெத்தனமாக இருப்பது மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே இந்நட வடிக்கைக்கான உதவிகளை தற்போது ஓரளவு எமக்கு சாதகமானவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான வழி முறைகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

புலி எதிர்ப்பு அணிகள் (புஎஅ) தமது முறைசார் அரசியலுக்கு *(Formal Politics)* ஒரு தறகாலிக இடைவேளை விடத் தயாராக வேண்டும். அதாவது தமது முறைசார் அரசியல் எல்லையை சுருக்கிக் கொள்ளுதல் அவசியம். வடகிழக்கு மாகாணங்களில் தற்போது அர்த்தமில்லாது பலி கொடுக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். இதை உடனடியாகச் செய்ய முடியாததற்கு நாம் பல காரணங்களை முன்வைக்கலாம். ஆனால் தம்மோடு இருக்கும் நம்பிக்கையான அாப்பணிப்பான மனித வளத்தை வீணாக இழப்பது போர்த் தந்திரமாகாது.

எதிரியிடம் இருந்து கற்றுக் கொள்ளத் தெரியாதவன் ஒருகாலமும் எதிரியை வீழ்த்த முடியாது. 1995ம் ஆண்டிற்கு முன்னர் நாம் யாழ்ப்பானத்திற்குள் போவோம் அங்கு தேர்தலில் நிற்போம் என எவருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது நிகழ்ந்தது. அதேபோல் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் தாம் ஒட்டு மொத்தமாக விட்டுவிட்டு ஓட வேண்டிவரும் என புலிகளும் நினைத்திருக்கவில்லை. அனால் அது நடந்தது. யாழ். மக்கள் தம்மை இப்படி கைவிடுவார்கள் என்றும் புலிகள் நினைத்திருக்கவில்லை. புலிகள் முற்றாக தமது சகல நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்தி விட்டு யாழ்ப்பாணத்தை விட்டு பின்வாங்கினார்கள். மீண்டும் 7 வருடங்களின் பின் அவர்கள் உள்ளே வந்துள்ளனர். அதற்கு அவர்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. தாமே துரோகிகள் எனப் பட்டம் சூட்டியவர்களை தமது பிரதிநிதகளாக எற்றுக் கொள்ள வேண்டி வந்தது. தாம் சமாதானப் புறாக்கள் எனக்காட்ட யுத்த நிறுத்தத்திற்கு உடன் பட வேண்டிவந்தது. சமாதானத்திற்குப் போய் அதை இடை நடுவில் முறிக்க முடியாமல் திண்டாடியது. அதன் பிரதிபலனாக கிழக்குப் பிரைச்சினையை சரியாக கையாள முடியாமல் அது பிளவுபட்டுப் பொனதுடன் இன்று பெரும் தலையிடியாக அதற்கு மாறியுள்ளது. இவற்றை நாமும் கணக்கிலெடுத்துப் பார்க்க வேண்டும்.

வடக்குக் கிழக்கில் இருந்து இப்போது நாம் வாபஸ் பெற்றால் இனிக் எக்காலத்துக்கும் நாம் போக முடியாது என்பதில் உண்மையில்லை. முதலாவது சுற்றில் நாம் தோற்றுக் கொண்டிருக்கிறோம். இதை ஏற்றுக் கொள்வோம். எனவே இதனை படு தொல்வி நிலைக்கு எடுத்துச் செல்லாது இயங்கு தளத்தையும், இயங்கு களங்களையும், இயங்கு முறைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். புலிகளால் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியாத கையாள முடியாத இயங்கு தளங்கள் இன்னமும் உள்ளன. அவற்றை நாம் எமதாக்கிக் கொள்வோம். இதில் வெட்கப் பட ஏதும் இல்லை. சில விடயங்களை நாம் இழப்பதற்கு தயாராக

**புலி எதிர்ப்பு அணிகள் (புஎஅ) தமது முறைசார் அரசியலுக்கு (Formal Politics) ஒரு தறகாலிக இடைவேளை விடத் தயாராக வேண்டும். அதாவது தமது முறைசார் அரசியல் எல்லையை சுருக்கிக் கொள்ளுதல் அவசியம். வடகிழக்கு மாகாணங்களில் தற்போது அர்த்தமில்லாது பலி கொடுக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். இதை உடனடியாகச் செய்ய முடியாததற்கு நாம் பல காரணங்களை முன்வைக்கலாம். ஆனால் தம்மோடு இருக்கும் நம்பிக்கையான அாப்பணிப்பான மனித வளத்தை வீணாக இழப்பது போர்த் தந்திரமாகாது.**

வேண்டும். அவற்றை நாம் பாதுகாப்பதில் எவ்வித பயனுமில்லை எமது கோட்டையின் கற்கள் ஒவ்வொன்றாக கழட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல ரீதியாக பெறுமதியான உயிர்கள் பறிக்கப்பட்டபின் இழக்க எதுவும் இருக்காது. சில விடயங்களையும் சில நபர்களையும் உயிருடன் வைத்திருப்பதே தற்போது எதிரிக்குத் தலையிடிதான். எனவே அதற்காக சிலவற்றை நாம் தியாகம் செய்யத்தான் வேண்டும்.

இப்போது கொழும்பையே எமக்கு அதிக பாதகமான களமாக எதிரி மாற்றியிருப்பதால் இங்கு எதிரி முன்பிருந்ததைவிட பலமாகிவிட்டான் என்பது தெரிகிறது. அப்படியாயின் மீண்டும் கொழும்பு எதிரிக்கு பாதுகாப்பற்ற பிரதேசமாக மாற்றப்பட வேண்டும் என்கின்ற வகையில் சிந்திக்க வேண்டும். அப்படியில்லாது எமக்குப் கொழும்பைப் பாதுகாப்பான இடமாக மாற்றிக்கொள்ள நினைப்பதன் மூலம், சிந்திப்பதன் முலம் நாம் எதிரியை நிம்மதியாக உறங்க விடுகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதாரணமாக மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொள்ளுவோம். இன்று கருணாவின் இருப்பு தற்காலிகமாகவேனும் ஏதிரிக்கு தலையிடியே. கிழக்கில் எதிரி நிம்மதியாக உறங்க முடியாது. இந்த நிலைமையை நாம் எப்படியாவது எதிரிக்கு கொழும்பிலும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு புலி எதிர்ப்பான சகல சக்திகளின் ஒத்துழைப்பையும் பெறுவது அவசியம். அதற்குத் தயாராக இருக்கும் சக்திகளை ஓரிடத்திற்கு குவியப்படுத்துவதே தற்போதைய உடனடித் தேவை.

புலிகளுக்கு ஆதரவான கலங்கள் (*Cells*) கொழும்பில் கண்டறியப்பட்டு சிதைக்கப்பட வேண்டும். புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவது அச்சம் நிறைந்ததாக்கப்பட வேண்டும். சாதாரன பொதுமக்கள் இதிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும். கடுமையாக இருப்பினும் சரியான இலக்குகள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். தாக்கப்பட வேண்டும். அதன் தாக்கம் எதிரிக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கு தெரியவேண்டும். எதிரி இன்று



நோர்வே தூதரகம் முன்னால்...

எமக்கெதிராகப் பாவிக்கும் ஆயுதமே அவர்கள் மேல் திருப்பி விடப்பட வேண்டும். பொய்மையான இலக்குகள் (*Dummy Targetes*) திட்டமிட்டு உருவாக்கப்பட்டு எதிரியை அதை நோக்கிக் கவர்ந்து, அழிக்க வேண்டும். எமது செயற்பாடுகள் எதிரிக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் எடுக்கத் தேவையில்லை. எவ்வளவு தெரிந்தாலும் அதை எதிரியால் நிறுத்த முடியாது என்னும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். எதிரி பலமானவனாக இருக்கிறான் என அஞ்சுவதில் அர்த்தமில்லை. எதிரியை பிரதிச் செயற்பாட்டு நிலைக்குத் (*Reactive*) தள்ள வேண்டும். இன்று எதிரி எம்மை அதை நோக்கயே தள்ளி விட்டுள்ளான். எமது செயற்பாடுகள் தாக்கமானதாக இருந்தால் மட்டுமே உதவிகள் எம்மை நோக்கிவரும். சிதறிக்கிடக்கும் சக்திகள் எம்மை நோக்கிவரும். இல்லாதவிடத்து விரக்தியும் தோல்வியும் மட்டுமே மிஞ்சும்.

எமது வெளிப்படையான அரசியல் வேலைகளில் (*Open Political Work*) பெரும்பாலானவற்றை எதிரிக்கு பாதகமான களங்களுக்கு மாற்ற வேண்டும். ஏற்கனவே முகம்காட்டி வேலை செய்தவர்கள் களம் மாற்றப்பட வேண்டும். புதிய முகங்களே களத்தில் இறக்கப்பட வேண்டும். எதிரி பலமாகவும், பரவலாகவும் இருப்பதால் எதிரிக்கு எமது வேலைகள் தெரிய வரும் என்பதை கணக்கில் எடுத்தே செயற்பட வேண்டும். எதிரி நேரடியாக ஆயுத ரீதியில், பிரச்சார ரீதியில் மோத முடியாத களங்களில் நாம் ஆக்ரோஷமாக பரவலாக செயற்பட வேண்டும். எதிரியை அம்பலப் படுத்துகின்ற பிரச்சாரத்தை இரு மடங்காக்க வேண்டும். எதிரியின் பொய்யான நற்பெயருக்கு பங்கம் விளைவித்தல் (*Discrediting*), அம்பலப் படுத்துதல் என்பவை தொடர்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று விடும் சிறு தவறும் பெரும் இழப்புகளைத் தரும் என்பதைக் கவனிக்க வேண்டும். *



பாசிச வேள்விக்கு
பலியான இன்னொரு மனிதன்
தோழர் சிங்கம்!........

பச்சை இரத்தம் பருகி
பாசிச வேள்விக்கு
மனிதப்படையல் தேடும்
யம தூதர்களே!.....

தீர்ந்ததா உங்கள்
நரமாமிச வெறி.........

இரு!....நட!....படு!....ஓடு!....
இருட்டில் ஒடுங்கி வாய் மூடு!
இட்ட சட்டம் இது!...
இது தவிர எதுவும் தடை!...
இது புலி எழுதும் புதிய தலைவிதி!

தலை விதி தகர்த்து
புது விதி படைக்க
எழுந்த எம் தேசத்துப்புதல்வர்கள்
பாசிச வேள்விக்கு பலி!....

ஓ!....யம தூதர்களே!...

செட்டியும் மைக்கலும் பற்குணமும்
ஒபரோய் தேவனும் ரெலி ஜெகனும்
சுந்தரமும் மனோ மாஸ்டரும்
உங்கள் கொடுங்கருவிக்கு
சுடு ரத்தம் பாய்ச்சியும்
சுதந்திரம் கிடைத்தா?.........

தோழர்கள் பத்மநாபா... சிறீ சபாரத்தினம்...
தலைவர் அமிர்தலிங்கம்...
தலைகளை விழுத்தியும்
தமிழீழம் கிடைத்ததா?......

சின்னபாலாவும் கமலனும்..
பவானும் அருள்தாசனும்
சிந்திய ரத்தம் போதாதென்று

இன்று உங்கள்
பாசிச வேள்விக்கு
தோழர் சிங்கம் படையல்!....
படுகொலைகள் மட்டும் தான்
உங்கள் வெறிக்கு படையல் என்றால்...

கிட்லரும் முசோலினியும்
பொல்போட்டும் புதைந்த இடம்
உங்களுக்காகவும் காத்திருக்கிறது!....

அதர்மம் கோலோச்சினால்
தர்மம் இறுதியில் கொடியிறக்கும்!
இது நிசம்!...
இது வரலாறு!....

நன்றி: epdpnews.com



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராஜினியில் அப்படியென்ன அச்சப்பட இருந்தது அவர்களுக்கு.? வேறொன்றுமில்லை. அவர் சுதந்திரமாக சிந்தித்ததுதான். தான் சரி-யென்று உணர்ந்ததை வெளிப்படுத்தியே தீரும் உணர்வும் உறுதியுமதான். ஏற்கனவே தானும் தனது சகோதரியும் (நிர்மாலா) ஏன் குடும்பமுமே ஒரு மோசமான அரசியல் சக்தி வளர்வதற்கு ஒத்தாசையாய் இருந்து விட்டோமே என்பது ஒரு கொடும் சுமையாக மனதில் அழுத்தியதை அவர் உணாந்தார் எனவேதான் அதற்கெதிராக பணியாற்றுவதை தன் வாழ்க்கையில் முக்கிய பணியாக தேர்ந்தெடுத்தார்.



ராஜினிக்குள்ளே ஒரு உயிரோட்டமான செயல் வீராங்கனை இருந்தார். அதுவே அவரையும் அவரைச் சுற்றி இருந்தவர்களையும் விடாமல் இயக்கியது. மக்கள் ஒன்றினைந்து செயல்பட்டாலே சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என நம்பினார். அதனால் சிறிய சிறிய அணி சேர்க்கைகளைக்கூட மிக நம்பிக் கையோடு பார்த்தார். அத்தோடு தன்னை இணைத்துக் கொள்ள முனைந்தார். ஒத்தாசையும் ஆதரவும் வழங் கினார். அவர் எப்போதும் நம்பிக்கையீனத்தை விதைத் ததில்லை. தான் நம்புவதையே, தான் செய்வதையே மற்றவர்களையும் நம்பும்படி, செய்யும்படி தூண்டினார்

அவர் இருந்த காலத்திலும் சரி இப்போதும் சரி அவரைச் சுற்றியிருந்த பலருக்குள்ளே இந்த நம்பிக்கையும், செயல் நெருப்பும் இருக்கவில்லை. அவர் தனக்கும் பிறருக்கும் உண்மையாகவே இருந்தார். இதைத்தான் *'be true to your spirit'* என அவர் சொல்வதுண்டு. தம் கடைமை மறந்து, சொந்த தொழில், சொந்த வாழ்க்கை என்பவற்றிலும் கூட நேர்மையற்ற முதுபெலும்பற்ற கல்விமான்களை நிறையவே கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஆன்மாவை அடிக்கடி நெருடும் முள்ளாக இருக்க அவர் முனைந்தார்.

அப்போதே நேரடியாகவும் மறைமுகமாகவும் பாசிசத்தின் தாசர்களாக மாறி தம் சமூக இருப்புக்களை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்த இக்கல்விச் சமூகம் *'புலிகள் ராஜினியைக் கொல்லலாம்'* என்னும் கருத்தை தமக்கேயுரிய கழுத்தறுப்புப் பாணியில் பரப்பிக் கொண்டிருந்தது. அவருடைய அன்புக்குரிய மாணவர்க ளாலேயே அவர் உளவு பார்க்கப்பட்டார். புலிகளுடன நேரடியாகவும் மறைமுகாகவும் இயங்கிய முல்லைத்தீவு தர்மேந்திரா, வடமராட்சியைச் சேர்ந்த சூரியகுமா, கிரிதரன் போன்ற மாணவர்களே இவ் உளவுப் பணி யில் ஈடுபட்டிருந்தவர்கள். இம்மாணவர்கள் தனது நடவடிக்கைளை கண்காணிக்கிறார்கள் என பலமுறை தெரிந்தும்கூட, இவர்களுடன் புலிகளின் தவறான அர சியல் தொடர்பாக முடிந்த பொழுதெல்லாம் கதைத்தார். இவரின இந்த நேர்மையும் துணிவும்தான் புலி ஆதரவாளர்களை எப்போதும் நிலைகுலைய வைத்தது.

யாழ். பல்கலைக்கழகப் பகுதியை ஒருமுறை இந்திய இராணுவம் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது "வீதிக்குச் சென்றால் இராணுவத்திடம் பிடிபட்டு விடுவான் என்பதற்காக, தன்னையே உளவுபார்த்துக் கொண் டிருந்த முல்லைத்தீவைச் சேர்ந்த தர்மேந்திராவை தன் வீட்டிற்குள் மறைத்து வைத்துப் பாதுகாத்தார். எவருடைய உயிரும் பிரிவதை அவர் விரும்பியதில்லை. அது தன் பரம எதிரியாக இருந்தால் கூட. ஆனால் தன் உயிர் பற்றி ஒரு மெத்தனப் போக்கு அவரிடம் இருந்தது.

தனது மரணத்தின் மூலம் அவர் சாதித்தது ஒன்றுமில்லை. அவரது வாழ்க்கையே சாதனைகளைச் செய்தது. அவரின் மரணம் பலரிடம் ஏக்கத்தையும் அச்சத்தையுமே விட்டுச் சென்றது. தன் பணி தொடரும் என்றும், சமூகத்தின் முன்நோக்கிய சுழற்சி யாராலும் நிறுத்தப்பட முடியாதது என்றும் அவர் உறுதியாக நம்பியவைகளை செய்வதற்காகவே அவரது மரணம் மறக்கப்படக் கூடாதது. அது எம் மனங்களை நெருடிக் கொண்டே இருக்க வேண்டும். *

## உலகமயமாதல் (Globalization) தொடர்ச்சி.......

*nike சப்பாத்துக் கம்பனியை எடுத்துக் கொள்வோம். அவர்கள் பல மூன்றாம் உலகநாடுகளில் தமது சப்பாத்துக்களை உற்பத்தி செய்கிறார்கள். என்றாலும் இந்த உற்பத்தி பெரிய தொழிற்சாலைத் தளங்களில் நடைபெறவில்லை. மாறாக தொழிலாழர்களின் வீட்டுத் திண்ணைகளிலும் சமையல் அறைகளிலும் நடைபெறுகின்றன. ஏன் என்றால் உப ஒப்பந்தக்காரர்கள் இச் சப்பாத்து தைக்கும் வேலைகளை Piece Work இற்கு (அதாவது உற்பத்தி செயயும் ஒவ்வொரு சப்பாத்துக்கும் 50சதம் என்று உதாரணமாக எடுத்துக் கொள்வோம்) தனி நபர்களிடம் கொடுக்கிறார்கள். இது தொழிலாளர், வர்க்கத்தை மிக பலவீனப்படுத்தி வருகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் தனிநபராகப் பேரம்பேசி வேலையில் ஈடுபடுத்தப்படுவதால் இம்முறையின் கீழ் தொழிற்சங்கங்களுக்கு இடமில்லை. இதனால் முதலாளித்தவ வர்க்கம் தொழிலாளர்களை மோசமாக சுரண்டக்கூடியதாக உள்ளது. மூன்றாம் உலகநாடுகளில் நிலவும் வறுமை, வேலையின்மை ஆகிய நிலமைகளை முதலாளித்துவ வர்க்கம் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி தொழிலாளர்களை இந்த கீழான நிலைக்குத் தள்ளி உள்ளது. நான் அந்த குறைந்த கூலிக்கு வேலை செய்ய மறுத்தால் இதே வேலையைச் செய்ய 100 பேர் தயாராக இருப்பார்கள் என்ற நிலமை மூலதனத்திற்குச் சாதகமாகவும் உழைப்புக்கு எதிராகவும் உள்ளது.*

*எனவே அந்நியமாக்கப்பட்ட, தனிமையாக்கப்பட்ட (individualized) தொழிலாளர்கள், மிகக்குறைந்த கூலி, தொழிற்சங்க உரிமைகள் இல்லாமை போன்ற நிலைமைகளுக்கு உள்ளாக்ககப்பட்டிருப்பது ஆகியன உலகமயமாதலின் கீழ் தொழிலாளர் வர்க்கத்தை இன்று மிகவும் பலவீனமான நிலைக்குத் தள்ளியுள்ளது.*

*(அடுத்த பகுதி மறு இதழில்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அவரின் குடும்பத்தாருக்கு அவரைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது. நூல்கள், பத்திரிகைகள் வாசிப்பதற்கான செல்வியின் வேண்டுகோளும் மறுக்கப்பட்டது. அவர் எழுதுவதற்கான பேப்பர்த் துண்டுகளோ பேனாக்களோ அவருக்குக் கிடைக்காத வண்ணம் புலிப் பாசிஸ்டுகள் மிக அவதானமாக இருந்தார்கள்.



செல்வி வவுனியா சேமமடுவில் பிறந்தவர். இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் ஊக்கமிகு மாணவியாக இருந்தார். குறிப்பாக அவர் எழுதிய துணிகரமான கவிதைகளினால் குறுகிய காலத்தில் மதிப்புக்குரிய கவிஞரானார். செல்வி ஒரு செயல் வீராங்கனை. எழுதுவதோடு மட்டும் நிற்கவில்லை. தன்னை ஒரு அரசியல் இயக்கத்தில் இணைத்துச் செயல்பட்டார். தன்னோடு அரசியல் செய்த அர்ப்பணிப்பான, பல சவால்களுக்கு முகம்கொடுத்த தோழனையே நேசித்தார். நெகிழ்சியும் இறுக்கமுமே செல்வியின் சிறப்பு. அதைத்தான் புலிகளால் தாங்க முடியவில்லை. வளைக்க முடியவில்லை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை சுயேச்சையாக இயங்கு வதற்கு ஊக்குவித்தார். புலிகள் இயக்கத்தை கடுமையாக விமர்சித்து வந்த செல்வநிதி. அத்தகைய நாடகம் ஒன்றை அரங்கேற்ற ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது யாழ் பல்கலைக்கழக விடுதியிலிருந்து 1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடத்தப்பட்டார். இவரைக் கொண்டு செல்ல புலி உளவுப் பிரிவினர் வந்தபோது உண்மையான அரசியல் வீராங்கனையாக எவ்வித அச்சமோ சலனமோ இன்றி தன் காதுகளில் இருந்த தோடுகள் கையில் இருந்த கடிகாரம் என்பவற்றையெல்லாம் கழட்டி வைத்துவிட்டு நிதானமாக நடந்து சென்றார். அவர் மரணிக்கும் வரை புலிகளால் அவர் வாயிலிருந்து எந்த உண்மையையும் வரவழைக்க முடியவில்லை. தோற்றுப் போனார்கள் கோழைகள்.

1991ம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் 'சந்தனக் காடுகள்' என்னும் புலிகளின் நாடகம் மேடை ஏற்றப்பட்டது. நாடகத்தை நெறியாள்கை செய்தவர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சிதம்பரநாதன். செல்விக்கு நன்கு அறிமுகமானவர். நாடகத்தைப் பார்க்க செல்வியும் அவரின் நண்பர்களும் சென்றிருந்தனர். நாடகம் பார்த்து முடிந்ததன் பின் வெளியே வந்து நாடகத்தைப் பற்றிய தன் கடுமையான விமர்சனத்தை பலருக்கும் முன்னிலையில் கடுமையாக சிதம்பரி என்கின்ற சிதம்பரநாதனுக்கு செல்வி முன்வைத்தார். அப்போது அவருக்குப் பக்கத்தில் நின்று அதேபோல் விமர்சித்தவர் தில்லை என்று அழைக்கப்படும் தில்லைநாதன் என்னும் ஆசிரியர். அப்போது தான் செல்வி நேரடியாக சிதம்பரநாதனிடம் "இனிமேல் உங்கள் அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிராக நாங்கள் பகிரங்கமாக இயங்க வேண்டிவரும். நாங்கள் வெகு விரைவில் மேடையேற்றும் நாடகம் உங்களுக்கு பதில் தரும்" எனக்கூறினார்.

ஏற்கனவே புலிகள் இயக்கத்தோடு இரகசியமாகவும், நெருக்கமாகவும் தொடர்பு வைத்துக் கொண்டு வெளியே தன் பழைய நண்பர்களுக்கு வேறுமுகத்தைக் காட்டித் திரிந்த சிதம்பரநாதன், தான் அம்பலப்பட்டுப் போனதையிட்டு உசாரடைந்தார். தனது பழைய நண்பர்கள் களத்திலிருந்து அகற்றப்பட்டால் மட்டுமே, தன்னால் வெளிப்படையாக புலிகளுக்காக இயங்க முடியும் என்னும் சமிக்ஞையை அவர் புலிகளுக்கு அறிவித்தார். அதன்படி புலிகள் சிதம்பரநாதனுக்கு பாதையை சுத்தப்படுத்திக் கொடுக்கத் தீர்மானித்தனர்.


செல்வி உட்பட அவரோடு அப்போது இணைந்து நாடகம் மேடையேற்ற இருந்த முக்கிய நபர்களான தில்லை, மனோகரன் என்னும் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஆகியோரின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டன. அவர்களின் நடமாட்டங்களைக் கவனிப்பதற்கு புலிகள் சிதம்பரநாதனையே பாவித்தனர். அதனாலேயே செல்வி மற்றும் அவரின் நண்பர்கள் எச்சரிக்கை அடையவில்லை. சகல தகவல்களும் புலிகளுக்கு சிதம்பரநாதனால் கொடுக்கப்பட்டன. அதன்படி இம்மூவரும் ஒரே தினம், ஒரே இரவில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். தன்மீது சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக சிதம்பரநாதன் செல்வி கடத்தப்படுவதற்கு முதல் இரு தினங்களிலும் பல்கலைக்கழக வட்டாரங்களில் செல்வி பற்றி கரிசனையாக பேசுவதுபோல் நடித்தார். கடத்தப்பட்ட மறுதினம் அதிகாலையிலேயே எவருக்கும் விடயம் தெரிவதற்கு முன்னர் சிதம்பரநாதன் ஓடியோடி செல்வியின் நண்பர்களுக்கு தானே போய், அவர் கடத்தப்பட்ட விடயத்தை அறிவித்தார். தனது நடவடிக்கை மூலமே சிதம்பரநாதன் அம்பலப்பட்டார்.

சிதம்பரநாதனின் விருப்பத்துக்காக செய்யப்பட்ட இந்தக் கொலைகளுக்காகவும் இதற்கு சகல ஒத்தாசை வழங்கிய தற்காகவும் புலிகள் அவருக்கு வழங்கிய சன்மானம், அவரது மனைவி பத்மினிக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி. இந்தக் கொலைகள் மறக்கப்பட்டு விட்டதாக சிதம்பரநாதன் உட்பட பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவரும் அவரது கும்பலும் புரிந்து கொள்ள வேண்டியது, இவை மிகவும் கனதியான மரணங்கள். அவ்வளவு இலேசகா அவற்றின் அழுத்தத்தில் இருந்து தப்ப முடியாது. அம்மரணங்கள் உங்களை நிழல் போல் துரத்திவரும். அதை விரைவில் உணர்வீர்கள். *

**தினம் தவறாது பார்க்க வேண்டிய இணையத் தளங்கள்**

thenee.com
pookolam.com
uthr.org
epdpnews.com
uthyam.net
tamilnewsweb.com
neruppu.com
lines-magazine.org
tbcuk.com
plote.org
tirradio.com

**சஞ்சிகைக்கான உங்கள் ஆதரவு**



**கடினமான பாதையைத் தேர்ந்தெடுக்கும் போது மற்றவர்கள் ஆவலாய்க் கூடவருவார்கள் என அதிகம் எதிர்பார்ப்பது தவறு. இருந்தாலும் ஒரு நம்பிக்கையில் இதைச் சொல்லி வைக்கிறோம். பாசிசப் புலிகளால் தடுத்து நிறுத்த முடியாத பல விடயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றாக இந்தச் சஞ்சிகையின் வருகையும் அமையட்டும். அதை உறுதிப்படுத்த உங்கள் பங்களிப்பை முடிந்தால் வழங்குங்கள். மிகுதி உங்கள் கரங்களில்.**

www.tamilarangam.net

# அரசியல் இவர்களுக்கு பொழுதுபோக்காக இருக்கவில்லை

சின்ன பாலா

றொபேட்



பாலநடராஜ ஐயர்

அஞ்சலிகள்



த.சுபத்திரன்

உண்மையான செயல் வீரர்கள் இவர்கள்.
என்றும் எம்மால் மறக்கப்படக் கூடாதவர்கள்.
மறக்கப்பட முடியாதவர்கள். அரசியல் என்பதை பொழுது போக்காகச்
செய்யாமல் தம் வாழ்க்கைப் பணியாக, கடமையாக கருதியவர்கள்.
அஞ்சாமை, நட்பு, தோழமை, உழைப்பு, உறுதி, அசையாத தன்நம்பிக்கை என
மனித சமுகத்திற்கான பல வீரக் குணாம்சங்களைக் கொண்டிருந்தவர்கள்.
செய்வோம்..! எம் செயல் பேசட்டும், அது பேசியே தீரும்..! என
விடாப்பிடியாக நம்பியவர்கள். இவர்களின் செயலுக்கு பேசும்
திறன் இருந்தது. அதற்காகவே இவர்கள் கொல்லப்பட்டார்கள்.
இம் மரணங்களின் எதிரொலி தமிழ் சமுகத்தின் நெஞ்சங்களை
உலுக்கி விட்டிருக்கும் என ஏமாறாதிருப்போம். அது மரணத்திற்கு முந்திய 'கோமா'
நிலையில் நீண்டகாலமாக வைக்கப்பட்டிருக்கிறது.



அடிமைப்பட மறுக்கும் அகங்காரமும், மானிடம் கண்மூட மறுக்கும்
வீரியமும் நிறைந்த வீர நெஞ்சங்களை மட்டுமே
அது உலுக்கியிருக்கும். இக்கொலைகளின் விலை பெரிது.
அக்கணக்கு தீர்க்கப்பட வேண்டும்.
இக்கொலைகளில் சிந்திய குருதியில் தம் கரங்களைத்
தோய்த்து தம் கோழைத் தலைவனுக்கு சாமரம் வீசும்
நபுன்சகர்கள் இருவரை இனம் காணுங்கள்...!
கணக்கு கேளுங்கள்..!! கணக்கு தீருங்கள்...!!!
ஒன்று பாலகுமார் மற்றது சுரேஷ் பிரேமச்சந்திரன்.